வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 கார்த்திகை திங்கள் 24-ம் நாள் (9—12—1962) ஞாயிற்றுக்கிழமை றஜப் 11 | இதழ் 28

நீர் கொழும்பு

# தமிழர்களின் கிளர்ச்சி வெற்றி

ஆசிரியர் இடமாற்றங்கள்

## நிறுத்தப்பட்டதற்கு நான் காரணமல்ல

### தப்பான வதந்தி பற்றி எஸ். ஜே. வி.

1—1—63ல் நிகழவிருந்த தமிழாசிரியர்களின் இடமாற்றங்கள் யாவும் நிறுத்தப்பட்டதற்கு திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் தலையீடே காரணம் என்ற தப்பான வதந்தி பரப்பப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறானது என்று திரு. செல்வநாயகம் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

கடந்த 1—12—62ல் அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில், 1-1-63ல் நிகழவிருந்த தமிழ் ஆசிரியர்களின் இடமாற்றங்களை நிறுத்தியது திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் அவர்களதும், தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களதும் தலையீடே என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, ஒரு குறிப்பிட்ட பகுதி ஆசிரியர்களுக்கு மட்டும் தமிழரசார் நன்மைகள் பல புரிகின்றனர் என்றும் பலத்த தப்பபிப்பிராயம் நிலவுகிறது. இத்தப்பபிப்பிராயங்களை அடிப்படையாகக் கொண்டே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதற்கு எதுவித மான ஆதாரமும் கிடையாது.

மேற்படி தீர்மானத்தையிட்டு திரு. செல்வநாயகம்

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் பாடசாலைகளை சிங்கள மயமாக்கும் முயற்சி தோல்வி

நீர்கொழும்புப் பகுதியிலுள்ள எட்டு தமிழ்ப் பள்ளிக் கூடங்களை சிங்களப் பாடசாலைகளாக மாற்றிவிடுவதென கல்வி அமைச்சு எடுத்துக் கொண்டிருந்த முடிவை கைவிட்டுள்ளனர் என்று அறியப்படுகிறது. நீர்கொழும்பு தமிழ்பேசும் மக்கள் தொடர்ந்து நடத்திய போராட்டத்தின் பலனே இம் முடிவுக்குக் காரணமாகும். தமிழ் பாடசாலைகளைச் சிங்களப் பாடசாலைகளாக மாற்றும் எண்ணத்தைக் கைவிட்டுள்ளதாக தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்திடமும், பெற்றோர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளிடமும் கல்வி அமைச்சர் வாக்களித்தார்.

சிங்களச் சட்டத்தை வேகமாக அமுல் நடத்தும் நடவடிக்கையை மேற்கொள்ள முற்பட்ட அரசாங்கம், கல்வி நிலையங்களில் சிங்கள மொழித்திணிப்பை பிரயோகிக்க ஆரம்பித்தது. இதன் படி நீர்கொழும்பில் உள்ள 8 தமிழ்ப் பாடசாலைகளையும் அரசினர் சிங்களப் பாடசாலைகளாக மாற்றிவிடுவதெனத் தீர்மானித்தனர்.

கல்வி அமைச்சின் இத்திட்டத்தை ஆட்சேபித்து நீர்கொழும்புத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் பெரும் கிளர்ச்சிகளை நடத்தினர். எதிர்ப்புக் கூட்டங்களும், பகிரங்கக் கண்டனங்களும் நடைபெற்றன. பெற்றோர் சங்கப் பிரதிநிதிகளும், ஆசிரியர்களும் கல்வி அதிகாரிகளைப் பலமுறை பேட்டி கண்டனர்.

நாட்டின் பல பாகங்களிலுமுள்ள தமிழ் ஆசிரியர் சங்கங்கள் நீர்கொழும்பு தமிழ்ப் பாடசாலைகளின் பெயர் மாற்றத்திட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர்.

தமிழரசுத் தலைவர்கள் கல்வி அமைச்சரை இந்தத் திட்டத்தைக் கைவிடுமாறு கோரினர். தொடர்ந்து ஏற்பட்ட எதிர்ப்புகளுக்கு ஈடு செய்ய முடியாது கல்வி அமைச்சு இறுதியில் தனது கொள்கையை மாற்றிவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

கடந்த வியாழக்கிழமை மேற்படி எட்டுப் பாடசாலைகளைச் சேர்ந்த பெற்றோர், ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளுடன் திரு. செல்வநாயகம் கல்வி அமைச்சரைப் பேட்டி கண்டார். இத் தூதுக்குழுவினரிடம் தமிழ்ப் பாடசாலைகளைச்சிங்களப் பாடசாலைகளாக மாற்றப் போவதில்லை என்று கல்விஅமைச்சர் வாக்களித்தார்.

மேற்படிதமிழ்ப்பாடசாலைகளிலே சிங்களத்தை ஒரு பாடமாக ஆரம்ப வகுப்பு முதலே நடத்தப் போவதாக அமைச்சர் தெரிவித்தாராம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு இம்முறையில் சிங்களம் போதிக்க விரும்பவில்லை என்றால், அதையும் கைவிட்டு விடுவதாக உத்தரவாதம் அளித்துள்ளார் எனத் தெரிகிறது.

இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிர்த்துப் போராடினால் நிச்சயமாக வெற்றி கிடைக்கும் என்னும் உண்மை இந்த விடயத்தில் தெளிவாகிறது. நீர்கொழும்பு வாழ் தமிழ் பேசும் மக்களின் திடமான, உறுதியானபோராட்டமே வெற்றி பெற்றுள்ளது என்றால் மிகையாகாது.

## நாடற்றவர் பிரச்னையைத் தீர்க்க நாடெங்கும் வகுப்புவாதப் பிரசாரம்

### இந்தியாவுடன் பேசிப் பயனில்லையாம்

அரசாங்கம் நாடற்றவர் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியப் பிரதமர் நேருஜி இலங்கை விஜயம் செய்ததை யொட்டி, இந்திய காமன்வெல்த் காரியதரிசி திரு. கண்டேவியா நாடற்றவர்கள் பிரச்சினை சம்பந்தமாக நடத்திய பேச்சுவார்த்தைகள் பயனளிக்கவில்லை. பின்னர் இந்தியப் பிரதமர் லோகசபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் இந்தியாவைப் பொறுத்தவரையில் நாடற்றவர்கள் என்போர் இந்தியப் பிரஜைகளல்ல வென்று கூறியுள்ளார்.

அத்தோடு, தோட்டங்களில் 'நாடற்றவர்'களின் இடங்களில் சிங்களவர்களைக் குடியேற்றும் திட்டத்தையும் இந்தியர் ஆதரிக்கவில்லை. இந்நிலையில் 'நாடற்றவர் பிரச்சினை' சம்பந்தமாகத் தொடர்ந்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் இனிமேல் பயனில்லை என்று முடிவுக்கு இலங்கை அரசாங்கம் வந்திருப்பதாக விஷயம் தெரிந்த வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

எனவே அரசாங்கம் இப்பிரச்சினைக்குச் சுயமாகவே முடிவு காண வழிதேடுகிறதாம். அதன் பொருட்டு நாடற்றவர் பிரச்சினையும் சட்டவிரோதக் குடியேற்றப் பிரச்னையும் ஒன்றாக இணைக்கபடுமென்று தெரிகிறது. அடுத்து, இவ்விரு பிரச்சினையையும் தீர்ப்பதற்குச் சிங்களப் பொதுமக்களிடம் ஆதரவு திரட்டப்படுமாம்.

அரசாங்கம் உத்தேசித்துள்ள சட்டங்களை அமுல்நடத்துவதற்காக சிங்கள மக்களின் ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு நாடெங்கிலும் பிரசாரம் செய்யப் போகிறார்களாம்.

பிரஜைகளல்லாத லட்சக்கணக்கான அந்நியர் சிங்களவர் மத்தியில் வசிக்க அனுமதிப்பதால் சிங்களவர்களுக்கும் அவர்களின் எதிர் காலச் சந்ததியினருக்கும் ஏற்படக்கூடிய பேரபாயத்தைப் பற்றிச் சிங்களவர்களிடம் விரிவான முறையில் பிரசாரம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

இத்தகைய பிரசாரம் முற்றிலும் வகுப்புவாதப்பிரசாரமாகவே இருக்க முடியுமென்றும், அதனால் மலைநாட்டுத் தமிழ் மக்கள் மீது சிங்களவர் துவேஷம் கொள்ள வழி பிறக்குமென்றும் அரசியல் வட்டாரங்களில் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

### சீனர்கள் பேசிய தமிழ்

சில இடங்களில், இந்திய மொழிகளில் பேசி சீனர்கள், இந்தியத்துருப்புக்களை ஏமாற்றினார்கள். இராணுவக் கட்டளைகள்—இந்திய மொழிகளில்—குறிப்பாக தமிழிலும்—பிறப்பித்தார்களாம். அவைகள் தங்கள் இராணுவத் தலைவர்களின் கட்டளைகள் என நம்பி, சில இடங்களில் இந்திய வீரர்கள் ஏமாந்தனர் என்று தெரிகிறது.

### பேர்ஸ் டயறிகள் [PURSE DIARIES] 1963

| | |
|---|---|
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 5) (இரண்டு பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-10 |
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 4) (ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 2) (ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 1) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-10 |
| பின்னல் பேர்ஸ் டயறி (Business) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-85 |
| டெஸ்க் பிளாஸ்டிக் டயறி (பெரியது) (மூன்று பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-95 |
| டேபிள் பிளாஸ்டிக் டயறி (பெரியது) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 4-35 |
| புள்ஸ்காப் டயறி (கலிகோ பைண்ட்) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள். வர்த்தகர்கள் கணக்குப் புத்தகமாகப் பாவிக்கக் கூடியது) | 13-50 |
| வலற் (Wallet) டயறி (2-50 பெறுமதியான வலற் பேர்ஸ் கொண்டது) | 4-85 |
| டேபிள் கலண்டர் (Table Calender) (பிளாஸ்டிக் ஸ்டான்டுடைய மேசைக் கலண்டர்) | 4-75 |

குறிப்பு : விரும்பும் டயறியின் விலையையும், டயறி ஒன்றுக்கு 35சதம் தபாற் செலவும் அனுப்பினால் பார்சலில் அனுப்பப்படும்.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை,
161, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக் குரல்

# மதமாற்றத்தைத் தொடர்ந்து இனமாற்றம்!

## கங்காணிகளின் பங்காளிகள் காட்டிக்கொடுக்கும் கைங்கர்யம்

மகான் புத்தர்!...

போதி மரத்தின் கீழ் ஞானம் பெற்ற புனிதர்...

அகிம்சா மூர்த்தி...

ஆசியாவின் ஜோதி...

அறநெறிக்கு வழிவகுத்த அண்ணல்...

உலகத்தின் ஒளிவிளக்கு...

வாழ்த்துகிறோம், வரவேற்கிறோம் அந்த மகானை! மூவாத முத்தமிழின் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய 'மணிமேகலை' புத்த தர்மத்தைப் புவியெல்லாம் பறை சாற்றுகின்றதே! சமரச நெறியில், சன்மார்க்கப் பாதையில், எம்மதமும் சம்மதம் என்று வாழ்ந்தவன் தமிழன், இன்று வாழ்ந்து கொண்டிருப்பவனும் தமிழன். உலகத்தில் எத்தனை மதங்களுண்டோ, அத்தனை மதங்களிலுமுள்ள நல்ல கருத்துக்களை அவன் வரவேற்க என்றும் தவறியது கிடையாது. இப்படியெல்லாம் பெருமைப்பட வாழ்ந்து கொண்டிருப்பவன், உரிமைகளைப் பெற்று விடலாம் என்ற மூட நம்பிக்கையில் மதமாற்றத்தில் இறங்கியிருப்பது கண்டு வேதனைப் படுகின்றோம்... வெட்கப்படுகின்றோம்!

### அநாகரிகச் செயல்

மதமாற்றம் என்பது அதிசயப்படவேண்டிய நிகழ்ச்சியல்ல, ஆனால் அநாகரிகச் செயலாகும். அச்சத்தை அடிப்படையாக வைத்து, அடக்கு முறையை அடிப்படையாக வைத்து, அரசுக் கட்டில் வீற்றிருப்பவர்களின் ஆணவத்தை அடிப்படையாக வைத்து, அதிகாரத்தை அடிப்படையாக வைத்து, ஆடம்பர வாழ்வு கிடைக்கும் என்ற நப்பாசையை அடிப்படையாக வைத்து மதமாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவைகள் வெறும் மதமாற்றங்களாக விருந்திருக்கின்றனவே யல்லாது, உண்மையில் இன மாற்றங்களாக இருக்கவில்லை. உலகின் பல

எஸ். குணநாயகம்
கட்டைப்பறிச்சான்
கிராமச் சங்கத் தலைவர்

பாகங்களும் அடிமைப்பட்டிருந்த காலத்தில் இவ்வித மதமாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன... ஆனால் இன்று?

இன்றும் இந்த மதமாற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது யாழ்ப்பாணத்தில்! சைவமும் — தமிழும் தழைத்தோங்குவதாகக் கூறப்படும் யாழ் நகரில் நரிக்குணம் படைத்த ஒரு சில 'மாஸ்கோ தாசர்'களின் நயவஞ்சகத்தனத்தை உணராது, சிறுபான்மைத் தமிழர்களில் சிலர் மதமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர். நாகவிகாரையில் நடைபெற்றிருக்கின்றது தமிழ் பேசும் இனத்தையே

கங்காணிகள் நாசப்படுத்தும் இத்திட்டம். பொதுவுடமைப் போர்வையில் புதுவுடமை தேடும் போலிக் கொம்யூனிஸ்டுகளின் பாதந்தாங்கிகளான ஒரு சில சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைவர்கள், ஆளவந்தார்களினதும் அவர்களது அடிவருடிகளான கொம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களினதும் அரவணைப்பைப் பெறவேண்டி, கங்காணி வேடம் பூண்டதற்குப் பலியாக இந்த அடாத நாடகம் ஆடிக்காட்டப்பட்டிருக்கின்றது.

வேட்டை நாய் கடித்து வேங்கை செத்ததாகக் கூறினால் வேடிக்கைக் கதை என்று தள்ளி வைத்து விடும் நாம், அது உண்மையில் நடைபெற்றிருப்பதைக் காணும் பொழுது விழிகளைக் குளமாக்கி வேதனைப்படுகிறோம். பதவியாசை பிடித்தலையும் கொம்யூனிஸ்டுகளின் குள்ளமதிக்கு இரையாகி வேங்கை நிகர் வீரம்படைத்த தமிழர்கள் சிலர் மதமாற்றம் என்ற படுகுழியில் வீழ்த்தப்பட்டு விட்டனர்.

### மதமாற்றம் அவசியமா?

கண் மூடிப் பழக்கங்கள், மதத்தின் பெயரால் நடைபெற்றாலும் சரி, மகேஸ்வரனின் பெயரால் நடைபெற்றாலும் சரி அவைகள் யாவும், மண் மூடிப் போக வேண்டுமென்றுதான் நாங்கள் விரும்புகிறோம். சாதிக் கொடுமைகளுக்குச் சான்றுகள் சாஸ்திரங்களில் இருந்தால், அவைகளைத் தீயில் போட்டு எரித்து விடுங்கள் என்று திடமாகக் கூறுகி

(15-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### பொய் சொல்லினும் பொருந்தச் சொல்!

தமிழ் பேசும் மக்களை முட்டாள்கள் என எண்ணிக் கொண்டு, ஏமாற்று வித்தைகளைக் காட்டி, விஷமப் பிரச்சாரம் செய்வதிலும், விதண்டாவாதங்கள் புரிவதிலும், மக்களின் ஐக்கியத்தைக் குலைத்து சொந்த நலனை வளர்ப்பதிலும் அக்கறை கொண்ட சிலரால் வெளியிடப்படும் ஒரு வாரப் பத்திரிகை, அமைதியாக இருந்த என்னை அனாவசியமாக அம்பலத்துக்கு இழுத்துவிட்டுள்ளது.

சுதந்திரனில் 'குறும்பன்' என்ற பெயரில் எழுதிய தகவல்கள் யாவும் என்னால் எழுதப்பட்டவை என்று அப்பட்டமான பொய்யை அப்பத்திரிகையில் 'ஞானி' என்ற ஒரு அஞ்ஞானியார் எழுதியுள்ளார். 'குறும்பன்' என்ற பெயரை அமைதியாக விருந்த எனக்குச் சூட்டி அழகு பார்க்க இந்த ஞானியார் ஏன் முயல வேண்டுமோ தெரியவில்லை.

மூதூர் முதலாவது எம். பிக்கு எம். தௌபிக் என்றொரு தம்பியிருக்கிறான் என்பதை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டியமைக்காக ஞானியாருக்கு முதலில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். 'குறும்பன்' நான் தான் என்ற ஞானோதயம் எப்போது ஞானியார் பெற்றாரோ தெரியவில்லை.

பொய்யைக் கூறுவதானாலும் பொருந்தக் கூற வேண்டு மென்பது முதுமொழி. அத்தகைய மொழிக்கு இலக்கணந் தெரியாத ஞானியார் பொய்யையும் புழுகையும் அந்த வாராந்த வெளியீட்டில் தீட்டியுள்ளார். பொய்யான குற்றச் சாட்டை என் மீது சுமத்துவதோடல்லாமல், எனது தமையனாரான ஜனுப் அலியையும் பொய்யுரைத்து வைவது ஏனோ தெரியவில்லை.

"கிண்ணியா ஒரு பட்டிக்காடு. இத்தனை பெரிய வேலைகள் இந்தப் பட்டிக்காட்டுக்கு அவசியமற்றவை. அவற்றைச் செய்ய முயற்சிப்பதும் வீண் பிரயத்தனம்," என்று ஜனுப் அலி கூறியதாக எழுதியிருக்கின்றீரே, இதற்கு ஆதாரம் காட்ட முடியுமா? அரசியலில் மக்களை ஏமாற்ற இத்தகைய கட்டுக் கதைகளும், அண்டப் புழுகுகளும் அவசியந்தானோ ஞானியாரே?

1958-ல் கிண்ணியா மாவித்தியாலயத்தைத் திறந்து வைத்தவர் ஜனுப் அலி என்பதை வாயளவிலா

(11-ம் பக்கம் பார்க்க)

## நாடற்றவர் பிள்ளைகளுக்கு அநீதி இழைக்க வேண்டாம்

### பிரதம மந்திரிக்கு திரு. செல்வநாயகம் கடிதம்

'வெலிமடையில் உள்ள அரசினர் தமிழ்ப் பாடசாலை 350 தமிழ்ப் பிள்ளைகளையும், 250 முஸ்லிம் பிள்ளைகளையும் கொண்டதாக விருந்த போதும், அது ஓர் முஸ்லிம் பாடசாலையாக மாற்றப்பட்டுள்ள தென்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இத் தமிழ்ப் பிள்ளைகள் நாடற்றவர்களின் பிள்ளைகளாக இருக்கலாம். என்றாலும், அவர்கள் தங்கள் அரசாங்கத்தின் பிரஜைகள். அவர்களை இவ்விதம் நடாத்துவது சரியல்ல!'

இவ்வாறு, பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தமது கடிதத்தில் கூறுவதாவது:

'மே 2-ந் திகதி, 1962-ல் தங்களுக்குத் திரு. எஸ். தொண்டமான் எழுதிய கடிதத்துடன், ஏப்ரல் 20-ல் அவர் கல்வி மந்திரிக்கு எழுதியனுப்பிய கடிதமொன்றின் பிரதியும் வைத்து அனுப்பியிருந்தார்.

கல்வி மந்திரிக்கு எழுதிய கடிதத்தில் திரு. தொண்டமான் குறிப்பிடுகிறார்: "அரசினர் பாடசாலைகளின் புதிய புனரமைப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்ப்பெற்றோர்களின் தியாகத்தின் மீது கட்டப்பட்ட பல தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் சிங்கள, முஸ்லிம் பாடசாலைகளாக்கப்படுவதாக எனக்குப் புகார்கள் வந்துள்ளன. இவ்விதம் செய்வதால், சிங்கள, முஸ்லிம் பிள்ளைகளுக்கு விசேஷ சலுகைகள் கிடைப்பதுடன், கல்வியில் இதுவரை காலம் அனுபவித்து வந்த உரிமைகளையும் வசதிகளையும் தமிழ்ப் பிள்ளைகள் இழக்க நேரிடுகிறது".

திரு. தொண்டமானின் கடிதத்துக்குப் பதிலளிக்கு முகமாக ஜூலை 11, 1962-ல் தங்கள் காரியதரிசி எழுதிய கடிதத்தில், "கம்பளை, புத்தளம், அம்பலாங்கொட, தங்கல்ல ஆகிய இடங்களிலேயே பாடசாலைகளின் புதிய அமைப்பு தொடங்கப் பட்டுள்ளது. தொடர்ந்து அமைப்பில் மாற்றம் செய்வது, தேசியக் கல்விக் கொமிஷனரின் அறிக்கை உறுதிப்படுத்தும் வரைக்கும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

எந்த ஒரு மொழியில் படிக்கும் மாணவர்களுக்கும் அநீதி இழைப்பதல்ல கல்வி இலாகாவின் நோக்கம். அப்படி ஏதாவது அநீதி இழைக்கப்பட்டதாக ஆதாரம் ஏதும் காட்ட முடியுமானால், பிரதமர் அவ் விஷயத்தில் கவனம் எடுத்து, அப்படி ஏதாவது தேவையற்ற கஷ்டங்கள் கொடுக்கப்பட்டுளனவா என்பதை உறுதிப்படுத்த முற்படுவார்".

வெலிமடையில் உள்ள அரசினர் தமிழ்ப் பாடசாலையில் 350 தமிழ்ப் பிள்ளைகளும், 250 முஸ்லிம் பிள்ளைகளும் இருந்த போதும், அது ஓர் முஸ்லிம் பாடசாலையாக மாற்றப்பட்டுள்ளதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். இத் தமிழ்ப் பிள்ளைகள் நாடற்றவரின் பிள்ளைகளாக இருக்கலாம். என்றாலும், அவர்கள் தங்கள் அரசாங்கத்தின் பிரஜைகள். அவர்களை இவ்விதம் நடாத்துவது சரியல்ல.

இவ்விஷயத்தில், தாங்கள் தக்க விசாரணை நடாத்தி, அப்பாடசாலையைத் திரும்பவும் தமிழ்ப் பாடசாலையெனப் பெயரிடுவீர்களென நம்புகின்றேன்.

## காணிக் கச்சேரிகள்

### யாழ்ப்பாண மாவட்டம் 1962—63 நிதி ஆண்டு


யாழ்ப்பாண மாவட்டத்தில் 1962/63 நிதி ஆண்டில் பின்வரும் காணிக் கச்சேரிகள் நடைபெற விருக்கின்றன. மேற்கொண்டு விபரங்கள் வர்த்தமானி விளம்பரங்கள் வெளியானவுடன் அறிவிக்கப்படும்.

1. வவனிக்குளம் } குடியேற்றத்
2. கரியாலை— நாகபடுவான் } திட்டங்கள்

இவை பற்றிய விளம்பரங்கள் 1963-ம் ஆண்டு ஜனவரி மாசத்தில் பிரசுரிக்கப்படலாம்.

3. வடமராட்சி } முந்திரிகை
4. பளை } நாட்டல்

இவற்றுக்கான விளம்பரங்களும் 1963-ம் ஆண்டு ஜனவரி மாசத்தில் பிரசுரிக்கப்படலாம்.


ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன் : 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்வன அ. அருடசோதி,
ஏழாலை மேற்கு.

கே: சுதந்திர நாடாகிய இந்தியாவைச் சீனர் கைப்பற்ற வந்தவுடன் இந்திய இராணுவத்தினர் கொதித்தெழுகிறார்கள். இப்படி இலங்கைக்கு வந்தால் இலங்கை இராணு வத்தினர் என்ன செய்வார்கள்?

ப: பண்டார நாயகாவின் 'நடு வழி''யில் அணி வகுத்துச் செல்லுவார்கள்.

ஃ

செ. மகேந்திரன்,
அனுராதபுரம்.

கே: பக்குவப்பட்ட பெண் எதைப் பக்குவப்படுத்துகிறாள்?

ப: எதிர்கால வாழ்வுக்கு உடலையும் உள்ளத்தையும் பக்குவப்படுத்துகிறாள்.

ஃ

மு. கருணாநிதி, ஏழாலை மேற்கு.

கே: எல்லோரும் இந்தியாவுக்கு தங்கள் ஆதரவை அளிக்க, வெலிமடை பிரதிநிதி மட்டும் ஏன் சீனவுக்குத் தனது ஆதரவை அளிக்கிறார்?

ப: தனது பெயர் பீகிங் வானொலியில் ஒலிபரப்பப் படவேண்டுமென்பதற்காக.

ஃ

இதயசூரியன், இறக்குவானை.

கே: அன்று பம்பாயில்போட்டியிட்ட கிருஷ்ணமேனனை அறிஞர் அண்ணா எதிர்த்தபோது: திராவிட கிருஷ்ணமேனனை ஆதரியாது வட நாட்டு கிருபளானியை அண்ணா ஆதரிப்பதேன் என்று தமிழக முதலமைச்சர் அன்று கூறினாரே, இன்று என்ன கூறுகிறார்?

ப: கூறுவதென்ன? தேர்தலுக்கு அப்பால் சிந்திக்க அவரால் முடியாது.

ஃ

''எஸ். கே. சண்முகநாதன்'',
வண்ணார்பண்ணை.

கே: குயுக்தி மாமா! மேலும், மேலும், சீனர் முன்னேறிக்கொண்டே வருகின்றனரே? வெளி நாடுகளின் உதவி இல்லாமல் இந்தியா என்ன செய்யப் போகிறது?

ப: சீனர்கள்தான் யுத்தத்தையும் நிறுத்திவிட்டுப் பின் வாங்கி ஓடுகிறார்களே!

ஃ

ராஜன், வடலியடைப்பு.

கே: பெண்கள் தெருவில் செல்லும் போது வாலிபர்களைக் கண்டவுடன் பின்னால் தூங்கும் பின்னலை, முன்னாலே தூக்கி ஏன் விடுகிறார்கள்?

ப: பின்னழகையும் சேர்த்து முன்னாலேயே காட்டிவிட.

ஃ

செ. பாலசுப்பிரமணியம்,
கொழும்பு 7.

கே: இந்திய யுத்த நிதிக்குப் பிரதமர் ஸ்ரீமாவோ எவ்வளவு பணம் கொடுத்தார்?

ப: தற்போதைக்கு அவர் எதுவும் கொடுப்பதற்கில்லை. நாய்க்கூடு கட்ட ஏற்கனவே ரூ. 12000 வரை செலவாகிவிட்டதல்லவா?

ஃ

எஸ். கே. நவம், மடுல்சீமா.

கே: பாரதத்தின் யுத்தத்தைப் போல் ஈழத்தில் நடந்தால ஈழம் எவ்வாறு சமாளிக்க முடியும்?

ப: ஏன் திரு. ராஜரத்தினாவின் படை இருக்கிறதே! வட இந்தியாவில் சீனர்கள் ஊடுருவும் போது, தென்னகத்தில் ராஜரத்னா படை ஊடுருவப் போகிறதாம்.

ஃ

எஸ். ஜே. இராஜசிங்கம்,
திருகோணமலை.

கே: எங்கள் கொம்யூனிஸ்டு குஞ்சுகள், தற்போதுள்ள ரஷ்யா—சீன லடாயில் யாரை முற்போக்காளர் எனச் சொல்லிக் கொள்வார்கள்?

ப: ஒரு கோஷ்டி குருஷேவை—மற்றொரு கோஷ்டி மாசே துங்கை.

ஃ

டி. ஏ. வாகிது, கிண்ணியா.

கே: அடுத்து வரும் பொதுத் தேர்தலில் மூதூர் தொகுதிக்கு தமிழரசுக் கட்சியார் முகம்மதலியை நிறுத்த மாட்டார்கள் என்று மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீதும் அவருடைய ஆதரவாளர்களும் கூறுகின்றார்களே! இது உண்மையா?

ப: அது அவர்களின் ஆசை—அடுத்த தேர்தலுக்கு இப்போதே பிரசாரம் ஆரம்பித்து விட்டார்களா?

ஃ

முல்லைக்காதலன், பலாங்கொட.

கே: என்னை ஒரு யுவதி காதலித்தாள். நானும் அவளைக்காதலித்தேன். ஆனால் என் இதயராணியை வேறொருவருக்குத் திருமணம் செய்ய நிச்சய தாம்பூலம் மாற்றிவிட்டார்கள். நான் என்ன செய்வது?

ப: உங்கள் இதயராணி வேறொருவரை மணக்க சம்மதித்திருந்தால் உங்கள் இதயத்தை அவள் காலி செய்திருப்பாள். உங்கள் பெயருக்கேற்ப இனி அதில் ஒரு முல்லைக்கு இடமளியுங்கள். தொல்லை தீர்ந்துவிடும்.

ஃ

சதாதனம், நிட்டம்.

கே: இடது சாரியாகாமலும் வலது சாரியாகாமலும் இடைச் சாரியாகச் சென்றால், எங்கே போய்ச் சேரலாம்?

ப: இடைச் சாரியான திரு. பண்டாரநாயக்கா இருக்கும் இடத்துக்கு.

ஃ

என். ராஜன், தலவாக்கொல்லை.

கே: எனது சகோதரியை ஒரு சிங்கள மாணவன் காதலித்து வருகிறான். அதை நான் தடை செய்யட்டுமா?

ப: நீர் சொல்லுவது பொய்! உமக்குச் சகோதரியே கிடையாதென்பதை உமது கேள்வியிலிருந்தே ஊகிக்கலாம்.

ஃ

''குணசாலினி'', தேன்தீவு.

கே: யான் ஆடவர்களை பார்க்க வேண்டும் என எண்ணியிருந்தாலும், அவர்களின் கண் பார்வை என்னிடம் வருகலும், எதிர் நோக்க முடியாதவளாகிவிடுகின்றேனே! காரணம்?

ப: ''நாணம்''—ஆண்களைக் கண்டதும் ஏற்படும் தலை குனிவுக்கு இதுதான் காரணம்.

ஃ

கா. சரோஜினிதேவி,
நீர்கொழும்பு.

கே: ''அப்பாக்குட்டி அம்மான்'' தந்தை செல்வாவின் மகனென்று நான் ஊகிக்கின்றேன். அதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

ப: உங்கள் ஊகம் தவறு. ஆனால் எதை வேண்டுமானாலும் ஊகிக்க உங்களுக்குப் பூரண சுதந்திரமுண்டு.

ஃ

அருணா வேலுசாமி, ஹாலி-எல.

கே: பஞ்சசீலமா, பகவத் கீதையா நாட்டுக் குகந்தது?

ப: பகவத் கீதை-அதில் பஞ்சசீலமும் உண்டு.

ஃ

இராம-விசாகரெத்தினம்,
திருகோணமலை.

கே: அடுத்தபடியாக நிதி மந்திரி பதவி யாருக்குக் கிடைக்கப் போகிறது? யாழ்ப்பாண எம். பிக்கா அல்லது. மூதூரின் இரண்டாவது எம். பிக்கா?

ப: இரண்டுபேருக்குமல்ல-அவர்கள் கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கிறார்கள்.

ஃ

சி. பொ. ஈழத்துமணி,
யாழ்ப்பாணம்.

கே: சீன, இந்தியா யுத்த நிலைமையைப் பற்றி இலங்கை கொம்யூனிஸ்டு கட்சி ஒன்றும் கூறாது மௌனம் சாதிப்பதன் மர்மம் என்ன?

ப: மௌனம் சாதிக்கவில்லை, இக் கட்சி சீன ஆக்கிரமிப்பை வரவேற்று பலத்த பிரசாரம் செய்கிறது.

ஃ

வி. கமால்தீன், கிண்ணியா.

கே: இதற்கு முன் மூக்கு கண்ணாடி பாவியாத மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீது இப்போது மூக்கு கண்ணாடி பாவிப்பதற்கு காரணம் என்ன என்பதை தங்களால் சொல்ல முடியுமா?

ப: அந்தஸ்து உயர்ந்து விட்டால் இயற்கைக் கண்களால் மக்களைப் பார்ப்பது கடினம். அப்பொழுதுதான் கண்ணாடி தேவைப்படுகிறது.

ஃ

எம். எஸ். அப்துல்லா,
பெரிய கிண்ணியா.

கே: ஒரு தமிழ்ப் பிரதிநிதிக்கு மந்திரிபதவிகிடைக்கப்போவதாக சபையில் பேசப்படுகிறதாம். இது மஜீத் காக்கா அவர்களுக்குக் கிடைக்கலாமா?

ப: அதற்காகத்தான் அவர் காக்கா பிடிப்பதாகச் சொல்லுகிறார்கள்.

ஃ

கனகசிங்கம், முல்லைத்தீவு.

கே: நான் விரும்பும் பெண்மணிகள் எல்லாம் என்னை வெறுக்கிறார்கள். காரணம் என்ன?

ப: முகம் பார்க்கும் கண்ணாடியின் எதிரில் போய் நில்லுங்கள். காரணம் தெரியும்.

ஃ

அ. லத்தீப், மூதூர்.

கே: மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீது என்பவரது விடு நாளாந்தம் வளர்ந்து கொண்டு வருகிறதென்பதைத் தாங்கள் அறிந்திருப்பீர்களா?

ப: அரசாங்க எம். பி. யல்லவா? வளர்ச்சியில் ஆச்சரியமென்ன?

ஃ

கே. ராஜு, மத்துகம.

கே: பாவம்! நம் இடதுசாரி தோழர்கள் நல்லதோர் எதிர்காலத்தைச் சீன வேலிக் கம்பிக்குள் சிக்க வைத்துவிட்டார்கள். அப்படித்தானே?

ப: அதன் விளைவைத் தற்போது நடைபெறும் நகர சபைத் தேர்தல்களில் அனுபவிக்கிறார்கள்.

ஃ

எஸ். தம்பிமுத்து,
நீர்கொழும்பு.

கே: எனக்கு நடித்து அனுபவம் உண்டு. ஆனால் நான் ஓர் அழகற்றவன்தான். என்னைச் சினிமாவில் சேர்த்து கொள்வார்களா?

ப: சினிமாவில் சேர நடிப்பு மட்டும் போதாது. காக்காய் பிடிக்கவும் தெரிய வேண்டும். அத்தோடு கொஞ்சம் முகவெட்டும் வேண்டும்.

ஃ

சூரசேனு, வெலிமடை.

கே: திரு. கே. எம். பி. இராசரத்தினா இலங்கைப்பிரதமரானால் தமிழ் பேசும் மக்களின் நிலை என்ன?

ப: அவர்களுக்கு அதிர்ஷ்டம்தான்-ஒரே நாளில் தனித் தமிழரசு தோன்றி விடும்.

கே: விஜயன் பரம்பரை கள்ளத்தோணி, என்று உதவி மந்திரி தென்னக்கோன் கூறியுள்ளார். சிங்களவர் அப்பரம்பரையில் வந்தவர்கள்தானே? மந்திரி இதை மறுக்கிறார். அதன் மர்மம் என்ன?

ப: ''கள்ளத்தோணிப் பரம்பரை''யிலிருந்து தங்களை நீக்கிக்கொள்ள வரலாற்றைத் தலைகீழாகப் புரட்டப் பார்க்கிறார் உதவி மந்திரி.

ஃ

அ. த. நாயகம்,
யோகபுரம்.

கே: யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு வாலிபர் சங்கம் இலங்கைப் பிரதமருக்கு எழுதிய மகஜர் ஒன்றில் இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கோ சீனவுக்கோ ஆதரவு கொடுக்கக்கூடாது என்று கேட்டுள்ளது. அதைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: வேறு யாருக்கு உதவி கொடுக்க வேண்டுமென்று கூறுகிறார்கள்?

---

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

---

# வந்தே மாதரம்!

—பழுகாமம் ஞானமணியம்—

(படைநடைப் பா)

வெற்றி! வெற்றி! வெற்றியென்று
வீறுகொள்ளுவோம்!—எல்லை
மீறிவந்த வீணரை
விரட்டி வெல்லுவோம்!
வற்றிடாத வீரமுண்டு!
வாழ்க பாரதம்! நம்மை
வாழவைக்க நீதியுண்டு
வந்தே மாதரம்! ..................வெற்றி

துட்டர் வந்து சூழ்ந்து நின்று
சூழ்ச்சி செய்கிறார்—எங்கள்
தூயதாயின் சொத்தையெலாம்
சூறை கொள்கிறார்
சிட்டினம் கலைந்தது போற்
சீனர் கூட்டமே—வந்த
திக்குமாறி ஓடத்
துரத்திடுவோமே! ..................வெற்றி

மற்றவர்க்கு நாமடங்கி
வாழ்ந்த தில்லையே!—இந்த
மாநிலத்தி லாருமெம்மை
ஆண்டதில்லையே!
சுற்றியெங்கு மாகடல்
கடந்த போதினும்—எங்கள்
தோழமைக்கு மாறுமில்லைத்
தோல்வியில்லையே! ..................வெற்றி

குற்றமற்ற தெங்கள் நீதி
கூடி வாருமே!—சீனர்
கொட்டமெலா மேயடங்க
ஓடி வாருமே!
நெற்றிமீது குண்டெறிந்து
நீசர் தாக்கினும்—வெற்றி
நித்தியமே! சத்தியத்தின்
சக்தி வெல்லுமே! ..................வெற்றி

# திருமலை கப்பல் கூட்டுறவு தொழிலாளிசத்தியாக்கிரகம்

திருகோணமலைத் துறைமுக கப்பல் கூட்டுறவு இயக்கத்தின் அலுவலக வாயிலில் மேற்படி சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர் படுத்துச் சத்தியாக்கிரகம் செய்ததால் துறைமுக வட்டாரத்தில் பெரும்பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக அறியப் படுகிறது.

திரு. தங்கவேல் என்பவர் சங்கத்தின் ஆரம்ப கால அங்கத்தினர் என்றும் அவரது சேவையின் திறமையையொட்டி பிரஸ்தாப சங்கம் அவருக்குக் கங்காணி வேலை வழங்கியதாகவும் இடைக் காலத்தில் இவர் ஓர் இந்தியத் தமிழர் என்று குற்றம் சாட்டி சங்க நிர்வாகம் இவரை வேலை நீக்கம் செய்ததாகவும் தெரியவருகிறது.

இவர் தன்னை ஓர் இலங்கைப் பிரஜை என அத்தாட்சிப்படுத்தினால் மீண்டும் அவ்வேலையை இவருக்கு வழங்குவதாக சங்கம் உத்திரவாதம் அளித்துள்ளதாம்.

திரு. தங்கவேலு பார்த்து வந்த கங்காணி வேலையை திரு. சுவாரிஸ் என்பவருக்குக் கொடுக்கப்பட்டது. கூட்டுறவு ஆணையாளர் மூலம் திரு. தங்கவேல் ஓர் இலங்கைப் பிரஜை என்பதை நிரூபித்ததன் காரணமாக அவருக்கு மீண்டும் கங்காணி வேலை வழங்கப்பட்டது.

தனக்களிக்கப்பட்ட கங்காணி வேலையை மீண்டும் அபகரித்துக்கொண்டு தன்னை சாதாரண கூலியாக்கி விட்டது சங்கம் என்ற குற்றச் சாட்டைச் சுட்டிக்காட்டி, திரு. சுவாரிஸ் சங்கக் காரியாலய முன்னிலையில் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்ததாகவும், அவரையும் அவருக்கு ஆதரவளித்த தற்காலிகத் தொழிலாளர்கள் சிலரையும் வேலை நீக்கம் செய்வதென சங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்குலைந்து போகிறது சிங்களத் திணிப்பு!

## அரசாங்க ஊழியர்களின் உறுதி அளித்து வருகிறது வெற்றி

சிங்களத் திணிப்பால் நாட்டில் நெருக்கடிகள் பல ஏற்பட்டதென்றால் அதுமிகையாகாது. கொழும்பில் கடமை புரியும் தமிழ் அரசாங்க ஊழியர்களின் கட்டுக் கோப்பாலும், தாய் மொழிப் பற்றுலும், உறுதிகுலையாத இலட்சியப் போக்காலும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கை ஆட்டங் கண்டு வருகிறது. மொழித் திணிப்பு தோல்வி கண்டு வருகிறது. இலங்கை எங்கணும் உள்ள தமிழ் அரசாங்க ஊழியர்கள் ஒன்றுபட்டு ஒரே நோக்குடன் செயற்பட்டிருந்தால், சிங்களம் கற்று தமிழை விற்றுப் பிழைக்க முற்படாதிருந்தால் இன்று பரிபூரண வெற்றி கண்டிருக்கலாமே! ஒருசிறு பகுதியினர் மட்டும் கடைப்பிடித்த கொள்கையே இன்று வெற்றி கண்டிருக்கையில் எல்லோரும் ஒன்று பட்டிருந்திருந்தால்........

1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதும் இந் நாட்டுக்குக் கேடுகாலம் தொட ஆரம்பித்தது. இச் சட்டத்தை முழு மூச்சுடன் எதிர்க்க முன் வந்தவர்கள் தலைநகரிலே கடமை புரியும் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களாவர். எத்தனையோ துன்பங்களை அனுபவித்தும், அரசாங்கத்தின் அநீதிகளைச்சுமந்து தொல்லைகளை ஏற்றும் சங்கடப்பட்டார்கள்.

1960ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் பேசும் மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சி பீடமேறிய சிறிமாவோ அரசாங்கம், நன்றி கெட்ட முறையில் தமிழ் பேசும் மக்களை உதாசீனப்படுத்தி வந்தது நாடறிந்ததே. முக்கியமாக, காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் வாக்குறுதிகளைக் காற்றில் எறிந்துவிட்டு தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் மீது சிங்களத்தை வலுக்கட்டாயமாகத் திணித்தனர். இக் கைங்கரியத்தில் முன்னணியில் நின்றவர்கள் இரு கிறிஸ்தவ மந்திரிகள். கள்ளர்களுக்குள் சண்டை வந்தால் இரகசியங்கள் வெளிவருவது போல இவ்விரு மந்திரிகளின் சதித்திட்டங்களும் அண்மையில் அம்பலமாயின.

பலதமிழ் பேசும்அரசாங்க ஊழியர்களின்மனவுறுதியை இவர்களின் சதித்திட்டத்தால் கலைக்க முடியவில்லை. சம்பள உயர்வு தடைப்பட்டவுடன் சுணிசமானேர் பணிந்துதான் போயினர். தமிழ்ப் பிரதேசத்தில் ஊழியஞ் செய்பவர்களும் (சில தமிழ் ஆசிரியர்களுட்பட) உயர் உத்தியோகத்தர் பலரும் உறுதியையிழந்து தமிழ் பேசுமினத்தின் ஏகோபித்த சாபத்துக்கு இலக்காகினர். இவர்களுட் பலர் நம்மையும் ஏமாற்றி அரசாங்கத்தையும் ஏமாற்ற முனைந்தனர்.

தலைநகரிலே கடமையாற்றியவர்களின் உறுதி எள்ளளவும் குலையவில்லை; மானம் விலைக்கு விற்கப்படவில்லை. சம்பள உயர்வு தடைப்பட்டவுடன் வேலையிற் சிரத்தையும் குறைந்தது. 1956ம் ஆண்டின் பின் அதுகால வரை ஆட்சிச் சக்கரத்தைத் திறம்பட இயக்கி வந்த தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் அதன்பின் கடமையைச் செய்வதில் அசிரத்தையடையத் தொடங்கினர்கள். 1961ம் ஆண்டிற்குப் பின் வேலையிற் சிரத்தை அறவே அற்றுப் போய்விட்டது. இதனல் அச்சுறுத்திச் சிங்களத்தைத் திணிக்க முனைந்த அரசாங்கம் பின்வாங்கும் நிலையேற்பட்டு விட்டது.

> அம்மானும்
> காலகண்டரும்
> தேச சஞ்சாரம்
> புறப்பட்டு விட்டனர்.
> அடுத்த வாரம் உங்களைச்
> சந்திப்பார்கள்.

நாட்டின் நிதிநிலைமை நாளுக்கு நாள் சீர்கெட்டு வருவதைப்பொது மக்களிடம் மறைக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இந்நிலைக்குப் பல காரணங்களிருப்பினும் உண்மையான காரணத்தை ஓரிரு சிங்கள அரசியல் வாதிகள் உணர்ந்திருக்கிருர்கள். நாட்டில் இன வெறி தலைதூக்கி நிற்குமளவும், தமிழ் பேசுமினத்தின் மனப்பூர்வமான உழைப்புக் கிடையாதமட்டும் நாட்டிற்குவிமோசனம் கிடையாதென்பதை இவர்கள் உணர்ந்தனர்.

நாட்டின் சீர்குலைவுக்குக் காரணம் என்ன என்பதை அரசாங்க உயர்தர அதிகாரிகளும், உணரத்தொடங்குவதென்றல் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் எதிர்ப்பு எவ்வளவு தூரம் அரசாங்கத்தைக் கிடுகிடுக்க வைத்திருக்கிறது என்பது, தெளிவு. அண்மையில் தமிழரசுத் தலைவர் ஒருவரை ஒரு உயர்தர சிங்கள அதிகாரி ஒரு விருந்து வைபவத்தில் சந்தித்துப் பலதும் கதைத்த பொழுது கீழ்க்கண்டபடி சொன்னராம் "நாடு சீரழிந்து போகிறது. அரசாங்க ஊழியர்களில் மூன்றில் ஒரு பகுதி தமிழர். இவர்கள் சம்பள உயர்வு இல்லாததாலும், நீதி நியாயம் வழங்கப்படாததாலும் தமது வேலையில் அசிரத்தையாயிருக்கிருர்கள். இந்நிலையிருக்குமட்டும் ஒருபோதும் நாடு சீரடையாது".

உண்மையை அரசாங்க அதிகாரிகளே உணர்ந்துவிட்டனர். தமது உறுதி வெற்றி அளிக்கத் தொடங்கிவிட்டதே என்று உறுதி குலையா [illegible] வாம். ஆனல் மற்றவர்களின் நிலை என்ன? தமது சந்ததிக்கே அழியாப் பழியைத்

(13-ம் பக்கம் பார்க்க)


எல்லோரும் போற்றும் எழில் பெற!!

லதா

மணிப்புரி சாரிகள்!!



லதா மணிப்புரி சாரிகள்;

முற்றிலும் புதிய பிளேன்;அன் ஷொட் நிறங்களில்; அழகிய தங்க நூலினலான கிழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப்பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

45" X 6 யார்

சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானெலி வர்த்தக ஒலி பரப்பில் குண்டன் மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

எலைட் சுப்பர்லோன்

வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்லர் வீதி,

சில்லறை விற்பனைப் பகுதி, 110&114, மெயின் வீதி,

கொழும்பு.

—Myla[ds]/KL.637/62—


## தோட்டத் தொழிலாளர்களுக்கு மாசி மறுக்கப்படுவதேன்?

### உணவு மந்திரிக்கு திரு. செல்வா கடிதம்

"இலங்கை எங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படும் மாசி கடந்த ஏப்ரல் மாதம் முதல் தோட்டத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்படவில்லை. உணவுப் பங்கீட்டு விடயத்தில் தோட்டத் தொழிலாளரான தமிழ் மக்களை ஒதுக்குவது அரசாங்கத்தின் கொள்கைகளில் ஒன்ரு என்பதை அறிய விரும்புகிறேன்" என்று திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உணவு அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கமாக தோட்டப் பகுதிகளில் உள்ள கூட்டுறவு விற்பனை ஸ்தலங்களின்மூலம் மாசி விநியோகிக்கப்படுவதில்லை. இலங்கை எங்கும் கூட்டுறவு பண்டகசாலைகள் மூலம் விநியோகிக்கப்படும் மாசி தோட்டத் தொழிலாளர்களான தமிழர்களுக்கு மட்டும் விநியோகிக்கப்படுவதில்லை.

திரு. செல்வநாயகத்தினுடைய கடிதத்தில் அவர் மேலும் கூறுவதாவது: தோட்டத் தொழிலாளர்களுக்கு மாசி வழங்கப்படாமலிருப்பது அரசாங்கத்தின் கொள்கையாகுமா? அப்படியாஞல் ஒரு பகுதி மக்களை மட்டும் ஒதுக்குவது நியாயமாகுமா? உணவுப் பண்டங்களில் ஒரு அம்சமான மாசியினை, தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்காமல் விடுவது, அவர்களை மனிதர்களாக மதிக்காமலிருப்பதற்குச் சமமாகும். அவர்களுக்கும் ஏனையோருக்கு அளிக்கும் உணவு உரிமைகளையாவது மறுக்காமல் விநியோகிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## கவிதைப் பூங்கா

### புறப்படு 'அரசு' காண!

—கோவை மகேசன்—

மொழிகளின் தலைவியான
 முத்தமிழ் ஈழந் தன்னில்
விழிகளில் கண்ணீர் சிந்தி
 வெம்பி நிற்கின்ருளந்தப்
பழிதனைத் துடைக்க வாராய்!
 பாலுடன் அன்னை ஈந்த
மொழிதனை அழிப்போர் காதை
 முடித்திட எழுக! இன்றே!

பாம்புக்குப் புற்று முண்டு
 பறவைக்கும் கூடு முண்டு
வேங்கைக்குக், குகையு, முண்டு
 வீடுண்டு புழுவி னுக்கும்
ஈங்குள தமிழ ருக்கு
 என்னதான் உண்டு? ஆள்வோர்
ஈந்திடும் பிச்சை யல்லால்
 எமக்கிலை உரிமை நாட்டில்!

நத்தியும் சிங்க ளத்தை
 நக்கியும் பிழைப்போர் மீதுன்
எச்சிலை உமிழ்வாய்! அன்னர்
 இயல்பினிற் தமிழர் அல்லர்
எத்தரை ஈன்ற தாயை
 இணைந்து சிங்களவர் கூடிப்
பெற்றதே அவர்கள்! ஆமாம்!
 பேடிகள் அன்னர் என்பேன்!

மானமே பெரிதாய் வாழும்
 மறத்தமிழ் வீர! கேட்பாய்
போன நம்முரிமை மீட்டுப்
 புதியதோர் உலகம் காண
ஈனர்கள் ஆட்சி மாற்றி
 இயற்றமிழ் ஆட்சி செய்யும்
ஆனதோர் அரசமைக்க
 ஆர்த் தெழுந்திடுவாய் இன்றே!

மூலைகள் முடுக்கள் எங்கும்
 முத்தமிழ் விளங்கச் செய்க!
ஆலயம் தோறும் மற்றும்
 அலுவல் செய் யிடங்கள் தோறும்
சாலைகள் தோறும் திட்டும்
 சாதனம் கடிதம் எல்லாம்
காலத்தை வென்ற எங்கள்
 கனித் தமிழ் விளங்கச் செய்க!

நல்லவர் நேர்மை யாளர்
 நானிலம் புகழும் மேதை
செல்வரின் வழியில் சென்று
 செந்தமிழ் மொழியைக் காத்து
புல்லர்கள் ஆட்சி மாற்றி
 புதுத் தமிழ்அரசு காண
நல்லதோர் சபத மேற்று
 நாட்டினை மீட்க வாராய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தைக் கொழுக்க வைத்த பாட்டாளியின் பரிதாப நிலை பாரீர்!

**பல** ஆண்டுகளாகப் பச்சை இரத்தம் கொட்டிப் பாடுபட்டு பதனிட்டான் பாட்டாளி பரந்த காடெல்லாம். பட்ட மரங்கள் துளிர்த்தன. தொட்ட மண் பொன் கொழிக்கும் தேயிலை, இரப்பர், கொக்கோவாத் தோட்டங்களாயின. இன்றைய உலகில் இலங்கை நாடு தன் புகழை நிலை நாட்டப் பாடுபட்டான் பாட்டாளி. பொன்னும் பொருளும் குவிய ஈழம் ஏறு நடை போட்டது. உன்னத நிலையை உருவாக்கியவன் உருக்குலைந்தான். அவன் வாழ்வு நிலை பரிதாபகரமாகி விட்டது! பனி மலையில் படுத்துறங்கி பொருளாதாரத்தைக் கொழுக்க வைத்தான். நாட்டின் பொருளாதாரம் நன்ருக உயர — நலிவைக் கண்டான் பாட்டாளி. இந்த நிலையை எண்ணிப் பார்த்தால் எவருமே பதறி விடுவார். நாட்டின் நாடித் துடிப்பை ஒரு நொடியில் ஈடாடச் செய்பவன் வாழ வழியில்லை ஏன் இந்த இழி நிலை எமக்கு?

### குடும்ப வாழ்க்கை

ஆறு அடி அகல வீட்டில் குடும்பம் நடத்துகிருன் தொழிலாளி. அங்கு காற்ருேட்டம் இல்லை. பத்துக்கு அதிகமானேர் படுத்துறங்க வேண்டும். வயது வந்த காளையர், கன்னிகளும் அங்கு தானிருக்க வேண்டும். இவர்கள் வாழ்வில் தவறுவதில் வியப்பில்லையே? எலிவளை போன்ற இருப்பிடத்தை இட வசதியாக்கித் தந்துதவ மறுக்கிருன் முதலாளி. பண நெருக்கடி என்ற கோதாவில் பாட்டாளி பலமாக, சுகாதார வசதியுடன் வாழ்ந்தால் தான் அவனின் இடையற்ற உழைப்பை நல்க முடியும் என்று எண்ண மறுக்கிருர்களே இதயமற்றவர்கள்!

### பொருளாதாரம்

உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. அதிகாலை ஆறு மணிக்குக் கொழுந்து பறிக்கச் செல்கிருன் தொழிலாளி, திரும்புவது மாலை 5 மணிக்கு. இதற்கு ஊதியம் ரூபா 1-75 தொடக்கம் 2-25 வரை. தினமும் வேலை கிடைப்பதில்லை. மாதம் 15 நாட்கள் தான் வேலைகிடைக்கிறது. 30 ரூபா உடன் 10 பேர் கொண்ட குடும்பம் எப்படித் தான் வாழ முடியும்?

இதனுல் பாட்டாளி வட்டிக் கடைக்காரனிடம் தஞ்சம் அடைகிருன். வாழைப் பழத்தில் ஊசி நுழைவது

**கரவைக் கிஷோர்**

போல் சின்னுபின்னமடையச் செய்கிருன், பாட்டாளி மாளுகிருன். இந்த நிலையில் பாட்டாளி தனது மகளுக்கு வாழ்க்கைஒப்பந்தம் செய்து வைக்கிருன்.

தேன்மதிக்கு தொழிற் தலைவர்களின் செல்வக் குழந்தைகள் எல்லாம் சுவிஸ் நாட்டுக்கும், கோடைக்கானலுக்கும் சென்று வர வசதி செய்யும் பாட்டாளி, பங்கத்தில் ஆளிருக்க, மிருகம் போல் தேன்மதியைக் கழிக்கும் நிலை.

வாழ்க்கை இவர்களுக்கு வெறுத்து விடுகிறது. தொழில் இணைக் காரியாலயங்களில் பிரிவினைக்கு மனுப் போடுகிருர்கள். மணமகளின் பெற்ருேர் இந்த நிலையை வரவேற்கிருர்கள். இந்தக்கேவலநிலையைத் தடுப்பதற்குத் தொழிற் தலைவர்கள் புறமுதுகு காட்டுகிருர்கள்.

### கல்வி

பாட்டாளியின் பச்சிளம் பாலகர்களுக்கு படிப்புச் சொல்லித் தர வசதியில்லை. தோட்டப் பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லை. ஒருவர் தானிருப்பார். அவருக்கு அக்கறை காய் கறித் தோட்டத்தில்.

இந்த 'அருமையான' கட்டத்தில் தான் சிங்கள மொழியிலே பாட்டாளிகளின் பாலகர் பால பாடம் படிக்க வேண்டுமெனத் தேசியக் கல்விக் கமிஷன் சிபார்சு செய்யவிருக்கிறது.

தாய் மொழியிற் கூட கல்வி வசதியற்றவர்களுக்கு சிங்களத் திணிப்பு. இந்த விந்தை நிகழ்ச்சி ஜனநாயகத்தின் சாவு மணி. அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

### தொழில்

பல ஆண்டுகளாக, வெயர்வை கொட்டி, இரத்தஞ் சிந்தி நாட்டைக் கொழுக்க வைத்த பாட்டாளிக்கு தொழில் வசதியுமில்லை. சிங்கள மயம் விரட்டுகிறது.

ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு மேலாகப் பாடுபட்டவனுக்கு தொழில் உரிமையில்லை. இது ஈழத்து ஜனநாயக பண்பு. தொழிற் தலைவர்கள் (காங்கிரசுகள்) மௌன விரதம். கண்ணும் மூச்சி ஆடி, ஆட்சியாளரின் விபரீதப் போக்குக்குச் சிந்து பாடிக் களிக்கிருர்கள்.

வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் தத்தளிக்கும் பாட்டாளிக்கு பட்டப் பெயர் கள்ளத் தோணி, நாடற்றவர்கள். வாக்குரிமை இல்லை. வாளாவிருக்கிருர்கள் தலைவர்கள். குடியுரிமை, மொழியுரிமைகள்

(13-ம் பக்கம் பார்க்க)




## தூங்கிய காலம் போதுமடா!

(மலைதாசன்—மடுவக்கொல்லை)

எழுந்திடு தமிழா எழுந்திடடா—இங்கு
ஏய்த்திடும் எத்தரை விரட்டிடடா!
விழித்திடு தமிழா விழித்திடடா—இந்த
வீணரின் சூழ்ச்சியை ஒழித்திடடா!

தெளிந்திடு தமிழா தெளிந்திடடா—அறிவு
தேர்ந்திடும் தீந்தமிழ்ப் பண்பதனில்!
அழித்திடு இன்றே அழித்திடடா—உன்
அறியாமை மிகுந்திடு கொள்கையினை!

பார்த்திடு தமிழா உன்மகவை
படுகுழி தன்னில் வீழாமல்
சேர்த்திடு இன்றே சேர்த்திடடா—நல்ல
செழுமைக் கல்விக் கூடத்திலே!

நடந்திடு தமிழா நடந்திடடா—நல்ல
நாளைய வாழ்வின் பாதையிலே
துடித்தெழு தமிழா துடித்தெழடா—நீ
தூங்கிய காலம் போதுமடா!

## இதயக் குமுறல்

### நாமும் போராடுவோம்

மலைநாட்டில் தமிழரசுக் கட்சியினர் தொழிற் சங்கங்கள் அமைக்க முடிவு செய்ததை மனப்பூர்வமாக இரு கரங்களையும் நீட்டி வரவேற்கிருேம். மலைநாட்டில் குடியுரிமை, மொழியுரிமை, இழந்து இப்போது தொழில் செய்யும் உரிமைகூட இழந்து வாழும் தறுவாயில் இருக்கும் நமக்கு வழிகாட்ட கண்ணியம் வாய்ந்த ஒரு கட்சி கடமையைக் கருத்திற் கொண்டு உழைக்கும் ஒரு தொழிற் சங்கம் இல்லையே! என்ற அவா சில ஆண்டுகளாக இருந்து வந்தது.

தமிழ் அரசுக் கட்சியினரின் மன்னர் மகாநாட்டு தீர்மானத்தின் படியும், கொழும்பில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டம் செய்தமுடிவின்படியும்எமது குறை நீங்கும் என்றே நம்பிக்கை கொள்கிருேம். தமிழரசுக் கட்சியின் எதிர்வரும் போராட்டத்தில் மலைநாட்டவரும் பங்கு கொண்டு குடியுரிமை, மொழியுரிமைக்காகப் போராடுவோம்.

சி. பரமலிங்கம்,
பொ. கிருஷ்ணமூர்த்தி,
அலெக்சாண்டர்,
சு. தியாகராஜா,
தி. சி. கந்தசாமி.

வட்டகொடை பஜார்.

---

### மலையகப் பெண்ணின் பரிதாபநிலை

நாகரீகம் முன்னேறிவரும் இந்நாளில்கூட, தோட்டத் தமிழர்களிடம் பலகுறைகள் காணப்படுகின்றன.

காலை முதல் மாலைவரை நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடுகின்ருர்கள். அவர்களுக்குக் கிடைக்கும் கூலியோ சொற்பம். இந்தப் பணத்தை என்ன செய்கிருர்கள் தெரியுமா? கள்ளுக் கடைக்கும், வட்டிக்கடைக்கும்தான் கொடுக்கிருர்கள். கிடைக்கும் பணத்தை செலவு செய்ய, சம்பளம் கிடைத்தவுடன் ஆண், பெண், பிள்ளை எல்லோரும்

(13-ம் பக்கங் பார்க்க)

## தாயகம் செல்லும் 'டிஃபெம்பி'

தென்னகத்திலே நெல்லை மாவட்டத்துக் கல்லிடைக் குறிச்சியிலே பிறந்து, வளர்ந்து ஆளாகி அருந்தமிழ் பயின்று அல்லும் பகலும் அன்னை மொழியினை—மொழி வழி நாகரிகத்தின் திறன் பற்றிச் சிந்தித்து,



டி. எம். பீர்முகம்மது


சீரிய சிறந்த சொல்லோவியங்களாலும், எழுச்சிமிக்க எழுத்தாலும் எம்மைக் கவர்ந்து, நெஞ்செல்லாம் நிறைந்திருந்த பண்பாளரும் அன்பாளருமான உயர்திரு டி. எம். பீர்முகம்மது (டிஎம்பி) அவர்கள் ஈழத்தமிழன்னையிடம் விடை பெற்றுத் தாயகம் செல்கின்ருர்.

சீறுஞ் சிங்களத்திற்கு அபாய அறிவிப்பு விட்டு, சிறுகதைகள் பல படைத்து, அறிஞர் அண்ணுவின் அருந்தமிழ்ப்பற்றை அன்னை மொழியால் பொருள் நிறைந்த அடுக்கு மொழியால் சொல்லி, முஸ்லிம்களின் மொழிப்பற்றிலிருந்த குழப்பத்தினைத் தெளிய வைத்து மலையகத்துப் பெருங்குடி மக்களின் மன வளத்தைப் பக்குவப்படுத்தத் துணை நின்றுழைத்து, அன்புப் பாலத்தால் அனைவரையும் தமதாக்கிய இன் சொல்லாளர் 'டிஎம்பி' இன்று தாயகம் செல்லவிடைகொடு தாயே என்று ஈழத்தமிழன்னையிடம் கேட்கின்ருர்.

வாழ்க்கை முறையினை வகுத்துக் காட்டிய வள்ளல்களின் வழியினை எமக்குக் காண்பித்து "எழில் சேர் தமிழிளமே! ஏற்றமும், எடுப்பும், எழுச்சியுங் கொண்ட உனது தோற்றமெங்கே? நெஞ்சக் களிப்போடு மலர்ச்சி முகங்காட்டி பீடுநடை போட்டுப் பெருமித வாழ்வு வாழ்ந்தாயே! அந்த இன்ப வாழ்வெல்லாம் இன்று எங்கே? உன்னிடத்தில் தான் இருக்கின்றது நீயேதான் வைத்திருக்கின்ருய். உனது பண்பை, நாகரிகத்தை, கலைவழி வந்த ஆசாரத்தை; வேற்று மொழிக் கலப்பென்னும் திரையால் நீ தான் மூடி வைத்திருக்கின்ருய். திரையைக் கிழித்தெறிந்து விட்டுத் தீரனுய், திறலோனுய்த்திண்தோள் மறவனுய் வாழ உனக்கு வாய்ப்பிருக்கின்றது. வசதியிருக்கின்றது. இன்றிலிருந்து முயற்சியிலிறங்கு. அன்று நீ பெற்ற அகமகிழ்வும், அருமையும், செம்மையும் வருகின்றதா இல்லையா பார்!" எனத் தமிழ் நெஞ்சங்கள் பல தங்களைத் தாமே குத்திக்கேட்டுப்புத்தி பெறத்தக்க விதத்தில் ஈழத் திருநாட்டின் மூலைமுடுக்குகளிலும் சந்து பொந்துகளிலும் வாழ்ந்த இனத்தை, வாழவேண்டிய இனத்தைத் தட்டியெழுப்பி, தங்கம் நிகர் தமிழினத்தின் தன்மானம் தனைக் காட்டி, கருத்துக் குருட்டினைக் களைந்தெறிந்து, செவிடுபட்ட செவிகளுக்கு

(13-ம் பக்கம் பார்க்க)

தங்கப் பதக்கம் பெற்றது!



"பாான் மார்"

ஏ. சி. மின்சாரம் உற்பத்தி செய்யும் யப்பானிய டீசல்

30 வோல்ட்ஸ் ஏ. சி.
1½ கிலோ வட்ஸ தொடக்கம் 4 கிலோ வட்ஸ்
யந்திரங்கள் கிடைக்கும்.

விநியோகஸ்தர்

செனற் அந்தனீஸ்
ஹாட்வெயார் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
கொழும்பு-10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரிய தொண்டால் சிறப்புற்று விளங்கும்

## மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம்

### ஓராண்டிலேயே ஒன்பது பரிசில்கள்

குறுகிய காலத்தில் பெருகிய சேவை செய்துள்ள மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம் தமிழ் கூறும் நல்லுலகத்தில் தனியான ஒரு இடத்தைப் பெற்று விட்டது. சங்கம் ஆரம்பித்த முதல் வருடத்திலேயே பல சீரிய தொண்டாற்றியிருக்கிறது. பல எழுத்தாளர்கள் பெரும் பரிசில்களும், பாராட்டுக்களும் பெற்றிருக்கிறார்கள். இத்தகைய சங்கத்தின் சேவை பல்லாண்டு காலம் நீடித்து நிலைக்க வேண்டுமென்பதே சுதந்திரனின் பேரவாவாகும்.

மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம், இரண்டாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. கடந்த ஒரு ஆண்டில் இச் சங்கம் கலைத்துறையில் ஆற்றியுள்ள சேவையை எண்ணிப் பார்க்கும் போது, இச் சங்க உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், ஈழத்து தமிழ் எழுத்தாளர்களே பெருமிதத்துடன் தலை நிமிர்ந்து நிற்பார்கள்.

இச் சங்கம் ஆரம்பத்தில் பதினைந்து உறுப்பினர்களுடன் ஆரம்பமாகியது. இன்று ஐம்பதுக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைத் தன்னகத்தே கொண்டு செயல்படுகிறது.

கடந்த ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட பள்ளி மாணவ மாணுக்கியர் மத்தியில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி நடாத்தி பதினைந்துக்கும் மேற்பட்ட பரிசுகளை வழங்கியுள்ளது இச் சங்கம்.

தமிழ் நாட்டுக் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா ஈழத்துக்கு வந்திருந்த பொழுது, அவர்களை மட்டு நகருக்கு அழைத்து, அவர் தலைமையில் ஒரு கவி அரங்கத்தை நடாத்தி இளம் கவிஞர்கள் பலரை தமிழ் எழுத்துலகுக்கு அறிமுகப்படுத்தியது. முத்தமிழ் வித்தகர் விபுலானந்தருக்கு விழா எடுத்ததுடன் வேறு பல விழாக்களையும் நடாத்தியது.

வெளியிடங்களில் இருந்து எழுத்தாளர்களை அழைத்து கருத்தரங்கம், கலந்துரையாடல் பலநடாத்தியதுடன் உறுப்பினர் மத்தியிலும் இலக்கியசர்ச்சைபல நடாத்தியிருக்கிறது.

#### நாடகப் பணி

ஈழத்திலுள்ள மற்ற எந்த மன்றங்களையும், சங்கங்களையும் விட மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம் நாடகத் துறையில் குறிப்பிடக் கூடிய அளவு கடந்த ஆண்டு பணியாற்றியுள்ளது. இச் சங்க உறுப்பினர்களின் விடாமுயற்சியின் பயனாக ஐந்து ஓரங்க நாடகங்களும், இரண்டு முழு நீள நாடகங்களும் ஓர் ஆண்டு காலத்திற்குள் மேடையேற்றப்பட்டுள்ளன.

#### வில்லுப்பாட்டு

கலைவாணர் என். எஸ். கே. யினால் உயிரூட்டப்பட்டு தமிழ் நாட்டில் பிரபலமாயிருக்கும் வில்லுப் பாட்டுக் கலையை ஈழத்துக்கு நகைச் சுவை வடிவில் அறிமுகப் படுத்தி வைத்த பெருமை மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கே உரியதாகும். சங்க உறுப்பினராகிய மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள்தமது குழுவினருடன்(சங்க உறுப்பினர்களே) கடந்த ஆண்டு இலங்கை எங்கணும் பல மேடைகளில் இந் நிகழ்ச்சியை நடாத்தியுள்ளார்.

கடந்த ஓர் ஆண்டில் சங்க உறுப்பினர் ஒன்பது பேர் பரிசுகளும், பாராட்டுகளும் பெற்றுள்ளார்கள். குறிப்பாக 'ஆனந்தவிகடன்' நடாத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசை திமிலைத் துமிலனும், 'கங்கை' நடாத்திய குறுநாவல் போட்டியில் முதற்பரிசை ஈழத்து ரத்தினமும், இலங்கை கலைக்கழகம் நடத்திய நாடகப் போட்டியில் முதற்பரிசை சங்கச் செயலாளர் அன்புமணியும்பெற்றுள்ளார்கள்.

சங்கச் செயலாளர் ஆண்டு அறிக்கையில் சங்கத்தின் உற்சாகமும், சுறுசுறுப்பும் ஆண்டின் பிற்பகுதியில் இருக்கவில்லை யென்று சுட்டிக் காட்டியுள்ளார்.

#### ஆண்டு விழா

சங்கத்தின் ஆண்டுவிழா 9-12-62 ஞாயிறு காலை முதல் மட்டக்களப்பு அரசடி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இவ் விழாவிற்கு தலைவர் திரு. ஸி. பாக்கியநாயகம் தலைமை தாங்குவார். கலைஞர்களின் பிரச்சினைகள் ஆலோசிக்கப்படுவதுடன் கலந்துரையாடல்கள் முதலிய சிறப்பு அம்சங்களும் அன்று இடம் பெறுமெனத் தெரிகிறது.

---

## சங்கப் பலகை

#### குடியியல் பரீட்சை வழிகாட்டி

ஆசிரியர்: விஜயன் விக்டோரியா பி. ஏ.

வெளியீடு: கல்கோ பிரின்டர்ஸ், 172, ஹல்ஸ்டோர்ப் வீதி, கொழும்பு-12

விலை: ரூபா 2-50

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு குடியியல் ஒரு பாடமாக எடுக்கும் மாணவர்களுக்கு நல்ல வழி காட்டியாக உள்ளது இந்நூல்.

நூலாசிரியருக்கு இத் துறை புதியது அல்ல. முன்னரும் குடியியல் வினு-விடை என்னும் நூலை எழுதியுள்ளார். அந்நூல் காலங் கடந்த தொன்ருகிவிட்ட காரணத்தினுலேயே இந் நூலை எழுதுவதாக ஆசிரியர் நூன் முகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சைக்குத் தோன்றும் மாணவர்கள் இந்நூலைப் படிப்பதால் நவீன முறையில் விடை எழுதுவதற்கு இலகுவாக இருக்கும்.

நூலின் கண், சமுதாயம், பொருளாதாரம், கலாச்சாரம் பற்றிய பொது விடயங்கள், சனநாயகம், இலங்கை அரசியல், இங்கிலாந்து அரசாங்கம், கூட்டுறவு ஆகிய ஐந்துபகுதிகளில் தலைப்புக்கு இருபது கேள்விகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விடைகள் தரப்பட்டுள்ளன. இது நூலின் தனிச் சிறப்பாகும். எனவே மாணவர்களுக்கு இது நல்ல வழிகாட்டியாக அமையும்.

-சங்கர்-

#### கவிதைச் செல்வம்

தொகுத்தவர்: ச. வே.பஞ்சாட்சரம்.

வெளியீடு: யாழ். தமிழ் இலக்கிய மன்றம், கந்தரோடை, சுன்னுகம்.

விலை: ரூ. 1-00

பாரதியின் பரம்பரை வளர்ந்து வருகிறது என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டே இந் நூல். பாரதியுடன் ஆரம்பமாகிய இலக்கிய மறுமலர்ச்சி, இன்று பல்கிப் பெருகி பல நல்ல துறைகளில் நமது மொழியை வளம் பெறச் செய்துள்ளது. அவற்றுள் ஒன்றே கவிதை.

கவிஞன் இயற்கையாகப் பிறக்கிறுன். எனவே தான் காரிகை கற்று கவிபாடுவது கடினம், இல்லை அவமானம், அதிலும் பேரிகை கொட்டி பிழைப்பது நன்று என நாலுமறிந்தோர் கூறினுர்.

ஈழ நாட்டிலுள்ள இருபத்தொன்பது இளங் கவிஞர்களின் இனிய கவிதைத் தொகுப்பே இந்நூல்.

பா. சத்தியசீலன், திமிலை மகாலிங்கம், கரவைக் கபிலன் ஆகியோரின் கவிதைகள் சிறப்பாக உள்ளன.

இம் முயற்சியில் முனைந்த யாழ் தமிழ் இலக்கிய மன்றத்தினரும், ச. வே. பஞ்சாட்சரமும்நிச்சயம்பாராட்டுக்குரியவர்கள்.

-சங்கர்-

#### சங்கம்

ஆசிரியர்: சமூகத் தொண்டன்.

வெளியீடு: பதின்மர் பதிப்பகம் 110/23, பஞ்சிகாவத்தை வீதி, மருதானை.

விலை. சதம் 10

சங்கம் ஐப்பசி மாத இதழ் வரப்பெற்ருேம்.

மத மாற்றம் ஏன்? என்ற ஆசிரியத் தலையங்கம், மதம் மாறியவர்களுக்கு நல்ல சாட்டை அடியாக அமைந்துள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்களின் வளர்ச்சியில் சிரத்தை கொண்ட ஒரு ஏடாக சங்கம் அமைந்திருக்கிறது போல் தெரிகிறது.

சங்கத்தின் வளர்ச்சிக்கு மேலும் தரமான விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

-சங்கர்-

#### மலர் விழி

ஆசிரியர்: எம். சி. யேசுதாசன், 32, கோவில் வீதி யாழ்ப்பாணம்.

விலை: சதம் 20

திங்கள் வெளியீடான மலர் விழியின் எட்டாவது இதழ் வரப்பெற்ருேம். மக்கள் திலகம் எம். ஜீ. இராமச்சந்திரனின் படம் அட்டையை அழகுபடுத்துகிறது.

(11-ம் பக்கம் பார்க்க)

---

## திருமலைக்குத் தனியான காதியார் தேவை

திருமலை நகரில் வதியும் முஸ்லிம் மக்கள் தங்கள் சமூக கடன்களை உடனுக்குடன் முடித்துக் கொள்ள முடியாமல்இருப்பது பெரும் கவலை தரும் விஷயமாகும். அக் கடமைகளை நிறைவேற்றி வைக்க திருமலை நகரில் ஒரு காதியார் நியமனம் செய்யப்படாமலிருப்பதே நகர் வாழ் முஸ்லிம் மக்களின் கஷ்ட நிலைக்குக் காரணமாக அமைந்துள்ளது.

நகரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் வதியும் முஸ்லிம் சகோதரர்கள் இந்த வசதியைப் பெற்றிருந்தும் நகரமக்களுக்கு இவ் வசதி கிடைக்கவில்லை. எனவே அரசாங்கம் காலதாமதம் செய்யாமல் நகரத்துக்கென ஒரு காதி உத்தியோகஸ்தரை நியமனம் செய்ய வேண்டும் என்று திருமலை முற்றவெளி சியாரத் பரிபாலன சபைக் கூட்டத்தில் சபைச் செயலாளர் ஜனுப் ஆப்தீன் ஒரு தீர்மானத்தின் மீது பேசுகையில் கூறினுர். ஜனுப் ஓ. எல். எம். இஸ்மாயில்புரக்டர், தலைமை தாங்கினுர்.

#### ஆசிரிய சங்க உத்தியோகத்தர்கள் தெரிவு

மட்டக்களப்பு பயிற்றப்பட்ட வேலையற்ற தமிழ் ஆசிரிய சங்கக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்ற போது சில மாற்றங்களுடன் பின் வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. மு. அருமைநாதன், உப தலைவர்: திரு. சி. பொன்னம்பலம், இணைச் செயலாளர்: திரு. சி. அரசரெத்தினம், பொருளாளர்: திரு. கா. தாமோதரம். பொதுச் செயலாளராக திரு. வி. த. குமாரசாமி அவர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இக் கூட்டத்துக்கு மேற்படி சங்கத்தின் முன்னுள் தலைவராக இருந்து கடமையாற்றியவரும், சங்கத்தின் தாபகர்களில் ஒருவருமான திரு. ச. அருள்நாயகம் ஆசிரியர் அவர்களும் சமுகமளித்திருந்தார்களென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கூட்டத்தில் பின் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1- தலைமைக் கல்வி நிலையத்தில் நீதியற்ற முறையில் ஒழுங்கீனமாகப் பதியப்பட்டிருக்கும் மேற்படி சங்க அங்கத்தவர்களின் பெயர்களை ஒழுங்கான முறையில் பதிவு செய்து வைத்தற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களைக் கேட்டுக் கொள்ளுதல்.

2- 'வருகிற 1963ம் ஆண்டு தொடக்கத்தில் ஆசிரியர்களுக்கும் நியமனம் கிடைக்க தமிழரசுக் கட்சியினர் அத்தனை பேரும் மீண்டும் அரசாங்கத்தைத் தூண்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுதல்.

கடந்த காலத்தில் சங்கம் ஆற்றிய பணிகளையும், எதிர் காலத்தில் ஆற்ற வேண்டிய தீவிர பணிகளையுமிட்டு, முன்னுள் தலைவர் திரு. ச. அருள்நாயகம் அவர்கள் சங்க உத்தியோகத்தர்களுக்கு எடுத்துரைத்தார்.

---

## திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுக

### தமிழ் நாட்டு அரசுக்கு தமிழ் மறைக் கழகத் தலைவர் வேண்டுகோள்

பாரதியார் பிறந்த திருநாளைக் கொண்டாடுவது போன்று, திருவள்ளுவர் பிறந்த திருநாளையும் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்றும், அந்நாளை அரசாங்க விடுமுறை நாளாக்க வேண்டுமென்றும் தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் தமிழ் நாட்டு கல்வி—நிதி அமைச்சர் திரு. பக்தவசலத்துக்கு எழுதிய கடிதத்தில் வேண்டியுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளதாவது: இத்திங்கள் 9, 10, 11ம் நாட்களில் பாரதியார் பிறந்த திருநாளைக்கொண்டாடத் தமிழ் நாட்டரசாங்கம் ஒழுங்குகள் செய்வதைப் பாராட்டுகிறேன்.

பாரதியார் விழாவைப் போலவே திருவள்ளுவர் விழாவையும் தமிழ் நாட்டரசாங்கம் அடுத்த ஆண்டு தொடக்கம் கொண்டாட ஒழுங்குகள் செய்யவேண்டுமெனவும், திருவள்ளுவர் திருநாளை அரசாங்க விடுமுறை நாளாக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளுவர் திருநாளுக்கு விடுமுறை அளித்தால் தமிழ்ப்புலவருக்கு விடுமுறை [illegible] தனிப் பெருஞ் சிறப்பு உலகிலே தமிழ் நாட்டுக்கு மட்டுமே உரியதாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---


## உங்கள் பிரச்சினை?

★ காதல்—கல்யாணப் பிரச்சினையா?
★ கணவன்—மனைவி பிணக்கா?
★ குடும்ப விவகாரமா?
★ வழக்கு—வம்பா?
★ எதுவித மனச் சோர்வா?
★ உத்தியோக உயர்வா?
★ மாதவிடாய் கோளாறு?

எதுவானுலும் நிவர்த்தி செய்யப்படும்.

எழுதுங்கள் அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் நேரில் வாருங்கள்.

விஷயங்கள் இரகசியமாக வைத்துக்கொள்ளப்படும்

கவர்ன்மென்ட். ரெஜிஸ்டர்ட் மந்திராச்சாரியார்

# பீ. எம். திஸாநாயக,

(நான்கு கோயில்களின் தர்மகர்த்தா)

## அருந்த என்ஜை அலுவலகம்

கம்பளை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கொம்யூனிஸ்ட் சீனு

# படையெடுக்கும் என்று பட்டேலுக்குத் தெரியும்

இலக்கியம்:

## அவள் சக்தி தான் என்னே!

— தேனி —

எனது காதலி பெண் தான். ஆனால், அவளுக்கு இத்தகைய சக்தி எங்கிருந்து தான் வந்ததோ?

நான் ஒரு ஆண் மகன் தான். அதுவும் தமிழர் மறக் குலத்தில் பிறந்த மாவீரன் தான். ஆனால், அவளுடைய சக்திக்கு முன் எனது ஆண்மை, வீரம் எல்லாம் எம் மாத்திரம்?

அவள் எனது காதலி. நான் அவளை மணக்க விரும்பும் காதலன் தான். ஆனாலும், என்னிடம் இல்லாத சக்தியெல்லாம் எப்படி அவளிடம் குடிபுக முடிந்தது?

அவள் தன் விழிகளை என்மீது வீசுகிருள். நான் அந்த விழி வீச்சில் அகப்பட்டுத் தத்தளிக்கிறேன்.

அவள் தன் புருவத்தை உயர்த்துகிருள். நான் எனது நிலையையே இழக்கிறேன்!

அவள் தனது இடையை நொடிக்கிருள். எனது இதயமே விழுந்து விடுகிறது!

அவள் பயிலென நடக்கிருள். நான் மயங்கி, மெய் மறக்கிறேன்!

காலமெல்லாம் காதலிகள் தமது காதலர்களை இப்படித்தான் வருத்துவரோ?

அவளது மென் முலையை மேலாடையால்—வெறும் துகில்தான்— மறைத்துவிட்டு, ஓரக் கண்களால் என்னைப் பார்த்து விஷமச் சிரிப்புச் சிரிக்கிருள்!

அப்பொழுது, நான் என்ன செய்வதென அறியாது நின்று திகைக்கிறேன்!

அது மாத்திரமா?

போர்க்களத்தில் எனது வீரத்தின் முன் புறமுதுகு காட்டி ஓடிய பகைவர்கள் தான் எத்தனை! ஆனால் அப்படிப்பட்ட வீரமே இவளது நெற்றியின் முன் அடங்கி ஒடுங்கி விடுகின்றதே!

ஒளி வீசும் எனது வாளைக் கண்டால் விறைத்து, விறுவிறுத்து ஓடி விடுவார்களே எனது விரோதிகள்! ஆனால், ஒளி வீசும் இவள் நெற்றியின் முன்னால், அந்த வீரம் தனது வலிமையை இழந்து நிற்கிறதே!

எனது ஆண்மை எல்லாம் அவளின் அழகின் முன், பகலவனைக் கண்ட பனிபோல் மறைந்துவிடுகின்றதே!

எதிரிகளுடன் பொருது அவர்களைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்திருக்கிறேன். அவர்களின் படைக் கலங்கள் எனக்கு வெறும் தூசு!

ஆனல்............

இவளுடைய அங்கங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாகவே எத்துணை கூர்மை வாய்ந்ததாக அமைந்துள்ளன!

இவ்விதம் தனது தலைவியின் தன்மையைப் பற்றிச் சிந்திக்கும் தலைவன், வள்ளுவனின் காதல் காவியத்தில், தலைவியின் நெற்றி தன்னை வருத்துவதைக் குறிப்பிடுகிருன்:

ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரு முட்குமென் பீடு.

# இரும்பு மனிதரின் சந்தேகம் இன்று உண்மையாகியது

என்றைக்காவது ஒரு நாள் கொம்யூனிஸ்டு சீனு இந்தியாவை ஆக்கிரமிக்க நேரிடும் என்று பாரதத்தின் இரும்பு மனிதரெனப் பெயர் பெற்ற சர்தார் வல்லபாய் படேல் திடமாக நம்பியிருந்தார். அவருடைய சிந்தனையில் மலர்ந்த திட்டங்களுக்கு இந்திய அரசு செவிசாய்க்கவில்லை. அவருடைய அன்றைய எண்ணம் இன்று நடைமுறைக்கு வந்து விட்டது. இனி மேலாது இந்திய அரசு தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் போதுமான வற்றைச் செய்யுமாக.

கொம்யூனிஸ்டு சீனவின் நோக்கத்தை சர்தார் வல்லபாய் பட்டேல் அன்றே உணர்ந்திருந்தார். உரிய காலத்தில் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கா விட்டால் எப்போதாவது ஒரு நாள் கொம்யூனிஸ்டு சீனு அயல் நாடுகளை, முக்கியமாக இந்தியாவை, ஆக்கிரமிக்க முற்படும். இதைப் புரிந்து கொண்டு பட்டேல் அன்றே சில பாதுகாப்பு நடவடிக்கைகளை செய்து வைக்க முற்பட்டார். ஆனல் பாரதத்தின் துரதிர்ஷ்டம் பட்டேல் சுதந்திர பாரதத்தில் சில ஆண்டுகளே வாழ்ந்தார்.

திரு. பி. சிவராவ் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறர். அக்கட்டுரையில் அவர் மேலும் குறிப்பிடுவதாவது:

கொம்யூனிஸ்டு சீனவின் எதிர்கால அரசியல் வாழ்வு எத்தகையதாக இருக்குமென்பதை உணர்ந்த பட்டேல், இமயமலை எல்லையைப் பலப்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்து உயர்தர அதிகாரிகள் கொண்ட ஒரு நிபுணர் குழுவை நியமித்தார்.

இந்த எற்பாடு 1950ல் செய்யப்பட்டது. இக்குழு சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தது.

கொம்யூனிஸ்டு சீனவினல் இந்தியாவின் பந்தோபஸ்துக்கு ஆபத்து ஏற்படும் என்று அறிக்கை தெளிவாகக்கூறுகிறது. ஆனல் பாரதத்தின் துரதிஷ்டம் அறிக்கை தயாராகுமுன்னர் சர்தார்பட்டேல் காலமாகி விட்டார். எனவே அக்குழுவின் ஆலோசனைகள் அனைத்தும் அப்படியே தேங்கிவிட்டன.

திரு. கிருஷ்ண மேனன் 1954-ம் ஆண்டு அரசியல் அரங்கில் இறங்கினர். கிருஷ்ண மேனனின் அரசியல் பிரவேசத்தின் பின்னரே இந்திய—சீன ஒப்பந்தம் ஏற்பட்டது.

மக்மகான் எல்லைக்கோட்டையேற்றுக் கொள்ளுமாறு சீனவிடம் கோரவேண்டுமெனவும் சிக்கியாங்கில் இந்திய காரியாலயம் ஒன்றை நிறுவ அனுமதி பெற வேண்டுமெனவும் வெளிவிவகார இலாகா உயர்தர அதிகாரிகள் வற்புறுத்தினர்கள். ஆனல் பாரதப் பிரதமர் நேரு இதில் வேண்டிய கவனம் செலுத்தவில்லை.

அதன் பின்னர் நான்கு வருடங்களுக்கு சீனவுடன் நல்லுறவு இருந்து வருகிறதென பாரதப் பிரதமர் மக்கள் சபையில் பேசி வந்தார். ஆனல் லடாக் பிரதேசத்தில்

(15-ம் பக்கம் பார்க்க)

அரசாங்க ஊழியர்கள்

# சிங்களத் தேர்வின்றியே சோதனை எடுக்கலாம்

சிங்களத்தில் தேர்ச்சி பெருவிடில், எழுது வினைஞர் 2-ம் வகுப்புச் சோதனை எடுக்க முடியாது என்றிருந்த நிலையில் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. உத்தியோக மொழியில் தேர்ச்சியற்றதனல் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டவர்களுக்கும், சோதனை எடுக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அரசாங்கத்துக்கு இது சம்பந்தமாக திரு. செல்வநாயகம் பலமுறை எடுத்துக் காட்டிய பின்னரே இம்மாற்றம் ஏற்பட்டுள்ளது.

உத்தியோக மொழியான சிங்களத்தில் தேர்ச்சிபெருத எந்த ஒரு அரசாங்க ஊழியருக்கும் 2-ம் வகுப்புசோதனை எடுக்க முடியாத நிலை இதுவரை இருந்து வந்தது. அதேபோன்று சிங்கள மொழித் தேர்வில் சித்தியடையாத எவ்வுத்தியோகத்தருக்கும் சம்பள உயர்வோ, பதவி உயர்வோ கொடுபடவில்லை. திறைசேரியினல் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்கள் இவற்றை உறுதிப் படுத்தியிருந்தன.

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் மேற்படி சுற்று நிருபங்களால் அரசாங்க ஊழியர்களுக்கு ஏற்பட்டிருந்த சங்கடங்களை யிட்டு அரசாங்கத்துக்குப் பலமுறைஎடுத்துக் காட்டியதன் பேரில் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

மொழிக் கொள்கை காரணமாக இரண்டாம் வகுப்பு பரீட்சைக்குத் தோற்ற முடியாதிருந்த அரசாங்க ஊழியர்களும், சம்பள உயர்வு பெறமுடியாதிருந்தவர்களும் இனிமேல் சோதனை எடுக்கலாம், சோதனைக்குத் தோற்றுவதற்கு சிங்கள மொழித் தேர்ச்சியின்மை ஒரு இடையூருக விருக்காதென திரு. செல்வநாயகம் அவர்களுக்கு திறைசேரியிலிருந்து ஒரு பதில் கிடைத்துள்ளது.

# பூவலடிக்குப் பொழுதுபட வா எனச் சொல்லுகிருள் சந்தன நிறத்தழகி!

“ஜெயம்”
(எட்டியாந்தோட்டை)

கிராமிய இலக்கியம்

அவன் கட்டழகன். அவள் கட்டழகி. ஒத்த இரு உள்ளங்கள் காதல் உறவு கொண்டன. பின் களவுதானே!

ஒருநாள் இருவரும் ஒரு இரவுக்குறி வைத்திருந்தனர். அவள் வருவதாக வாக்குறுதி தந்திருந்தாள். குறித்த இடத்துக்கு, குறித்த நேரம் வந்தான் அவன். நின்ருன், நின்ருன். என்ன பிரயோசனம்! அவள் வரவேயில்லை.

மறுநாள் காலை. அவன் குளித்துக் கொண்டிருந்தான் குளத்தருகில். அவளும் இடையிலே குடமிருக்க, இலாவகமாய் அதுவாட, வந்தாள். ஆனல், அவன் கண்டாலும் காணுதவன் போல் இருந்தான். ஆமாம். பொய்க் கோபம். மறுபக்கம் திரும்பிக் கொண்டான். அவளும் அவனைக் கண்டாள். தன் குற்றத்தை உணர்ந்தாள். அவள்தானே முதலில் பேச வேண்டும். “என்ன முதுகைத் தடவிப் பார்க்கிறீர்கள்?” என்று கொஞ்சு மொழியாள் கேட்டாள். அதன் பின்னும் அவனல் மௌனம் சாதிக்க முடியுமா? முந்தின நாள் இரவு அவன் அனுபவித்த அவஸ்தையை—மனத்திலும்—உடலிலும்தான்— சொன்னன். எப்படி? இப்படி—

கடித்த நுளம்பும்—நான்
காத்திருந்த மூலையும்
அடித்த மழையும்—
எனக்கொரு
ஆள்வேணும் சொல்லி யழ!

ஐயோ பாவம்! காதலிக்காகக் காத்திருந்தான். நுளம்பு கடித்தது. மழையும் அடித்தது. என்ருலும் காத்திருந்தான். அந்த நுளம்புக் கடிகளின் தழும்புகளைத் தான் தடவிக்கொண்டிருந்தான் குளத்தருகில்!

இரக்கம் பிறந்துவிட்டது, அவளது மனதில். என்ன நினைத்துக் கொண்டாளோ என்று எண்ணி—இன்று வா என்று கூறும் முகமாக அந்தச் சந்தன நிறத்தழகி கூறுகிருள்:

சந்தன மரத்தைச்
சந்திக்க வேண்டுமென்ருல்
பூவலடிக்குப்
பொழுதுபட வா மயிலார்—

அவளைச் சந்தி[illegible] இவன் தயங்குவான்? அவளின் கண் வீச்சிலே [illegible]டவனாயிற்றே! ஆனல் ஏனே கொஞ்சம் தயங்கினன்.

ஆமாம்! ஏதாவது இடக்காகச் சொல்லியாவது அவள் வரவை நிச்சயப்படுத்த வேண்டும் என்று எண்ணினன் அவன். சூடு கண்ட பூனையல்லவா அவன்? நேற்றிராப்போல் நடந்துவிட்டால்?


ஆகையால் சொல்லுகிருன்:

கதைப்பாய் சிரிப்பாய் மச்சி
கல்லுருகி நெல் விளைய—நீ
சிரிப்பாய் கொடுப்பாலே—உன்
சொல்லையுமே நம்புறது?

அவள் மனம் துணுக்குற்றது. என்ன செய்வாள்? தன்னிடம் தன் காதலன் கோபித்துக் கொண்டானே என்று எண்ணினள். மன்னிப்புக் கேட்பதுபோல் துடியிடையாள் கூறத்தொடங்கினள். நேற்றிரவு காவல் அதிகம், ஆனல் இன்று அப்படி ஒன்றும் இருக்காது என்று சொல்லத் தொடங்கினள்:

தாயாருமில்லை மச்சான்
தகப்பன் வெடி காட்ட
அண்ணன் திணைக்
காவல்—என்
ஆணிமுத்தே வா மயிலார்!

என்று அவள் கூறியதும், உருகியது அவன் மனம். “ஆணிமுத்தே” என்று [illegible] இதன் பின் [illegible]? பேசத்தான் தேவையா? அந்த நாள் இரவு—!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1962 டிசம்பர் மாதம் 9-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## புதிய திட்டங்கள்

இலங்கை நிதி நிலைமை படுமோசம் — மோசமில்லை. பொருளாதார நெருக்கடி உண்டு — இல்லை. அரிசிப் பங்கீடு வெட்ட வேண்டும் — வேண்டாம். பண வீக்கத்தால் ஆபத்து ஏற்படும் — ஏற்படாது.

ஒன்று திறைசேரியின் கருத்து. மற்றது புதிய நிதி மந்திரியின் கருத்து. நிதி அமைச்சில் கெடுபிடிப் போர். திறைசேரிக் காரியதரிசியும் மந்திரியும் மோதல். கருத்து வேற்றுமை. மத்திய வங்கியும் மந்திரியின் கருத்து தவறு என்கிறது.

யார் கூறுவது உண்மை? யார் கூற்றை மக்கள் நம்புவது? 'வெளிநாட்டு செலாவணி நிலைமை மிக மோசம். அரிசிப் பங்கீடு வெட்டு அவசியம் வேண்டும். என்று இன்னமும் சொல்லித் திரிகிறார் முன்னாள் நிதி மந்திரி.

அடுத்த மாதம் முதல் அனைவரும் அரைப் பட்டினி என்பது அவரது கண்டு பிடிப்பு. 'அரிசிப் பஞ்சம் வராது' என்கிறார் உணவு மந்திரி. இதில் எந்த மந்திரி கூறுவது சரி?

அரசாங்கப் பாராளுமன்றக் குழு நிதி மந்திரியின் புதிய திட்டத்தை ஏற்றது. அடுத்த நாளே அதனைத் திருத்தியது மந்திரி சபை. இனி இந்த எம். பி.க்கள் என்ன செய்வார்கள்? அவர்களின் முடிவுகளுக்குத் தான் அரசாங்கத்தில் மதிப்பில்லையே! அவர்கள் வெறும் "ஆமாம் சாமிகள்" தானா? அவர்களிடமிருந்து தானே மந்திரி சபை அதிகாரம் பெற்றுள்ளது? மந்திரி சபை இதை எப்படி மறந்ததோ?

இந்த நிதி மந்திரியின் போக்கே தனி! புள்ளி விபரங்களையோ, நிதி நிலைமையையோ ஆராய்வதில்லை. அதில் அவருக்கு அக்கறையும் இல்லை. தேர்தல் கண்ணோட்டத்தில் பிரச்சினையைத் தீர்க்க வழி தேடுகிறார். கட்சியின் செல்வாக்கைப் பாதுகாப்பதே அவரது முயற்சி. அதற்கேற்ப திட்டம் வகுக்கிறார்.

பண வீக்கத்தின் விளைவை அவர் சிந்திக்கவில்லைப் போலும்! இயந்திரத்தை முடுக்கிவிட்டு நோட்டுக்களை அச்சிடலாம், அதில் ஆபத்தில்லை, பிரச்சினை தீர்ந்துவிடும் என்று கருதுகிறாராம் நிதி மந்திரி. எல்லாம் திரு. கலேகம என்பவரின் புத்திமதியாம்.

பண வீக்கம் ரூபாயின் மதிப்பைக் குறைத்து விடும், விலைவாசிகளை உயர்த்தும் என்பதை மந்திரி உணரவில்லையா? ரூபாயின் மதிப்பு ஏற்கனவே 25 சதத்துக்குக் குறைவு. இனி அது 10 சதமாகிவிடலாம். விளைவு, சாமான் விலை விஷம்போல ஏறுவது தான். 10 சதம்பெறுமானமுள்ள சாமானுக்குஒரு ரூபாய் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

நாணய நோட்டுப் பெருகினால் நெருக்கடி பெருகும். வாழ்க்கைச் செலவு சிறகு கட்டிப் பறக்கும். இது மந்திரிக்குத் தெரியாதா?

நெருக்கடி தீர மந்திரி சபை சில திட்டங்களை வகுத்துள்ளது. அவற்றிலொன்று வட கீழ் மாகாண மக்களுக்கு —மற்றும் மூன்று மாகாணங்கள் உட்பட— அரிசிக்குப் பதில் நெல் கொடுக்கப்படுவதே. அதனை அரிசியாக்கும் செலவு கொத்துக்கு 5 சதத்துக்கு மேலாகும். எனவே ஒரு கொத்தின் விலை 30 சதமாகிவிடும். கொத்துக்கு 5சதம் கூடி விடும். இது முற்றிலும் அநீதியாகும். ஒரு பகுதி மக்கள் மட்டும் ஏன் இந்த அதிகப் பளுவைச் சுமக்கவேண்டும்? இது பாரபட்ச நடவடிக்கையல்லவா?

இதர மாகாணங்களுக்கு அரிசி அனுப்பும் செலவை அரசாங்கம் மேற்கொள்ளுகிறது. வட இலங்கைக்கு அரிசி அனுப்பும் செலவை மட்டும் மக்கள் மீது சுமத்த முயற்சிகள் நடைபெறுகின்றனவாம். இது உண்மையாயின், பெரும் அநீதியாகும்.

## கலாசாலையை மூடும் மற்றொரு முயற்சி

முஸ்லிம் கல்வி வளர்ச்சிக்கு ஓங்கி ஓர் அடி கொடுத்தது கல்வி அமைச்சு. முஸ்லிம் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளை மூடி விடுவோம் என்று மிரட்டியது. பொங்கியெழுந்தனர் தமிழ் பேசும் மக்கள். கிளர்ச்சி வலுத்தது. கடைசியில் மூடு விழா முயற்சி கைவிடப்பட்டது. சில தினங்களுக்கு முன்பு தான் இச் சம்பவம் நிகழ்ந்தது.

இன்று மீண்டும் அதே தாக்குதல் — ஆனால் மற்றோர் உருவத்தில். கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையை மூடிவிட முயற்சி நடைபெறுகிறது.

அதிகமான கல்வி நிலையங்களைத் திறப்பதா? ஏற்கனவே உள்ள கல்வி நிலையங்களையும் மூடி விடுவதா? மக்களின் கல்வி அறிவை வளர்க்கும் இலட்சணம் இது தானா? கல்வித் துறையில் சிறுபான்மையோரை நசுக்குவதே கலாசாலைகளை மூடுவதின் நோக்கம். கல்வி விருத்தியைத் தடை செய்தல் ஒரு படு பிற்போக்கான செயல்.

கல்வியில் தமிழ் மக்கள் முன்னேற்றத்தைச் சிங்கள வகுப்பு வாதிகள் விரும்பவில்லை. "விஞ்ஞானக் கல்வியில் தமிழர் முன்னேறுகின்றனர். சிங்களவர்களுக்கு அந்த வாய்ப்பில்லையே!" என்ற வகுப்பு வாதக் கூச்சல் தெற்கே கிளம்பியுள்ளது,

"வட இலங்கைப் பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் உண்டு. சிங்களப் பகுதி [illegible] அந்த வசதிகள் இல்லையே!" என்று அங்கலாய்க்கிறார் ஓர் அரசாங்க எம். பி. இது பொறாமைக் காய்ச்சல். இந்த விஞ்ஞான ஆய்வுக் கூடங்களையும் மூடிவிட முயன்றாலும் ஆச்சரியமன்று.

எப்படியோ தமிழ் பேசும் மக்களின் கல்வி வளர்ச்சியைத் தடுக்கவேண்டும் என்பதே இக் கும்பலின் ஆசை.

கோப்பாய்க் கலாசாலையை மூடும் முயற்சி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆத்திரத்தைக் கிளறிவிட்டுள்ளது. இதனைத் தமிழ் பேசும் மக்கள் அனுமதிக்கவே மாட்டார்கள். ஆசிரியர் உலகம் முழுமூச்சுடன் எதிர்க்கும் என்கிறார் அகில இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர். கோப்பாய் பிரதிநிதி தலைமையில் கண்டனக் கூட்டமும் நடைபெற்றது. யாழ். மாநகர சபையிலும் கண்டனத் தீர்மானம் வருகிறது.

சிங்கள ஆட்சியாளர் தமிழ் பேசும் இனத்திற்கு இழைத்த அநீதிகள் அனந்தம். கலாசாலைகளை மூடுவதும் அவற்றிலொன்றுதான். கல்வி விருத்தியைத் தடுக்கும் முயற்சி இது. தமிழ் பேசும் சமுதாயம் ஒரே குரலில் இதனை எதிர்த்து ஆட்சேபம் எழுப்ப வேண்டும். அநீதிகளை [illegible] கலாசாலையை மூடும் முயற்சியைக் கிள்ளியெறிய வேண்டும்.

# சீனர்களின் உளவு நடவடிக்கைகள் தீவிரம்

## கொழும்பு மகாநாடு பற்றி இந்தியா உற்சாகம் காட்டவில்லை

இந்திய அரசாங்கம் எல்லைப்புற மக்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்து ஆயுத பாணியாக்கிறது. எந்த அரசாங்கமும் பொது மக்களை ஆயுத பாணியாக்குவதில்லை. அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக ஆயுத புரட்சியில் இறங்கி விடுவார்களென்ற பீதிதான் காரணம். ஆனால் இந்திய அரசு மக்கள் மீது பூரண நம்பிக்கை வைத்துள்ளது. மக்களும் அரசாங்கத்தின் தலைமையில் ஒன்றுகூடி நிற்கின்றனர். ஆகவே மக்களை ஆயுத பாணியாக்குவதில் இந்திய அரசாங்கம் முனைந்துள்ளது.

இதனால் ஒவ்வொரு இந்தியனையும்எதிர்த்துப்போராட வேண்டிய நிலை சீனாவுக்கு ஏற்பட்டுள்ளது.

### தீவிர உளவு வேலைகள்

அஸாமிலும், வடகிழக்கு எல்லைப் பிராந்தியத்திலும் ('நேபா') சீனர்களின் உளவு வேலைகள் விரிவான முறையில் மிகத் தீவிரமாக நடைபெறுகிறதாம்.

இது சம்பந்தமாக இந்தியப் பாராளுமன்றத்தில் சரமாரியாகக் கேள்விகள் கேட்கப்பட்டன. அஸாமிலும், நேபாவிலும் மட்டும் சுமார் 1750 சீனர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் அநேகர் உளவு பார்த்தவர்கள் என்று சந்தேகிக்கப் பட்டனர்.

திபேத்திய அகதிகளாக இந்தியாவுக்கு வந்த சீனர்களும் வேவு பார்க்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனராம். இந்தப் பிராந்தியத்திலுள்ள சீனர்களின் ஹோட்டல்களும், தேநீர்க் கடைகளும் உளவு பார்க்கும் நிலையங்களாக உபயோகிக்கப்பட்டு வந்ததால் அவை மூடப்பட்டு விட்டன.

மலைப் பகுதி இந்தியர்களை மணந்து கொண்டுள்ள சீனப் பெண்கள் திறமையாக உளவறிந்து எதிரிகளுக்கு தகவல் அனுப்புவதாகக் கூறப்படுகிறது. நேபாவிலிருந்து வந்த அகதிகளுடன் சீன யுவதிகளும் வேவு பார்க்கின்றனராம்.

சீனாவின் "உளவு-வளையம்" ஒன்று நேபாவைச் சுற்றி அமைக்கப்பட்டுளதாம். நாடு பூராவிலும் ஆங்காங்கு உளவுக் கோஷ்டிகள் திறமையாக இயங்கி வருவதாகவும், கொம்யூனிஸ்டுகள் அவர்களுக்குப் பூரண ஆதரவளிப்பதாகவும் கூறப்படுகிறது.

வெளிவிவகார ராஜாங்க மந்திரிதிருமதி லட்சுமிமேனனுடன் சிங்கப்பூரிலிருந்து சென்னைக்கு விமானத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்த வெளிவிவகார இலாகா டைரக்டர் திரு. கோபாலே விமானத்தில் வைத்துத் தாக்கிய பியரிலால் என்னும் இந்திய அயல்நாட்டு இலாகாவைச்சேர்ந்த அதிகாரி ஒரு சீன உளவாளி என்றும் கூறப்படுகிறது.

அது பற்றி விசாரணை நடைபெறுவதாக நேருஜி அறிவித்தார்.

### நீறுபூத்த நெருப்பு

சீனா—இந்திய யுத்தம் இன்று நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது.

யுத்த நிறுத்தம், சீனப் படை வாபஸாவதாகப் பாசாங்கு, சமரசப்பேச்சுக்கு சீனாவின் நிபந்தனை, சமரசப் பேச்சுக்கு இந்தியாவின் நிபந்தனை, நடுநிலைமை நாடுகளின் முயற்சி, கொழும்பு மாநாடு, இந்திய இராணுவத்தைப் பெருமளவு பலப்படுத்துதல் ஆகியவைதான் இன்றைய நிலைமை.

இதன் முடிவு என்ன? இராஜ தந்திர நடவடிக்கைகளின் விளைவு என்ன? மீண்டும் யுத்தம் ஆரம்பமாகுமா?

இராஜதந்திர நிர்ப்பந்தங்களின் விளைவாகச் சீனர்கள் வாபஸ் வாங்கப் போவதில்லை யென்றும் பலாத்காரமாக அவர்களைத் தள்ளிக் கொண்டுபோய் எல்லைக்கு அப்பால் விரட்டி விடவேண்டும் என்பதும் தான் இந்தியத்தலைநகரில்இன்று நிலவும் கருத்து என்று ஒரு செய்தி கூறுகிறது.

### கொழும்பு மகாநாடு

கொழும்பு மாநாட்டைச் சீனப் பிரதமர் சூ-என்-லாய் பெரிதும் வரவேற்றுள்ளார். ஆனால் மகாநாட்டுக்குத் தற்போது அழைக்கப்பட்டுள்ள ஆறு நாடுகளைத்தவிர வேறு நடுநிலைமை நாடுகளை அழைக்கக்கூடாதெனச் சீனா தெரிவித்ததாக ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

இது அரசியல் வட்டாரங்களில் ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது அப்படியானால் இந்த ஆறு நாடுகளுக்கு அழைப்பு அனுப்புவதை முன் கூட்டியே சீனா அறிந்திருந்ததா என்பது அந்தக் கேள்வி. இம் மகாநாடு திரு. சூவுக்கு நன்மை பயப்பதாக இருக்கலாமென்றும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

நேருஜி இம் மகாநாட்டைக் குறித்து அதிகம் உற்சாகம் காட்டவில்லை. அவர் தமது பிரதிநிதிகளான திருமதி லட்சுமி மேனனையும், திரு. ஆர். கே. நேருவையும் அந்த ஆறு நாடுகளுக்கும் அனுப்பி நிலைமையை விளக்கிக் கூற ஏற்பாடு செய்தார். இம்மகாநாட்டை வரவேற்று அவர் ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை.

இம் மகாநாட்டின் முடிவுகள் எல்லைத் தகராறைத் தீர்க்க எவ்வளவு தூரம் உதவுமென்று தற்போது கூறுவதற்கில்லை.

### இந்திய - பாக் பேச்சு

நேரு - ஜனாதிபதி ஆயூப்கான் கூட்டறிக்கையையொட்டி, இரு தேச மந்திரிகளின் மகாநாடு ஒன்று காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாக விவாதிப்பதற்காக இம்மாத இறுதியில் நடைபெறலாமென்று தெரிகிறது. டிசம்பர் மூன்றாம் வாரத்தில் மகாநாடு நடைபெறக் கூடியதாகத் திகதியும் இடத்தையும் நிர்ணயிக்குமாறு பாகிஸ்தான் இந்தியாவைக் கேட்டுள்ளது.

இந்த மகாநாட்டுக்குப் பின்னர் நேரு - ஆயூப் சந்திப்பு நடைபெறும். அவர்கள் சம்பாஷணை நடைபெறும்போது பிரிட்டிஷ் உதவி காமன் வெல்த் மந்திரி திரு. டன்கன் சான்டிஸும் சம்பாஷணைக்கு உதவிபுரிவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியப் பாதுகாப்பு நிதிக்காக புது டில்லிக்கு இது வரை ரூ. 10 கோடிக்கு மேல் கிடைத்துள்ளதாம்.

### புத்த பிக்கு வேடத்தில் சீனத் துருப்புகள்

இந்திய—சீன எல்லைப் போராட்டத்தில் சீனர்கள் கையாண்ட நயவஞ்சகத் தந்திரங்களில் ஒன்று, புத்த பிக்கு வேடமணிந்து வந்து இந்திய வீரர்களை ஏமாற்றியது ஆகும். 'சேலா' என்ற இடத்தில் நடைபெற்றது இச்சம்பவம். 'மொம்பா' என்ற மலைஜாதியைச் சேர்ந்த புத்த பிக்குகள் போல, மஞ்சள் அங்கி அணிந்து இந்திய வீரர்கள் இருந்த இடத்திற்கு, சீனர்கள் வந்தார்கள். புத்த சந்நியாசிகள் தானே என்று இந்திய வீரர்கள் ஒன்றும் பேசாது இருந்தனர். இந்திய வீரர்களை நெருங்கியதும், சீனர்கள் காவி உடைகளில் மறைந்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்துச் சுட்டார்கள். இந்திய வீரர்களால் ஏதும் செய்ய முடியவில்லை. இதன் காரணமாக 'சேலா' பகுதியில் உள்ள காவல் நிலையம் துண்டிக்கப்பட்டது.

## நாடற்றவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வகுப்பு வாதப் பிரசாரத்தை ஆரம்பிக்குமுன்பு இரு முக்கிய சட்டங்களை அரசாங்கம் இயற்றும் என்று தெரிகிறது. ஒன்று பிரஜைகளைப் பதிவு செய்யும் மசோதா — மற்றொன்று தோட்டங்களில் சிங்களவர்களை (இலங்கையரை)வேலைக்கமர்த்தும் மசோதா. இவ்விரண்டையும் சட்டமாக்கி விட்டு, அவற்றை அமுல் நடத்துவதற்காகச் சிங்களவர்களின் ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு வகுப்பு வாத உணர்ச்சி தூண்டி விடப்படலாமென்றும் அஞ்சப்படுகிறது.

இவ்விரு மசோதாக்களையும் சட்டமாக்கிவிட வேண்டுமென்பதில் அரசாங்கம் தீவிரமாயிருக்கிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தந்திச் சேவைக்கு புத்துயிர்

## சுதந்திரன் செய்தியால் உரிமை நிலைத்தது

தமிழில் கடிதங்கள், முகவரிகள் எழுதுவதுடன், தமிழில் தந்தி அனுப்ப வேண்டுமென்ற ஆர்வம் தமிழ் பேசும் மக்களிடம் ஏற்பட்டு வருகிறது. தமிழில் தந்தி அனுப்ப வசதியிருந்து, அதை உபயோகிக்காத காரணத்தால் அவ்வசதி அற்றுப் போகவேண்டிய நிலையேற்பட்டிருந்தது. 'சுதந்திரன்' மூலம் விடுத்த வேண்டுகோள் இப்பொழுது நல்ல பலனை அளித்து வருகிறது. தமிழில் தந்தி அனுப்புவோர் தொகை பெருகி வருகிறது.

தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்துடனும், வேறு தங்கள் நண்பர்கள் உறவினர்கள் முதலியவர்களுடனும் தமிழிலேயே தொடர்பு கொள்ள வேண்டுமென்று தமிழரசுக் கட்சியும், எல்லாம் தமிழ் இயக்கம் போன்ற தனிப்பட்ட சங்கங்களும் கோரி வந்தன. இக்கோரிக்கைக்கு தமிழ் பேசும் மக்கள் குறிப்பிடத் தக்க வகையில் செவிசாய்த்து வந்தனர்.

தமிழில் தந்தி அனுப்புவதற்கேற்ற வசதிகள் இருந்தும் கூட, அதிகமானவர்கள் தமிழில் தந்தி அனுப்புவதில்லை. தொடர்ந்து ஆங்கிலத்திலேயே தந்திகளை அனுப்பி வந்தனர். தமிழ் தந்தி அனுப்புவதற்காக நியமிக்கப்பட்ட பல தமிழ் எழுது வினைஞர்களுக்கும், ஊழியர்களுக்கும் வேலை இல்லாதிருந்து வந்தது. தமிழில் தந்தி வசதியைப் பெரும்பாலானோர் புறக்கணிப்பதாகவும், அதற்காக நியமிக்கப்பட்ட தமிழ் உத்தியோகத்தர்களை வேறு பகுதிக்கு மாற்றப் போவதாகவும் தபால் இலாகாவினர் கூறியிருந்தனர்.

தமிழில் தந்தி அனுப்புவதை தமிழ் பேசும் மக்கள் தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டுமென்று சில வாரங்களுக்கு முன்னர் 'சுதந்திரன்' ஒரு வேண்டுகோள் விடுத்தது. இதைத் தொடர்ந்து நாட்டில் இப்போது தமிழில் தந்தி அனுப்புவது கணிசமான அளவு உயர்ந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தொலைபேசிகள் மூலமும் தமிழில் தந்தியை அனுப்புவதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்பேசும்மக்களால் இயக்கப்படும் வியாபார ஸ்தலங்கள் இம்முறையினை நன்கு பயன்படுத்த வேண்டுமென்று 'சுதந்திரன்' மீண்டும் வேண்டுகோள் விடுக்கிறது.

## திருமணங்கள் சாட்சியாக....

தமிழில் தந்தி அனுப்புவோர் தொகை குறைவதை 'சுதந்திரன்' சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் எவ்வளவு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது என்பதை இப் புள்ளி விபரங்களினால் அறியலாம்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற திருமணத்தின்போது வெளியாகிய உண்மைகள் இவை.

| 'சுதந்திரன்' செய்திக்கு முன்னர் நடைபெற்ற திருமண வீட்டுக்கு வந்த தந்தி விபரம்:- | | 'சுதந்திரன்' செய்தி வெளியான பின்னர் நடைபெற்ற திருமண வீட்டுக்கு வந்த தந்தி விபரம்:- | |
|---|---|---|---|
| ஆங்கிலம் — | 47 | ஆங்கிலம் — | 22 |
| தமிழ் — | 2 | தமிழ் — | 15 |

## ஆங்கில அவசரத் தந்தியை முந்திய தமிழ்த் தந்தி!

தமிழில் தந்தி அனுப்பத் தயங்கும் தமிழர் பலருளர். தமிழில் அனுப்பினால் காலதாமதமாகும், குறித்த இடம் போய்ச் சேர மாட்டாது என்று கூறுபவர்களுக்கும், தமிழில் தந்தி அனுப்ப வெட்கப்படுபவர்களுக்கும் சாட்டையடி கொடுக்கும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றிருக்கிறது.

கொழும்பிலிருந்து ஆங்கிலம் தெரியாத வியாபாரி ஒருவர் யாழ்ப்பாணத்திலிருக்கும் தன் தம்பிக்கு ஏதோ பண விடயமாக ஒரு அவசரச் செய்தி அனுப்ப நேரிட்டது. அவசரமானதால் தந்தியை ஆங்கிலத்தில் அடிக்கவேண்டும் என்று எண்ணி கஷ்டப்பட்டு ஆங்கிலம் தெரிந்த ஒருவரைப் பிடித்து தந்தியை அவசரத் தந்தியாக அனுப்பினார். இது நண்பகல் 12 மணிக்கு நடந்தது. இதே நபர் வேறுவிடயமாக அவர் யாழ்ப்பாணம் போவதாக முடிவு செய்து தன் தம்பிக்கு மற்றுமொரு தந்தி அனுப்பினார். ஆங்கிலம் தெரிந்தவரின் உதவி கிடையாத காரணத்தால் சாதாரண தந்தியை தயக்கத்துடன் தான் தமிழிலேயே அடித்தார். இது பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

மறுநாள் விடியற்காலை யாழ்ப்பாணம் வந்தடைந்த வியாபாரியார் தமிழ்த்தந்தி கிடைத்ததா? என்று வினவினார். முதல் நாள் மாலையே கிடைத்து விட்டதே என்று தம்பி பதில் கூறினார்.

அவசர ஆங்கிலத் தந்தியைப் பற்றிவிசாரித்தபோது தம்பி அப்படித் தனக்கு ஒரு தந்தியும் கிடைக்கவில்லை என்று கூறினார். வியாபாரியார் திகைத்தார். வீட்டையடைந்தபோது வாசலில் மணியோசை கேட்டது. அவசர ஆங்கிலத் தந்தி அப்போதுதான் வந்திருந்தது.

## படை திரட்டுவோம், பணம் திரட்டுவோம் பண்டிதரின் கையைப் பலப்படுத்துவோம்!

### தி. மு. க. நிதி சேகரிப்புக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா

### ஒரே கூட்டத்தில் 35,000 ரூபாய் சேர்ந்தது

பண்டித நேருவின் நடுவுநிலைமைக் கொள்கை நல்லதா? கெட்டதா? என்பதைவிட்டு ஆராய்ச்சி பண்ணுவதற்கு இது உகந்த நேரமில்லை. இந்த ஆராய்ச்சியை விட்டு சேரிடம் அறிந்து சேர்வதே நல்லதாகும். இது போர் நேரம், புறம் பாணவற்றை நீக்கிவிடுவோம். இது வாதாடும் நேரமல்ல; படை சேர்க்கு[illegible] நேரம். பணப்பலம் சேர்க்கும் காலம்.

இவ்வாறு அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் நடந்த தி. மு. க. பாதுகாப்பு நிதி திரட்டும் கூட்டத்தில் கூறினார்.

இந்த ஒரே கூட்டத்தில் மட்டும் பாதுகாப்பு நிதிக்கு மொத்தம் 35,000 ரூபாய் சேர்ந்தது.

இலட்சக் கணக்கானவர்கள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு அண்ணாவிடம் பாதுகாப்பு நிதிக்கு பொன்னும் பொருளும் அள்ளித் தந்தனர். சிலபெண்கள் தங்கள் திருமாங்கல்யத்தையே அண்ணாவிடன் கழற்றிக் கொடுத்தது நெஞ்சைத் தொடுவதாக இருந்தது.

"தி. மு. கழகம் எடுக்கும் முயற்சி எதுவும்—அது அரசாங்கத்தை ஆதரிப்பதானாலும் சரி, எதிர்ப்பதானாலும் சரி, அதை திறம்படச் செய்யும் என்பதை நிரூபித்துவிட்டார்கள்! இந்திய உபகண்டத்தின் சரித்திரத்திலேயே தி. மு. கழகம் ஒன்றுதான பொதுக் கூட்டத்தின் மூலம் இவ்வளவு பெருந்தொகையைத் திரட்டியது. இதை பெருமைக்காக கூறவில்லை!

நம் கழகத் தோழர்களில் சிலருக்கு, பாதுகாப்பு வேலையில் முழுக்க முழுக்க இறங்கினால், கழகம் என்ன ஆவது என்ற கவலை பட்டுள்ளது. அந்தப் பயம் தேவையில்லை. சர்க்காரை எல்லைப் பாதுகாப்பு விஷயத்தில் ஆதரிப்பது என்று நாம் எடுத்த முடிவை டில்லியிலே, பண்புள்ளவர்கள் பலர் பாராட்டுகிறார்கள். கழகம், பாதுகாப்பு வேலையில் ஈடுபடுவதால் குலைந்து விடும் என்று யாரும் கவலைப்படத்தேவையில்லை.

உணர்ச்சிகளை அதிகம் வெளிக்காட்டாத லால்பகதூர் சாஸ்திரியாரே, கழகத்தை ராஜ்ய சபையில் பாராட்டியிருக்கிறார்கள். எனவே பண்பு தெரிந்தவர்கள் நம்மைப் போற்றுகிறார்கள்; அது இல்லாதவர்கள் குறை கூறுகிறார்கள்! வானத்தில் தாரகை சுடர் விடும் போது அகல் விளக்கு அணைவது பற்றி என்ன கவலை?

படைபலம் கொண்டவர்களும் வெற்றி பிடித்தவர்களுமான சீனர் எல்லையைக் கைப்பற்று மட்டும் தொடங்கிய போராக இதை நாம் கருதமுடியாது! யுத்தப்பயிற்சி இல்லாத இந்திய மக்களை, எளிதில் கைப்பற்றிவிடலாம் என்ற எண்ணத்தில் சீனர்கள் பகற் கனவு காண்கிறார்கள்! இந்த நிலைமை—நம் வாழ் நாளிலேயே ஏற்பட்ட மிகப் பெரிய ஆபத்தானதாகும்.

இத்தனை ஆர்வத்துடன் நீங்கள் அளித்த இந்த தொகை ரூபா 35,000த்தையும், தி. மு. கழகத்தின் சார்பாக, சென்னை அரசினரிடம் நமது நாவலர் அவாகள் கொடுப்பார்கள். இது போல ஏனைய கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு நிதி சேர்த்துக் கொடுக்க முற்பட வேண்டும்."

## நிறுத்தப் பட்டதற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கடிதத்தை அ. இ. தமிழ் ஆசிரியர் சங்கத்துக்கு எழுதியுள்ளார். அக்கடிதத்தின் சுருக்கத்தைக் கீழே தருகிறேப்:

2-12-62ல் நீங்கள் எழுதிய கடிதமும், நிறைவேறிய தீர்மானமும் ஒரு தவறான அடிப்படையிலிருந்து தோன்றியவையாகும். எனது தலையீட்டினாலே தான் 1-1-63ல் நிகழவிருந்த ஆசிரியர் இடமாற்றங்கள் ரத்து செய்யப்பட்டன என்பது முற்றிலும் தவறானது. நான் எந்த மாற்றங்களையும் ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டது கிடையாது.

1-1-63ல் நிகழவிருந்த மாற்றங்கள் யாவும் ரத்து செய்யப்பட்டுள்ளன என்பதை திரு. துரைசிங்கம் அவர்கள் எனக்குக் கூறினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் [யாழ். பிரதிநிதி தவிர] ஒன்றுகூடி இம்மாற்ற விஷயங்களில் ஒரு நல்ல முடிவு செய்து மாற்ற சபைக்கு அறிவிப்போம். அதற்கு முன்னர் ஒரு குறிப்பிட்ட தினத்தில் உங்கள் சங்கப் பிரதிநிதிகளையும் கண்டு கலந்தாலோசிக்க விரும்புகிறேன்.

## கல்லோயாக் கலவரத்தின்போது

## காடையரால் கலைக்கப்பட்டோருக்கு அரசாங்கமும் அநீதி புரிவதா?

கல்லோயாக் கலவரத்தின்போது தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி மக்கள் மீண்டும் தங்களிடங்களுக்குத் திரும்பியபோது அங்கே சிங்களவர்கள் குடியேறியிருப்பதைக்கண்டனர். சிங்களவர்களிடம் சிக்கியுள்ள இடங்களைத் திரும்பப் பெற எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. இந்தக் குடியேற்ற வாசிகளின் இருப்பிட உரிமைகளை ரத்து செய்வது அநீதியாகும். இந்த அநீதியை அகற்றும் பொருட்டு அவர்கள் அன்றுமுதல் தொடர்ந்து கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தில் குடியேறிய தமிழர்கள் பலர் கடந்த காலக் கலவரங்களினால் நிலைபெயர்ந்து செல்லவேண்டியேற்பட்டது. காடையர்களால் துரத்தப்பட்ட அவர்கள் விட்டுச்சென்ற பிரயோசனங்களுடன் கூடிய குடியிருப்பு வீடுகளை சிங்களவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர். அமைதியான சூழ்நிலையேற்பட்டதும், தத்தம் இடங்களுக்கு [illegible] திரும்பியவர்கள், தங்கள் இடங்களை வேறு பலர் அபகரித்துக் கொண்டு, வெளியேற மறுத்ததைக் கண்டு சங்கடப்பட்டார்கள்.

தங்களுக்கு அளிக்கப்பட்ட இடங்களை மீண்டும் பெற்றுக்கொள்ள அரசாங்க அதிபருடனும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டும் இது வரை எதுவித பயனும் [illegible] [illegible] திட்டத்தைச் சேர்ந்த 41 குடியேற்ற வாசிகள் உத்தரவின்றி வெளியேறியதாக குற்றஞ்சாட்டி அவர்களுக்கு அளிக்கப்பட்ட இடங்களை அபகரிக்கப் போவதாக அரசாங்கம் பயமுறுத்தியது.

சிங்களவர்களின் நெருக்கடி காரணமாக வெளியேறிய மேற்படி 41 பேரும் போதிய பாதுகாப்பு அளிக்கப்படும் பட்சத்தில் மீண்டும் சென்று 17ம் இலக்கக் குடியேற்றத்திட்டத்தில் குடியேறுவார்கள் என்று வாக்களித்திருப்பதாகவும், அவர்களுக்கு அளிக்கப்பட்ட இடங்களை விட்டு அப்புறப் படுத்தும் கட்டளை வழங்கப்படுதல் கூடாதென்றும் தமிழரசுத் தந்தை அரசாங்க அதிபருக்கும், காணி அமைச்சருக்கும் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.


## ஆங்கிலம்
ENGLISH
ஆங்கிலப் பாஷையைச்
சிறப்பாக
* பேச
* வாசிக்க
* எழுத
மிகக் குறுகிய காலத்துள் கற்றுக்கொள்ள இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.
அற்லஸ் ஹோல்,
723, மருதானை றேட்,
கொழும்பு-10.



1963
தயாரிப்பு
விலை 1-75 தான்
இவர்களை நாளாந்தம்

லீலா பஞ்சாங்க

சித்திரக்

கலண்டரில் சந்தியுங்கள்
கணிதம்: பிரம்மஸ்ரீ இ. இ. இரகுநாதையர் அவர்கள்
லீலா கலண்டர் டயறிகள் எங்கும் கிடைக்கும்
லீலா ஸ்டோர்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காட்சியைக் கண்டதும் அப்துல்காதர் திகைத்தே போனார்.

அவருடைய எண்ணங்கள் யாவும் ஒன்ருய்த் திரண்டு, பஞ்சுக் கூட்டம்போல் எங்கேயோ மெதுவாக மிதந்து, மிதந்து சென்று கொண்டிருந்தன.

உணர்ச்சிகள் எதுவுமற்ற மரக் குறிபோல அப்படியே ஆடாமல், அசையாமல், பேசாமல் நின்ருர் அவர்.

"காசிம்!......"

அவரையும் அறியாமல் அதரங்கள் மெல்ல அசைந்து இந்தப் பெயரை உச்சரித்துப் பார்த்தன. நினைவுத் திரையில் அவனுடைய அழகு நிறை தோற்றம் வந்து நிழலாடியது.

'மயக்குங் கண்கள்...... சுருண்ட கேசம்......இராச நெற்றி...வட்ட வடிவமான முகம்.........செவ்வானச் சாயை......'

அப்துல்காதருடையஉடல் மெல்ல,மெல்ல வெலவெலப்பைக் குறைத்துக் கொண்டது. சிலிர்த்த உரோமங்கள் படமெடுத்த பாம்பு போல் ஒடுங்கித் தோலுடன் சாய்ந்து கொண்டிருந்தன. உள்ளமும் குமுறலைத் தணித்தது......

தமது காலடியில் மூச்சற்றுப் பேச்சற்றுக் கிடந்த காசிமை ஒரு முறை பார்த்தார் அப்துல் காதர். அவருடைய மார்பு ஒரு தடவைக்கிரு தடவைகளாக விம்மிப் புடைத்தது.

'இந்தக் காசிமா?...இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டான்...சே! நேர்மை, நியாயம், நீதி எதுவுமே அற்ற உலகம்!......முரட்டுச் சாதிங்களட்டை அரசியல் இருந்தால் எவனுக்கும் இந்தக் கதிதான் ஏற்படும்!......'

நினைவு தடுமாறியது!

அப்துல்காதர் அரசியலைப் பற்றி நினைத்துக் கொண்டதும் அவருடைய உள்ளம் உடல் எல்லாம் நடுங்கின. அந்த நேரத்தில் அப்படியே நின்ருல்......யாராவது தன்னைப் பார்த்துவிட்டால்......

காசிமுக்கு நடந்த அதே நிலைதான் தமக்கும் ஏற்படலாமென்றும் எண்ணிஞர்.

பழையபடி அவருடைய நிலை மிகப் பரிதாபமாக இருந்தது.

"இதென்ன?......காலெல்லாங் கசிவு..."

தம்மையே கேட்டுக்கொண்டு குனிந்து பார்த்தார். வீதி நீளம் நாட்டப்பெற்றிருந்த தெருவிளக்குக்களில் ஒன்று அவருக்கு உதவியது.

**போட்டிக் கதை 8.**

# கலங்காத கண்கள்

ஏடு எடுத்தும் படியாமல், கேள்வியால் அறியாமல்.........ஏதோ நீதிகளையெல்லாம் புகட்டும் அந்த இரு காக்கைகளையும் மாறி, மாறிப் பார்த்தார் அப்துல் காதர். பின் — காசிமையும் பார்த்தார்...........!

ஒளியின் உதவியுடன் கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு பார்த்தார் அப்துல் காதர்.

"ஐ......ய்......யோ !...ஹல்லா!......"

அவருடைய வாய் அலறிவிட்டது!

அங்கே—

'தார்' வீதியிற் செங்குருதி பாய்ந்து கொண்டிருந்தது. குண்டுகள் பாய்ந்து, காசிமின் உடலைக் கிழித்திருந்தன.

இரத்த ஆறு ஓடியது!

நெருப்பை மிதித்தவர் போலத் துள்ளி மறு புறம், வந்து காசிமைத் தூக்க முயன்ருர்.

அவரால் முடியவில்லை!

முதுமையின் வீட்டு வாசலைத் தட்டிக் கொண்டிருந்த அப்துல் காதரால், கட்டிளங்காளையான காசிமைத் தூக்க முடியவில்லை.

அந்த ஐந்து சந்தியில் எந்த வீதியில் மனித மிருகங்களுடைய வண்டி வந்து கொண்டிருக்கும் என்று அவரால் சரியாக நினைத்துப் பார்க்க முடியவில்லை. அந்த இடத்தைவிட்டு ஓடி தம்முடைய உயிரைக் காப்பாற்றலாமே? என்ருலும் மனம் ஒருப்படவில்லை.

'வாழவேண்டிய பொடியன் இந்தாப் போயிட்டான் ...நெறிகெட்ட அந்த நீசங்களாலை......இனிமேல் நமக்கெதுக்கு வாழ்வு?...கொஞ்சம் முந்தி என்னோடை என்ன மாதிரியெல்லாம் கதைச்சான்?...இந்தா இன்னைக்கு......'

அப்துல் காதரால் மேற்கொண்டு எதையுஞ் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. நினைவுத் திரையில் அவை மறைந்து கொண்டிருந்தன.

பதிலாக—

அடுத்த திரை விழுந்தது!

தமிழர்கள் தம்முடைய உரிமைக்காக அஹிம்சா வழிப் போராட்டம் நடத்திய வேளையில்......அதற்கு வயது ஐம்பத்தொன்பது நாட்களாக இருந்தபோது ......அவசரகாலச் சட்டமும் ஊரடங்குச் சட்டமும் ஒன்

—அங்கையன்—

ருக நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிரகடனப்படுத்தப்பட்ட அதே நாளில்......

மத்தியான வேளை !

அப்துல் காதர் காசிமைக் கண்டார். அவன் அவருடைய இனத்தவன்தான்...... இருந்தாலும் இதற்கு முன் அவர் அவனுடன் முகங்



கொடுத்துக் கதைத்திருக்கவும் மாட்டார்.

ஐந்து சந்தி என அழைக்கப்படும் அந்த சோனகர் தெருவில் ஒரு மூலையில் அவர் இரும்புக் கடை வைத்திருக்கின்ருர்......

அந்த வழியாற் போய்க் கொண்டிருந்த காசிமைக் கண்டதும் அவருக்குப் புதிய பிரச்சினை தோன்றியது. என்றும் இல்லாதவாறு அவனுடன் கதைக்க வேண்டும் போன்ற ஆசையும் அடி மனதைக் கிளறியது.

"தம்பி......காசிம்!...... எங்கேப்பா போறே"

"எனக்கு எங்கே போகக் கிடக்கிறது காக்கா? சத்தியாக்கிரகஞ் செய்து கொண்டிருக்கிருர்களே!... ...அந்தப் பெரு மக்களுக்குச் சாப்பாடு எடுத்துக் கொடுக்க வேண்டும். அதுதான் போகிறேன் ...நேரமில்லை!..." என்றவண்ணம் தொடர்ந்து நடந்தான் காசிம்.

'வயதில் முதிர்ந்தவர் வழியிலே கதை கேட்கிருரே!... நின்று பதில் கூறிவிட்டுப் போவோம்!' என்று எதுவித எண்ணமும் காசிமிடம் குடிகொள்ளவில்லை.

'கடமை அங்கே காத்திருக்கிறது...பொழுது போக்காமல் இரும்புத் துண்டுடன் அழுது கொண்டிருக்கும் இவருடன் எமக்கு என்ன கதை?...' இப்படியுங் காசிம் நினைக்கவில்லை.

நேரத்தைப் பார்த்தான் காசிம்!

ஒரு மணி!

'ஐ......ய்......யோ! ஆண்டவனே! அங்கே அவர்கள் என்ன கஷ்டப்படுகிருர்களோ? நான் இங்கே நின்று வீணுக நேரத்தைப் போக்காட்டுகிறேன்...' என்ற ஒரே எண்ணந்தான் அவனிடம் இப்பொழுது வந்து புகுந்தது.

மனத்தையும் முந்திக் கொண்டு அவனுடைய கால்கள் கச்சேரி வாசலை நோக்கி வந்து விட்டன.

மக்கள் வெள்ளமே கச்சேரியின் வாசலிலும்—மதிலிலும் வந்து முட்டி நின்றது; வீதி நிரம்பி வழிந்தது. அந்த வெள்ளத்தினிடையே காட்டு மரங்கள் சிலவற்றைப் போல வைத்த விழி வாங்காமற் சில இராணுவ வீரர்கள் நின்று கொண்டிருந்தனர்.

அவர்களைக் காணக் காசிமுக்குஎன்ன செய்வதென்றே புரியவில்லை. பற்கள் ஒன்றுடன் ஒன்று உராய்ந்தன. கண்கள் அகல விரிந்து...... படர்ந்தன.

இராணுவத்தினுடைய உருவத்திலே அநீதியின் பிறப்பிடமான அரசியல் தலைப்பீடமே அவன் முன் காட்சி தருவது போன்ற பிரமை......

'இந்த அறப்போர் தொடங்கப்பட்ட நாளில் மண்டை உடைபட்ட தலைவர்கள் எத்தனை பேர்? மானம் மரியாதை எதுவுமின்றி மாடு, ஆடுகளைப் போல் அடிபட்டவர்கள் எத்தனை?...உடைபட்டவர்கள் எத்தனை...எத்தனை?'

காசிமின் தலையே சுழல்வது போன்ற நினைப்பு!...... ஒரு மூச்சு அடிவயிற்றில் பொங்கி வெளியே வழிந்தோடியது. கவலையில் பாதி......

காசிம் எல்லா வேலைகளும் முடிந்து வீடு திரும்ப நன்ருக இருட்டிவிட்டது.

அவன் ஐந்து சந்தியையும் அடையும்பொழுது ஒன்பது மணியாகிவிட்டது.

வழமைபோல் அப்துல் காதர் தம்முடைய கடையைப் பூட்டிக்கொண்டு உள்ளே சென்ருர். காசிமைக்கண்டதும் அவருடைய மனம் ஒருவித கிளுகிளுப்பை உணர்ந்தது அகத்திலே ஒருவித மலர்ச்சி!......

"வாப்பா! வா! எல்லாம் முடிஞ்சு போச்சா?......இப்பிடியே நீ அலைஞ்சாக்கா என்னதான் நடக்கப் போகுது?......அவர்கள் உங்கடை உரிமையைக் கொடுக்கத்தான் போராங்களா? என்ன?"

காசிமுக்கு வந்த கோபத்திற்கு அளவேயில்லை! அடக்க முயன்ருன்; முடியவில்லை.

"இந்தா காக்கா: எனக்கு மட்டும் இரத்தந் துடிக்கயில்லை. இலங்கையில......இந்தியாவில் ஏன்? இந்த உலகத்தில் உள்ள அத்தனை தமிழருடைய இரத்தமுந்தான் துடிக்கிறது. மொழிக்காகத் தன்னுடைய உயிரையே தியாகஞ் செய்ய எந்த மானமுள்ள தமிழனும் மறுக்கமாட்டான்! அவர்கள் எங்களுடைய உரிமைகளை எங்களிடமே விடத்தான் போகிருர்கள். இன்னும் இரண்டொரு நாளையில் அதுவுந் தெரியத்தான் போகிறது!"

"தம்பி! நான் சொல்லுறன்எண்டேல் வித்தியாசமா நினைச்சுப் போடாதே!...... நாமேன் இந்த மாதிரியான சோலிகளிலை எல்லாந் தலை போடுவான்? அவங்க தங்கடை உரிமையெண்டு பாடு பட்டால் பாடுபட்டிட்டுப் போகட்டுமே... யாருக்கென்ன? நீ சும்மா கிடவன்......"

அப்துல்காதர் தம்முடைய 'தொப்பி'யால் காசிமையும் மூடப்பார்த்தார். அவருடைய நீண்ட நாள் நினைவு... கனவு... எண்ணங்கள் அத்தனையுமே உடைந்து கரையும் வண்ணம் செய்தது, காசிம் சொன்னவைகள்.

"கா...க்...கா...! எது உங்களுடைய தாய் மொழி? நீங்க என்னுடன் இப்ப எந்த மொழியிலே பேசுகிறியள்? தன்மானம் என்ற ஒன்று இருந்தா இப்படிப் பேசுவீர்களா? அன்றைக்கு முஸ்லிம்கள் எல்லாஞ் சேர்ந்து செய்த சத்தியாக்கிரகத்தில் நீங்கள் பங்குபற்றவில்லை! இது தானு உங்களுடைய நேர்மை? நியாயம்? இது உங்களுக்குக் கண்ணியமாக இருக்கிறது. எங்களுக்குச் சரி வராது.... நாங்கள் தமிழர்கள்!... எங்களுக்குத் தன்மானம் என்ற ஒன்றுண்டு; அதுதான் பெரிது......"

ஆவேசத்தில் வார்த்தைகள் குழறி வெளிவந்தன. அவனுடைய கைகள் நடுங்கின, கால்கள் நிலையிழந்து, அவன் உடலையே மண்ணில் வீழ்த்துவன போல முடங்கின. உடல் எல்லாம் வியர்த்துக்கொட்டியது. கண்கள் இருண்டு கொண்டு வந்தன. எதையோ எல்லாம் பேசினுன் காசிம்.

அப்துல் காதருக்கு மூக்கே சிவந்துவிட்டது. "என்னடா பயலே!... ஒருமாதிரி மிறைக்கிறே!... உன்னுடைய இரத்தம் அப்படிச் சொல்லுது... இன்டைக்கு ஏதோ மந்திரி சபை கூடுதாம்... ஆமியள் வந்து உன்னை ஒரு கைபார்த்தப்புறம் எல்லாந் தெரிஞ்சிக்கதாம் போறே!"

முனிவர் ஒருவர் சாபம் போட்டால் எப்படி இருக்குமோ? அப்படி இருந்தது அவருடைய நிலை......அதே கோலம்......அதே பேச்சு... அதே காட்சி!

காசிம் எதையோ சொல்ல நினைத்து அதரங்களை அசைக்கப்போனுன். ஏதோ ஒருவித ஓலம் வந்து தடுத்துவிட்டது!

"காக்கா!... கா...க்...கா...! ஆமியன் சத்தியாக்கிரகஞ் செய்து கொண்டிருந்தவங்களையெல்லாம்...... கொல்லுருங்கள்...... எல்லாருந்திசை தெரியாமல் ஓடுருங்கள்..."

சைக்கிளிலே ஓடிவந்த ஒருவனின் குரல் மட்டும் கேட்டது. பறை அறைபவனைப்போலமணியை அடித்துச் செய்தியையும் பரப்பியபடி ஓடி வந்தான் அவன்.

இந்த இருவரையும் கண்டு அவன் எதுவுங் கூறவில்லை. முன்பு சொன்ன வார்த்தை

(15-ம் பக்கம் பார்க்க)



## ரிஷி அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்து தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதை பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00
" ½ " ரூபா 22/50

[தபாற் செலவு 95 சதம்]

ஆயுர்வேத டாக்டர்:

**T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்**

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தடுப்புக் காவலில் நாம்’ 19.



## அன்பு மகள் அன்பரசிக்கு,

தடுப்புக் காவல் நிலையம்,
பனாகொடை,
ஹோமாகம,
25-5-61

மகளே அன்பரசி!

சென்ற மடலில் குறிப்பிட்டது போல இந்த மடலில், அறிமுகம் செய்யாத—எமது தடுப்புக் காவல் குடும்பத்திலுள்ளோரை எழுதி முடித்துவிட்டே மற்றவற்றை எழுத உள்ளேன்.

### மு. மாணிக்கம்

மட்டக்களப்பைச்சேர்ந்த பெரியார் மு மாணிக்கம் அவர்கள் முன்னாள் அரசாங்க ஊழியர். இவர் கைச்சாத்தை மட்டுமிட்டார். அடுத்த தமிழரசு செனட்டராகப் போகுமிவர் பெருமையான போக்குடையவர். யாரும் மதிக்க நடப்பவர்; நல்லவர். செல்வி கலாமாணிக்கத்தைத் தனது மகளாகக் கொண்டவர். கலாமாணிக்கம் பெண் பேச்சாளரிடையில் சிறந்த ஒருவர் அல்லவா? எதிர்காலம் கட்சி செய்ய வேண்டியவைப் பற்றிய சிந்தனையிலேயே தனது காலத்தைப் போக்குகின்றார். இவருக்கும் அரசியலில் நல்ல எதிர்காலம் உண்டு.

### வி. ஏ. அழகக்கோன்

"பாடப்பாவுண்டு, படிக்க நல் நாவுண்டு, கலை கலாச்சாரமுண்டு மொழியற்று வாடவகையேன்? சிறை கிடந்தாலும், மலையைப் பெயர்த்தெறியும் வலியுடைய மறத் தமிழா! வீரமுடன் விரைந்தெழுவாய், மகிமையுடன் நம் நாடு சிறக்க வேண்டும். அறம் பொங்கி உலகெலாம் உய்ய பகைமையில்லாப் பண்புடன் என்றும் வாழவேண்டும். இந்தமிழ் காவியங்கள் படிப்பதுடன் இயற்றவும் வேண்டும். பாந்தமுடன் தமிழோசை தரணியெலாம் ஒலிக்க வேண்டும். இனிமையுடன் தமிழ் மக்கள் இசைந்து வாழ தனியரசு தந்தருள்வாய் தற்பரனே!" என நீளமாக எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. வி. ஏ. அழகக்கோன் அவர்கள். இவர் மன்னார் பிரதிநிதி; வழக்கறிஞர். தமிழரசுக் கொள்கையை மன்னாரில் பரப்பிய இவர், கொள்கையில் நீங்காதபற்றுடையவர். அன்புள்ளமும் கடவுள் பக்தியும் ஒருங்கே கொண்ட இவர் மேன்மாடியெங்கும் கேட்கப் பேசுகின்றார், சிரிக்கின்றார், ஆராதனையிலதிக நேரத்தைச்செலவு செய்கின்றார்.

### பொ. மாணிக்கவாசகம்

"சத்தியம் என்றும் வெல்லும்" என எழுதிக் கைச்சாத்திட்டார் பொ. மாணிக்கவாசகம் அவர்கள். இவர் கற்குடாப் பிரதிநிதி. மிக அமைதியானவர். அதிகம் பேசமாட்டார்; ஆனால் செயல் வீரர். எதற்கும் ஒரு புன்முறுவல்; அது மற்றவர்களைக் கவரக் கூடியது. எந்த விடயத்திலும் ஆழ்ந்த தெளிவு கொண்டு காணப்படுகின்றார். எல்லோரது மதிப்பையும் பெற்றுத் திகழ்கின்றார்.

### ஞா. லூக்காஸ்

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என எழுதிக் கைச்சாத்தையுமிட்டார் திரு. ஞா. லூக்காஸ் அவர்கள். கட்சிப் பற்றும், செயற்றிறனும் ஒருங்கே அமையப் பெற்ற இவர் திருமலையில் வாழ்ந்

## புதுமைலோலன்

தாலும் யாழ்ப்பாணத்தவரே. அமரர் ஏகாம்பரத்தின் அபிமானத்துக்குரிய இவர், பொறுப்புடனேயே எதையும் பேசுகின்றார், கட்சியில் நீக்கமற்ற பற்றுக் கொண்டு திகழுமிவர், படிப்பதும், சிந்திப்பதுமாக உள்ளார். இங்கே எனது நல்ல நண்பராகிவிட்டார். அடிக்கடி வந்து மனம் திறந்து பேசுகின்றார்.

### சி. இராஜதுரை (ராஜு)

"தமிழன் உயர்வுக்காக தலை போவதென்றாலும் தயங்கதே தமிழா" என எழுதிக் கைச்சாத்திட்டார் ராஜு என நாமழைக்கும் திரு. சி. இராஜதுரை அவர்கள். இவர் திருமலை வாசி; திருமலை நகராண்மைக் கழக உறுப்பினர். நல்ல தேகக் கட்டுடைய இவரது மனமும் பண்பானதே. கட்சியில் நீங்காத பற்றுடன் திகழ்கின்றார். அமைதியாக, பெருமையாக இங்கே வாழ்கின்றார். அண்மையில் மணம் முடிந்தவராதலால், புதுமனைவி வராமல் போக முடியுமா என்ன? எனினும் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் எதையும் தாங்கச் செய்கின்றதென்கின்றார்.

### பா. நேமிநாதன்

"வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழினம்" என்றெழுதிக் கைச்சாத்திட்டார் திரு. பா. நேமிநாதன் அவர்கள். இவர் திருமலை வழக்கறிஞர். முன்னாள் நகராண்மைக் கழகத் தலைவர். 'ரூன்விஸ்ரர்' ரேடியோவுடன் திரிகின்றார். நல்ல நூல்கள் படிப்பதில் பொழுதைக் கழிக்கின்றார்; சிகரட்டாக ஊதித் தள்ளுகின்றார். எல்லோருடனும் பேசிப் பேசி மகிழ்ந்து திரிகின்றார்.

### ம. கிருபைராசா

"செய் அல்லது செத்து மடி" என்றெழுதிக் கைச்சாத்திட்ட செல்வன் ம. கிருபைராசா ஓர் மட்டக்களப்பு மாணவன். வஞ்சகமற்ற நல்லபிள்ளை. மட்டக்களப்புப் பிரதிநிதிமேல், அண்ணா அண்ணா என்றழைத்துப் பாசமுடன் நடக்கின்றார். நல்ல திறமைசாலி. எதிர்காலத்தில் மின்னப் போபவர் கிருபைராசா. எனது அறைவந்து நெடுநேரம் தங்கள் ஊர், கொள்கையாளர், எழுத்தாளர், தன் ஆசிரியர் எஸ். பொன்னுத்துரை பற்றியெல்லாம் பேசியபடியே இருப்பார்.

### எம். திருச்செல்வம்

கைச்சாத்தை மட்டுமிட்டார் திரு. எம். திருச்செல்வம் அவர்கள். முன்னாள் சொலிஸிற்றர் ஜெனரலான இவர், கட்சியிலும் செல்வாவிலும் நீங்காத பற்றுடையவர், மலை நாட்டில் நம்கொள்கை பரப்பப்பட வேண்டும் என்பது பற்றியே சிந்திக்கின்றார். தமிழ் நூல்கள் படிக்கின்றார். விளங்காத தமிழ்ச் சொற்களை, பருத்தித்துறைப் பிரதிநிதியிடம் கேட்டுப் படிக்கின்றார். வீர உணர்வும் கட்சிப் பற்றும் இரு கண்களாகக் கொண்ட இவர், சிறந்த செயல் வீரர். இனம் உயரத் தன்னாலானதைச் செய்ய வேண்டுமென்பது இவரது கனவு.

### சி. மு. இராசமாணிக்கம்

"தமிழன் என்று சொல்லு! தலை நிமிர்ந்து நில்லு!" என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. சி. மு. இராசமாணிக்கம் அவர்கள். இவர் பட்டிருப்புப் பாராளுமன்றப் பிரதிநிதியாவதுடன், தமிழரசுக் கட்சியின் தலைவருமாவார். சிந்தனையில் இட்டே எதையும் முடிவு கொள்ளுமிவர், எதற்கும் உணர்ச்சி வயப்படுவதும் கிடையாது. ஒரு கட்சித் தலைவருக்குரிய தன்மைகள் நிறைய இவரிடம் காணப்படுகின்றன. எதையும் அதிக நேரம் சிந்தித்த பின்பே முடிவுக்கு வருகின்றார். நேர்மையாளராகவும் கண்ணியமிக்கவராகவும், பெருந்தன்மைகள் நிறையக் கொண்டவராகவும் திகழ்கின்றார். கட்சித் தலைமைக்குக் கிடைத்த இன்னோர் செல்வநாயகம் இவர். கிழக்கு மாகாணம், ஒன்றுபட்ட தன்மையுடன் என்றுமே திகழ அயராது பாடுபடுபவர் இவர்.

### செ. மகாலிங்கம்

"என்றும் சுதந்திரம், என்றும் தமிழ் மொழி" என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. செ. மகாலிங்கம் அவர்கள். சுதந்திரஉணர்வும், மொழிப் பற்றும் மிக்க இவர், என்றும் களிப்புடன் காணப்படுகின்றார் பண்பாளர்; மதித்து நடப்பவர். இவர் திருமலையைச் சேர்ந்தவர்.

அன்பு! ஒருவாறு எமது தடுப்புக் காவல் குடும்ப அங்கத்தவரைப்பற்றியெல்லாம் எழுதி விட்டேன்.

இன்று எட்டுப்பேர் விடுதலை பெற்றனர். இதில் உன் அப்பாவுமிருப்பார் என எண்ணுகின்றாயா? இல்லையடி மகளே இல்லை!

கந்தையா வைத்தியநாதன், வழக்கறிஞர் சம்பந்தன், வழக்கறிஞர் ரங்கநாதன், மட்டக்களப்பு பட்டின சபைத் தலைவர் திசவீரசிங்கம், கணேசநாதன், கிருஷ்ணக்குட்டி, வழக்கறிஞர் பாலச்சந்திரன், யாழ் மேயர் துரைராசா, ஆகியோரே விடுதலை பெற்றனர்.

எண்மரும் கண்ணீருடன் பிரியாவிடை பெற்றனர். அவர்களைப் பாடிப் பிரியாவிடை கொடுத்து அனுப்பினோம். 'வாழ்க தமிழ்மொழி' என்ற பாரதி பாடலையும், 'திராவிடப் பொன்னாடு' என்ற பாட்டையும் உருக்கமுடன் இராசதுரையும், மங்கையர்க்கரசியும் பாட எண்மரும் விடை பெற்றுப் போலிஸ்வண்டியில் போனார்கள். எழுபத்தி நான்கு பேராக விருந்த நாம், அறுபத்தாறுபேராகிவிட்டோம்.

நாளை மீதி எழுதுகின்றேன்.

உனது அன்பு அப்பா,
புதுமைலோலன்.

(தொடரும்)

# மக்கள் குரல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வது ஒப்புக்கொண்டீரே! ஆனால் 24-10-62-ல் அங்கு நடைபெற்ற முத்தமிழ் விழாவில் அதிபரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் ஜனாப் அலியின் பெயரையே காணவில்லையே! ஜனாப் மஜீது கிண்ணியா மாவித்தியாலயத்துக்கு எண்ணற்ற சேவைகள் செய்துள்ளார் என்று கூறுகின்றீர்களே! அதே வித்தியாலயத்தில் 'சர்ட்டிபிக்கேட்' இல்லாதிருந்த ஜனாப் மஜீதையே அப்பொழுது அதிபராக்கியது ஜனாப் அலிதான் என்பதை ஏன் மறைக்க முயல வேண்டும்?

இனிமேலாவது பொய்யையும் பித்தலாட்டப் புழுகுகளையும் விட்டு விட்டு, அனுவசியமாக என் போன்றோரையும் பத்திரிகையில் இழுத்தடிக்காமல் இருக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

—எம். ஈ. எச் எம். தௌபீக்,
கிண்ணியா.

## சிறப்பிதழுக்கு பாராட்டு

"சுதந்திரன்" சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்பு இதழ், நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் ஒன்றாய் அமைந்திருந்தது. அறந்தரு நெஞ்சோடு அருள் சுரந்தூட்டி மறம் காத்த மாத் தமிழ் மன்னர்களின் உயர் குணத்தையும், அன்னை இனத்தின் ஆண்மையினையும் கூறும் புற நானூற்றுப் பாடல் ஒன்றின் மூலம் கருத்தோவியம் தீட்டி, காளையர்களுக்கு களம் நோக்கிச் செல்லக் கட்டளையிடும் அன்னையின் மொழியினையும் தந்திருந்தது சிறப்பான படைப்பாக இருந்தது. பொதுவுடைமையரின் உளப்பாங்கினை, குருட்டுக் குட்டையில் மூழ்கி "மார்க்கஸீயம்" பேசும் மந்த மதியினருக்கு எடுத்தியம்பி இடித்துக் காட்டிடும் பணியில் சுதந்திரனின் முயற்சியைப் பாராட்டுகிறேன். அறிவாராய்ச்சித் திறன் மிக்க அறிஞர்களின் கருத்துக் கருவூலங்களைத் திரட்டித் தந்த பெருமை சுதந்திரனையே சாரும். எல்லாவற்றிற்கும் மேலாக நம் இனத்தின் நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலவான அறிஞரேறு அண்ணாவின் வீரமுழக்கம் இதழுக்கு ஏற்றத்தைத் தந்தது. திருவாளர்கள் சும்மி, கிருஷ்ணாராவ் ஆகியோரின் கட்டுரைகள் பிரச்சினையைத் தெளிவுபடுத்தும் வகையில் அமைந்திருந்தன.

சே. சேவற்கொடியோன்,
சிங்கம்புனரி,
இராமநாதபுர மாவட்டம்.

## தமிழ்க் கொலை

பெல்மதுளை பகுதியில் சேவை செய்யும் சில, இ. போ. ச. பஸ்களில் பொருத்தப்பட்டிருக்கும், திசை காட்டும் போர்ட்களில், பெல்மதுளை என்பதற்கு, மாளுக (பல்மடுல) என்று எழுதப்பட்டிருக்கிறது, இது உண்மையிலேயே தமிழைக் கொலை செய்வதற்கு ஒப்பாகும்,... இ. போ. ச. அதிகாரிகள் இதுபற்றி கவனிக்க வேண்டுகிறேன்.

—பி. செல்லத்துரை,
பெல்மதுளை தோட்டம்,
காவத்தை.

## பைத்தியம் நல்லது!

கடந்த (25-11-62) சுதந்திரன் இதழில் வெளி வந்த 'பைத்தியம்' என்ற சிறு கதை நமது நாட்டில் லஞ்சம் வாங்கி வயிறு வளர்க்கும் வறண்ட இதயம் படைத்தவர்களின் வாழ்க்கையைத் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது! அத்துடன் பெரிய பெரிய உத்தியோகத்தர்கள் ஏழைகளிடம் லஞ்சம் வாங்கி வயிறு வளர்த்து வந்தால் என்றைக்காவது ஒருநாள் சந்தியில் வந்துதான் ஆகவேண்டும் என்பதை கோர்ட்டில் தேன் போத்திலோடும் தோடம் பழங்களோடும் காட்சி அளித்த சின்னப்பிள்ளை மூலம் காட்டியிருக்கிறார். குறித்த கதையை எழுதிய ஆசிரியர் திரு. எஸ். எல். சவுந்தரநாயகம் அவர்கள்.

இப்படிப்பட்ட கதைகளைத் துணிவோடும் மகிழ்வோடும் வெளியிடுவதில் ஈழத்தில் சுதந்திரன் பத்திரிகைதான் முன்னணியில் நிற்கிறது என்பதை மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்!

[illegible],
கணேசபுரம், கிளிநொச்சி.

## சங்கப்பலகை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கவிஞர் கண்ணதாசனின் 'போற்றுபவர் போற்றட்டும்' என்னும் கவிதை ஆசிரியத் தலையங்கத்தின் மேல் உள்ளது. ஆனால் கவிதை யார்த்த ஆசிரியரின் பெயரைக் குறிப்பிடாது விட்டது நல்லது அல்ல.

இரா. குணராசாவின் சிந்தனையில் ஒரு நாள், இ. மு. இக்பாலின் அன்பளிப்பு, சினிமாப்பகுதி, கேள்வி மன்றம் ஆதியன அடங்கியுள்ளன.

போற்றுமளவுக்கு எதுவுமே இல்லை. இது பத்திரிகை நடத்தும் ஒரு சிசுவாகி விட்டது. நிலைக்கும் நாள் யார் அறிவார்?

-சங்கர்.


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.




நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழத் துடிக்கும் இரு இள உள்ளங்களையும் வாட்டி வதைத்து வேதனையூட்டி வேடிக்கை பார்க்கும் வீணர்கள் யார் என்பதை வெண் திரையில் பார்த்துத்தான் விடை காண முடியும்.

## உள்ளத்தை உருக்கும் உயர் சித்திரம்

# சாரதா (பட விமர்சனம்)

தமிழ்ப் படங்கள் எப்பொழுதும் ஒரேவிதமான கதையமைப்பு உடையதா இருக்கும் என்று கூறுபவர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கக்கூடியதாகவும், தமிழ்த் திரைப் படத்துறைக்கு ஒரு முன்னேற்றமாகவும் வெளிவந்துள்ள படம் சாரதா.

ஒரு ஏழைத் தமிழ் ஆசிரியரினின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு, ஒரு பெண்ணின் தியாகத்தின் நிழலிலே வளர்ந்து, ஒருத்தி--ஒருவனுக்கே என்ற உயரிய கருத்தினை உறுதிப்படுத்தும் ஒப்பற்ற சித்திரமாக சாரதா அமைகிறது.

புதுமையான கதை; கருத்துள்ள கதை. கதைக்காகவே படத்தைப் பார்க்கலாம்.

ஏழ்மையின் கொடுமையினைச் சகித்து வாழும் தமிழ் ஆசிரியரின் பாகம் எஸ். எஸ். ராஜேந்திரனுடையது. கல்லூரியிலே வேல்-ஆயுதத்திற்கு ஒரு விளக்கம் கொடுக்கும்போது பார்ப்போர் மெய் சிலிர்க்கிறது. அத்தனை உணர்ச்சியுடன் அதனை விளக்குகிறார்.

ஆசிரியரைக் காதலிக்கும் செல்வச் சீமாட்டியாகத் தோன்றி, தியாகத்தின் திருஉருவாக மாறும் பாகம் விஜயகுமாரியுடையது. பிறந்த வீட்டுச் செல்வமெல்லாவற்றையும் துறந்து கணவனுடன் செல்லும் காட்சியில், எல்லோரையும் உருக வைத்து விட்டார் விஜயகுமாரி.

சாரதாவின் தந்தையாக, பெரும் செல்வந்தராக, வருகிறார் ரங்கராவ். அவர் நடிப்பே தனிரகம். கல்லூரி அதிபராக வந்து காதலர்களை மணமுடிக்க உதவுபவர் நாகையா. அனுபவ நடிப்பு அவருடையது. மற்றொரு அதிபராக சகஸ்ரநாமம் வருகிறார்.

நகைச்சுவைப் பாகம் எம். ஆர். ராதாவிடமும், அவர் மகன் அப்பாவியின் பாகம் ராமராவிடமும் கொடுக்கப்பட்டுள்ளன. நகைச்சுவைப் பாகங்கள் கதையுடன் பிணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏழை ஆசிரியரின் தங்கையாக புஷ்பலதா வருகிறார். பாகம் சிறியது எனினும் குறிப்பிடத்தக்க நடிப்பு. செல்வந்தரின் மகளைக் காதலித்து, காதலிலே தோல்வி அடைந்தவராக அசோகன் வருகிறார். அவர் முகபாவமே அவர் மன நிலையை விளக்குகிறது. நல்ல நடிப்பு.

கதை, வசனம், டைரக்ஷன் எல்லாம் திரு. கே. எஸ். கோபாலகிருஷ்ணனுடையது. மூன்றிலும் வெற்றியீட்டியுள்ளார். மொத்தத்தில் நல்ல கலையை அனுபவிக்கக் கூடியவர்களது மனதை விட்டகலாத சித்திரம் சாரதா!

—மதி

## 'காவலன் கடுங்கோன்'

'காதலன் தந்த கணவன்' என்னும் சமூக நாடகத்தை இருமுறைஅரங்கேற்றிப் புகழீட்டிய கொழும்பு கலா விருத்திச் சங்கம் தனது நான்காவது தயாரிப்பான ப. கண்ணன் எழுதிய "காவலன் கடுங்கோன்" என்ற சரித்திர வரலாற்றுக் காவியத்தை வருகிற ஜனவரி மாதம் 6ந் தேதி கொழும்பில் மேடையேற்ற விருக்கிறது.

சிறப்பான முறையில் இந் நாடகம் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இந் நாடகத்தில் பாத்திரமேற்றிருக்கும் நடிக, நடிகைகளை ஊக்குவிக்கும் பொருட்டு கடந்த வாரம் நடைபெற்ற மேற்படி சங்க நாடகக் குழுக் கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு. ஈ. வி. டேவிட் ராஜு அனைவருக்கும் பரிசில்கள் வழங்கிப் பாராட்டினார். திருவாளர்கள்; எம். ஆலால சுந்தரம் பி. ஏ., வி. எஸ். இரத்தினம், ஏ. சுப்பிரமணியம், வி. நடேசு பி. ஏ. (ஆனர்ஸ்) கே. பாலசிங்கம், யோகராஜ், சுந்தரராஜ், செல்விகள் நிர்மலா, இரத்தின குமாரி, சந்திரா ஆகியோர் இந்நாடகத்தில் பிரதான பாகங்களில் நடிக்கின்றனர்.

இசைப் பொறுப்பை திரு. விசுவநாதனும், டைரக்ஷன் பொறுப்பை திரு. கே. என். நவரத்தினமும் திரு. ஆலால சுந்தரமும் ஏற்றிருக்கிறார்கள். பாடல்களை "அங்கவை" இயற்றியிருக்கிறார். திரு. ரீ. சச்சிதானந்தம் ஒப்பனை செய்கிறார்.

## கலைப் பூஞ்சோலை



'அதோபார் விஜி! அவர்கள் எல்லோரும் நம்மைப் பார்த்துப் பரவசப்படுறாங்க திரைவானிலும் இல்வாழ்விலும் நாம் சிறப்பாகத் திகழ்வது அவர்களுக்கும் தித்திக்கிறது' என்று விஜயகுமாரியை ராஜேந்திரன் கிண்டல் செய்கிறார் போலும்.

சிலிமாஸ் திரைகளுக்கு வரப்போகும் 'பணம் பந்தியிலே' படத்தில் வரும் காட்சி.

பட விமர்சனம்

# நாக நந்தினி

பதவி ஆசை பிடித்த பயங்கரவாதி ஒருவனின் கைப்பாவையாகக் கடுஞ் சிறையில் கஷ்டமுறும் நந்தினி நாக குகையில் தனது இளமையை நாகபாம்பு உருவில் கழிக்கிறாள். அநீதியை எதிர்த்துப் போராட முடியாமல் திண்டாடும் அவளுக்கு, அவ்ளின் அத்தானே அருந்துணையாக வந்து சேர்ந்து ஆறுதலளிக்கிறான். பேராசை பிடித்தவனின் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்துவதுடன் தனக்குரிய ஆட்சி பீடத்தையும் ஏற்கிறான்.

நாகநந்தினியாக சோகமே உருவாகத் தோன்றும் அஞ்சலி தேவியின் நடிப்பில் எப்போதும் போலுள்ள கனிவு இருக்கிறது. இளவரசனாக வரும் பாலாஜி சண்டைக் காட்சிகளில் அவ்வளவு சோபிக்கவில்லை, எனினும் ஓரளவு சுமாராக நடித்துள்ளார்.

தளபதியாக நம்பியார் தோன்றுகிறார். அவருடைய காதலி திலகமாக தேவிகா ஈடு கொடுத்து நடித்திருக்கிறார். பேராசைக்காரன் வேடத்தில் வீரப்பா தோன்றி தனக்கே உரித்தான பாணியில் நடித்துள்ளார். நம்மைச் சிரிக்கவைக்கும் பொறுப்பை ராஜகோபாலனும், ராஜகுமாரியும் ஏற்றிருக்கின்றனர்.

(13-ம் பக்கம் பார்க்க)

# "எனக்குக் கிடைக்கும் பாராட்டுகள் அறிஞர் அண்ணுவுக்கே உரியன"

## பாராட்டுக்கூட்டத்தில் புரட்சி நடிகர்

"பாதுகாப்பு நிதிக்கு நான் அளித்த உதவிக்காக என்னை நீங்கள் எல்லாம் அதிகம் பாராட்டி புகழ்ந்திருக்கிறீர்கள்! ஆனுல் இந்தப் பாராட்டுக்கள் எல்லாம் எனக்கு அல்ல; என்னை ஈன்ற தாய்க்குக்கூட அல்ல; எனது தலைவன் அறிஞர் அண்ணுவுக்கே உரியன."

இவ்வாறு சமீபத்தில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற பாராட்டுக் - கூட்டத்தில் நன்றி தெரிவித்துப் பேசும்போது மக்கள் திலகம் எம். ஜி. ஆர். குறிப்பிட்டார். தேசிய பாதுகாப்பு நிதிக்கு எம். ஜி. ஆர். அளித்த நன்கொடையைப் பாராட்டி இக்கூட்டம் நடைபெற்றது. நடிகர் அசோகன் பி. ஏ., எம். ஜி. ஆரை வாழ்த்திப் பேசும்போது "இருபதாம் நூற்றுண்டின் ஈடிணையற்ற கலைஞர் எம். ஜீ. ஆர்." என்ருர். எம். ஜி. ஆர். மேலும் கூறியதாவது:-

எது எந்தக் காலத்தில் எப்படி எப்படிச்செய்ய வேண்டுமென்பதை எனக்குக் கற்றுத் தந்தவர் அறிஞர் அண்ணு! நான் இந்தநிலைக்கு வந்தமைக்கு அறிஞர் அண்ணுவே காரணம். எனவே நான் செய்யும் காரியங்களால் ஏதாவது பாராட்டுக் கிடைக்கிறதென்ருல் அது எனக்கு அல்ல; அண்ணுவையே சாரும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



கிறிஸ்தோதய காலத்தில் இலங்கை மக்களை மகிழ்வூட்ட வரவிருக்கும் 'ராஜாதி ராஜன்' (King of Kings) கிறிஸ்துவின் கதையான ஆங்கிலப் படத்தில் பரிசுத்த கன்னி மேரியாகத் தோன்றும் சியோபான் மக்கென்னு.

இப்படத்தைத் [illegible] பட்ட பாடுகளை ஒரு [illegible] மான சம்பவங்களை அடுத்த வாரம் தருகிறோம்.

## கவிஞர் கண்ணதாசனின் 'வீட்டுக்கொரு வீரன்'

கவிஞர் கண்ணதாசன் இந்திய—சீன யுத்தப் பிரசாரப் படம் ஒன்று தயாரிப்பது தெரிந்ததே. இதற்கு வீட்டுக்கொரு வீரன் எனப் பெயரிடப்பட்டுள்ளது. பரணி ஸ்டுடியோவில் தயாராகும் இப்படம் 14,000 அடி இருக்குமாம். சுமார் 30 நாளில் தயாரித்து முடிக்க கவிஞர் திட்டமிட்டுள்ளார். ஸ்ரீதர் டைரக்ட் செய்யும் இப்படத்தில், ஜெமினி கணேசன், எம். ஆர். ஆர்., தேவிகா முதலியோர் நடிக்க இசையமைப்பை விஸ்வநாதன்-ராமமூர்த்தி கவனிக்கிறார்கள். இப்படத்தின் வருமானம் முழுவதும் தேசிய பாதுகாப்பு நிதிக்குத் தரப்படுமாம்.

## தங்கையின் காதலன்

'வாழ்வும் விதியும்' என்ற நாடகத்தின் மூலம் புகழ் பெற்ற பாஷையூர் உதய சூரியன் நாடக மன்றத்தார், தங்களது இரண்டாவது தயாரிப்பாக 'தங்கையின் காதலன்' என்ற உணர்ச்சி மிக்க நாடகத்தை தயாரிக்கின்றனர். பாஷையூரில் புகழ் பெற்ற நடிகர்களான திருவாளர்கள் பாக்கியன், எம்மிலியானுஸ், மரியதாஸ், மற்றும் பலர் நடிக்கின்றனர்.

இந் நாடகத்தின் கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புகளை எஸ். கிறிஸ்ரி ஏற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதாரத்தை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பறிக்கப்பட்டுவிட்டன. தலைவர்கள் தலை மறைவாகி விட்டார்கள்.

உப்பரிகையிலே காதல் வலை வீசுகிறுன் முதலாளி, உப்பளத்திலே உருக்குலைகிறுன் உழைப்பாளி என்று கர்ச்சிக்கும் கம்யூனிஸ்டுகள், மலையகத்துப் பாட்டாளியின் நிலையைப் பற்றி பகல் கனவு கூடக் காணுவது கிடையாது.

மலையகத்து மறவன், பாட்டாளித் தோழன், ஈழத் திருநாட்டில் சுதந்திர புருடனுக வாழ வேண்டுமானுல், மலையகத்தில் மக்களின் கட்சி தனது நேசக்கரத்தை அன்புடன் நீட்டவேண்டும். இனம் அழிந்துவிடாமல் பாதுகாக்க இலங்கையில் எண்ணற்ற இதயங்களின் இரத்த நாளங்கள்தான் இலங்கைத் தமிழரசுக்கட்சி, இதயமுள்ள ஈழத்தின் தலைவன் தமிழ் மறவன் செல்வநாயகன். அவனின் கரங்களை ஓங்கச் செய்வோம். நாமும் (பாட்டாளி)மொழி, நிலை, குடி, சுதந்திர உரிமைகள் எல்லாம் கண்டு இணைப் பாட்சியில் இணையற்றவர்களாக வாழ முடியும். பண்புள்ள தலைவன் உயிர் கேட்டாலும் அதனைத் தந்துதவப் பாட்டாளி துடிக்கிறுன் என்பதைத் தன்மானத் தந்தைக்குச் சொல்லி, எங்கள் கண்ணீரைத் துடைக்க முன்வரும்படி வேண்டுகின்ருேம்.

## இதயக் குமுறல்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பது கள்ளுக்கடையில். உண்ண உணவு கிடையாது; உடுக்க உடை கிடையாது; "பாய்" (பஞ்சாபி) வட்டியுடன் சம்பள வாசலில் நிற்கிறுன். இந்நிலைகள் ஒழிய வேண்டும்.

ஒரு பெண் தொழிலாளி படும் கஷ்டம், அப்பப்பா! காலையில் கிடைக்கும் உணவை உண்டுவிட்டு விடிய வேலைக்குச் செல்கிறுள். பின் பகல்வந்து கஞ்சி அல்லது ரொட்டியை உண்டுவிட்டுச் சென்று மாலையில் வீடு வருகிறுள். கைக்குழந்தையை பிள்ளைக் காம்பராவில் விட்டு செல்கிறுர்கள். இவர்களுக்கு ஓய்வு எங்கே? பிள்ளைகள் நோயினுல்வாடுகின்றன. இதனுல் நூற்றுக்குப் பத்து வீதமான குழந்தைகள் உயிர் துறக்கின்றன.

வயது வந்த பெண்களை கிணற்றுத் தவளை போல் இருக்கச்செய்கிறுர்கள். இது பெருந் தவறு. ஆண், பெண் இரு பாலாரும் முன்னேறி வரவேண்டும்.

செல்வி. அக்னஸ் மோசஸ்,
வாடித்தோட்டம்,
புசல்லாவ.

## தாயகம் செல்லும் 'டிமெம்பி'

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒலி செலுத்தி, சோம்பிச் சொரணையற்றுக் கிடந்த இதயங்களுக்கு உணர்வூட்டி நல்லதொரு நிலைமை மாற்றத்தை உருவாக்க உழைத்த சொல்லின் செல்வர் 'டிமெம்பி' தாயகம் செல்வது எண்ணற்ற துடிக்கும் இளம் உள்ளங்களுக்குக் கவலையைத் தந்தாலும், இன்பத்திராவிடத்திற்குத் தானே செல்கிறுர் என்ற எண்ணம் ஒருவித ஆறுதலைத் தருகின்றது.

ஈழத்தில் முழங்கிய தமிழ்க்குரல் எழில்மிகு திராவிடத்திலும் எமது பற்றுக்கும் பாசத்திற்கும், நேசத்திற்கும் பாத்திரமான பாரத நாட்டுப் பண்பு நண்பர்களிடத்தும் ஒலிக்கட்டும் எனக்கருதி, வாழ்த்தி விடை கொடுக்கின்ருேம்.

—ஈழத்து சிவானந்தன்



கலைவாணி புத்தக நிலையம், அச்சகம் ஆகிய நிறுவனங்களின் உரிமையாளர் திரு. கு. வி. தம்பித்துரை அவர்கள் அண்மையில் சமாதான நீதிபதியாக நியமனம் பெற்ருர். அதைப் பாராட்டுமுகமாக கலைவாணி நிலைய ஊழியர்கள் ஒரு வரவேற்பளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

நாடக விமர்சனம்:

## பதிவுத் திருமணம்

கொழும்பில் மாநகர சபைத் தேர்தல் நடக்கும் காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சியாக 'பதிவுத் திருமணம்' நாடகம், உருக்கொள்கிறது. சமூக ஏற்றத் தாழ்வுகளை மீறி நடக்கும் ஒரு பதிவுத் திருமணமே நாடகத்தின் கருவூலம். இது ஒரு முழு நீள நகைச்சுவை நாடகமாக அமைகிறது.

நாடகத்தின் கதை, வசனம், முக்கிய பாகத்தையும் ஏற்றவர் நடிப்புத் துறையில் நல்ல அனுபவசாலியான திரு. ரொஸாரியோ பீரிஸ். நகைச்சுவை நாடகம் என்பதினுலோ என்னவோ கதை அம்சம் குறைவாயினும், வசனங்கள் நன்ருக இருந்தன. தேர்தலில் போட்டியிடும் நானுவாக அவர் நடித்த போதெல்லாம் ரசிகர்களை விழுந்து விழுந்து சிரிக்க வைத்து விட்டார். சிரிக்க வைப்பதுடன் மட்டுமா? ஒரு கொழும்பு முஸ்லிம் சகோதரனின் பாணியை அப்படியே தத்ரூபமாக எடுத்துக்காட்டி விட்டார். நாடகத்தைப் பார்த்தவர்கள் அந்தப் பாத்திரத்தை இலகுவில் மறக்க மாட்டார்கள்.

ஓய்வுபெற்ற சீ. சீ. எஸ். பாகத்தை என். மகேசன் மேற்கொண்டார். நடிப்பு நன்ருக இருந்தது. ஆனுல் இன்னும் கொஞ்சம் துடிப்பு தேவைப்பட்டது. அவருடைய மனைவி கோகிலாவாக செல்வி இராசம்மா தோன்றினுர்.

ஏழைத் தமிழ்பண்டிதரின் பாகமேற்ற டி. ராஜேஸ்வரன் நடிப்பு சிறப்பாக இருந்தது. பாத்திரப் பொருத்தமும் நடிப்புச் சிறப்பும் ஒருங்கே அமைந்து நாடகத்திற்கு ஒரு சிறப்பாக அமைந்தது. செட்டியார் பாகத்தை ஏற்ற திரு. லடீஸ் வீரமணியின் வேடப் பொருத்தம் அவ்வளவாக அமையாவிடினும் நடிப்பு நன்ருக இருந்தது.

லண்டனிலிருந்து திரும்பிய சிங்வெல் (சிங்காரவேல்) வேறு யாருமல்ல—லண்டன் கந்தையாபுகழ் 'சாணு'தான். பாகம் சிறியது. நாடகத்தின் பிற்பாகத்தில் தோன்றுகிறுர். இயக்குனர் பொறுப்பு ஏற்றுசித்தியடைந்துள்ளார். காதலர் பாகத்தை உதயணன், செல்விகோகிலா ஏற்று நடிக்கின்றனர். எனினும் இவர்களுடைய பாகம் சிறியதாகவே இருக்கிறது.

தயாரிப்பாளர் திரு.பாலச்சந்திரன் அவர்களுக்கு இது ஒரு வெற்றி நாடகம். இவர் தமிழ் நாடகத்துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முயல்பவர். இதற்கு முன்பும் சில நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியுள்ளார்.

கதை அமைப்பு குறைவு. நாடகம் சில இடங்களில் சோர்வு தட்டச் செய்கிறது. இப்படிச் சில குறைகள் இருப்பினும் நகைச்சுவை இவற்றை மறைத்து விட்டது. சரிவரப்பழக்கப்படாது மேடையேறும் நிலை மாறியது ஒரு சிறப்பாகும். வெற்றி நாடகமாயினும் இன்னும் கொஞ்சம் முன்னேற்றம் வேண்டும்.

பதிவுத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளை முன்னர் ஆசீர்வதிக்கத் தவறியவர்கள் மீண்டும் 9- 12- 62ல் கொழும்பில் ஆசீர்வதிக்க ஒரு வாய்ப்பு இருக்கிறது.

--மதி

## தொண்டர்கள்

இந்திய எல்லையை சீனுக்களிடம் இருந்து பாதுகாக்கும் பொருட்டு இந்தியா போராடிக் கொண்டிருக்கும் போது அப்போராட்டத்திற்கு உறுதுணையாக இருந்து தொண்டாற்ற தொண்டர் படை ஒன்றினை தமிழரசுக் கட்சி திரட்டி வருகிறது தெரிந்ததே. இத்தொண்டர் படையில் பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள் இதுவரை சேர்ந்து விட்டனர். கட்சித் தலைமைக் காரியாலயத்திலும், கிளைக் காரியாலயங்களிலும் நாளாந்தம் தொண்டர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டேயுள்ளனர்.

இப்படி முன்வரும்தொண்டர்களையிட்டு இந்தியத் தூதுவராலயத்திடம் தமிழரசுக் கட்சி தொடர்பு கொண்டுள்ளது. இந்திய அரசாங்கத்துக்கும் இது விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு தூதுவர்களுக்கு இதுவரை பதில் எதுவும் அனுப்பி வைக்கவில்லை. அவர்களுடைய பதிலைக் கொண்டே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிகிறது.

## பாதுகாப்பு நிதிக்கு தங்கவாளைத் தந்தார்

### தங்கவாள் ஏலத்துக்கு விடப்பட்டதும் 13000 ரூபாய்க்கு விலையாகியது

சில வருடங்களுக்கு முன்பு, மக்கள் திலகம் எம். ஜி. ஆரைப் பாராட்டி, மதுரை தமுக்கம் மைதானத்தில், 5 லட்சம் மக்கள் மத்தியில் ருபா பத்தாயிரம் பெறுமதியான தங்கவாள் ஒன்றை மதுரை மக்கள் சார்பாக நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம். ஜி. ஆருக்கு அளித்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்!

அந்த விலைமதிப்பற்ற பரிசுப் பொருளையே, பாதுகாப்பு நிதிக்கென, சென்னையில் நடந்த தி. மு. க. கழக நிதி சேர்ப்புக் கூட்டத்தில் அறிஞர் அண்ணுவிடம் கையளித்தார் புரட்சி நடிகர்.

## தமிழில்லாத அழைப்பிதழ்

### திருப்பி அனுப்பப்பட்டது

சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டும் அச்சிடப்பட்டிருந்த கலாசார இலாகாவின் அழைப்பிதழ் ஒன்றினை ஏற்க மறுத்து, அழைப்பிதழைத் திருப்பி அனுப்பி வைத்தார் திரு. செல்வநாயகம்.

மனித உரிமைகள் தினத்தையொட்டி சுவரொட்டிக் கண்காட்சி ஒன்று கலா பவனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 10- 12- 62 திங்கட்கிழமை இக் கண்காட்சியை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா திறந்து வைக்கவிருக்கிறுர்.

இந்த வைபவத்திற்கு சமுகமளிக்குமாறு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கும் அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்பட்டது. அழைப்பிதழ் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டுமே அச்சிடப்பட்டிருந்தமையினுல் ஏற்க முடியாதெனக் கூறி கலாச்சார இலாகாவுக்கே அழைப்பிதழைத் திருப்பி அனுப்பி விட்டார் திரு. செல்வநாயகம்.

## சீர்குலைந்து...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தேடப் போகிறுர்களா? முன்னணியில் நிற்பவரின் முதுகில் குத்தாதிருப்பார்களா? அல்லது திருந்தி உறுதியான இலக்குடன், உண்மைக்கும் உயர் தமிழுக்கும் பணிபுரிவோருடன் ஒன்று சேர்ந்து உழைக்கப் போகிறுர்களா?

தமிழ் பேசும் இனத்தைக் கருவறுக்க வந்த சிங்கள ஆதிக்கம் தன் உண்மை நிலையினை உணர்ந்து தளர்ந்து தள்ளாட ஆரம்பித்துள்ள இவ்வேளையில் நாம் அனைவரும் ஒருமைப்பட்டு சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்தால் நிச்சயம்வெற்றி எங்களுக்கே.

## நாகநந்தினி


(12-ம் பக்கத் தொடர்ச்சி)

காதுக்கினிமை யூட்டும் நல்ல பாடல்கள் நிரம்ப இருக்கின்றன: சுதர்சனம் இசை அமைத்துள்ளார்.

ஆரம்பத்தில் சிறுத்தைக்கும் பாம்புக்கும் ஏற்படும் ஒரு சண்டையைப்படமாக்கியுள்ளார்கள். இக் கட்டம் நன்ருகப்படமாக்கப்பட்டுள்ளது. பயங்கரமாகவும் இருக்கிறது.

அடிதடி, கத்திச் சண்டை, குஸ்தி, குத்துச் சண்டைகள், யாவும்மலிந்துள்ள இப்படம் சினிமாஸ் திரைகளில் விருந்தளிக்கிறது.

--நாதன்



'நாகநந்தினி'யில் அஞ்சலிதேவி, பாலாஜி.

### இந்தியாவில் 'மிக்' விமானத் தொழிற்சாலை

இந்தியாவில் 'மிக்' விமானத் தொழிற்சாலையொன்றை நிறுவ உதவுவதாக அளித்துள்ள வாக்குறுதியை ருஷ்யா காப்பாற்ருது என்ற கேள்விக்கே இடமில்லை என்று பிரதம மந்திரி திரு. நேரு, டிஸம்பர் 4-ந் திகதி லோக சபையில் கூறினுர். ருஷ்யா அளித்துள்ள வாக்குறுதியை அது காப்பாற்றும் என்று அவர் மேலும் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மர்மத் தொடர் கதை




எனது கிராமம்

## காரை தீவு

(மா. தர்மலிங்கம்)

பாடும் மீன் நாடாம் மட்டுமா நகரிலிருந்து தெற்கே சுமார் 28 மைல்களுக் கப்பால் இருக்கிறது காரை தீவு என்னும் எனது கிராமம். இக் கிராமம் முன்பு காரேறு மூதூர்என வழங்கப்பட்டு வந்துள்ளது. கிழக்கே வங்காள விரிகுடாக் கடலும், மேற்கே வயல் நிலங்களும் வடக்கும் தெற்கும் கிராமங்களும் எனது கிராமத்துக்கு அரண்களாக விளங்குகின்றன. ஈழ நாட்டுக்குப் பெருமை தேடித் தந்த தமிழ் உலகப் பெரியார் முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் தொடக்கம், சுவாமி நடராஜானந்தா மற்றும் ஆனேக்குட்டிச் சுவாமிகள் ஈருக இங்கு தான் அவதரித்தார்கள். ஈழத்தில் சிறப்புப் பெற்ற கண்ணகி கோவிலும் மற்றும் ஐந்து இந்து ஆலயங்களும் எனது கிராமத்தில் உள்ளன. ஆறு பாடசாலைகளும், ஒரு தபால் நிலையமும், இரு வைத்திய சாலைகளும், நான்கு கூட்டுறவுச் சங்கங்களும் எனது கிராமத்திலுள்ளன. இ.கி.ச. ஆதரவில் சுவாமி நடராஜானந்தா அவர்களால் மாணவியர்களுக்கான ஓர் அனுதை விடுதியும் இயங்கி வருகிறது. கமக்காரர்களும், பட்டதாரிகளும், செம்படவர்களும் மற்றும் தொழிலாளர்களும் எனது கிராமத்தில் வசிக்கிருர்கள். எனது கிராமம் கிராமச் சங்க ஆட்சிக்குட்பட்டதாகும். இதன் தலைவராகத் தமிழரசுத் தொண்டர் திரு. செல்வநாயகம் அவர்கள் கடமையாற்றுகிருர். அன்றும் இன்றும் எனது கிராம மக்கள் பண்பாடுடையவர்களாகவும் பழைய பழக்க வழக்கங்கள் மாருதவர்களாகவும் திகழ்ந்து வருகிருர்கள்.

# சுப்பிரமணிய பாரதியார்

—எஸ். டி. ராஜன்—

பள்ளிக்குச் செல்லும் பிள்ளைப் பருவத்திலேயே பாரதியார் பாடல்களை இயற்றி மக்களிடம் மதிப்பை பெற்ருர். இளம் வயதிலேயே கவிகள் இயற்றும் திறமையினுல் "பாரதியார்" என்னும் பட்டத்தையும் சுவீகரித்துக் கொண்டார்.

பாரத மாதாவின் மடியில் தவழ்ந்து விளையாடிய பாரதியார், இவ்வுலகத்தை விட்டு நீங்கும் வரையும், பாரத தேசத்தின் நலனுக்காக வாழ்நாள் முழுவதும் உழைத்தார்.

உலகில் நடக்கும் உண்மைச் சம்பவங்களையும் உள்ளக் குமுறலையும், விடுதலைப் போராட்டங்களையும், தேசிய கீதங்களையும் கற்பனைத் திறனுல் கவிதைகளாக்கித் தமிழ் மக்களின் மத்தியில் நடமாடவிட்டார்.

சுப்பிரமணிய பாரதியர் பாடிய பாடல்களில் உயிரோட்டம் இருக்கும்; அவரது கவிதைகளை நாம் படிக்கும் போது உள்ளத்தில் உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தோடும்.

வறுமையில் வாடிவளர்ந்த பாரதியாருக்கு ஆடம்பரச் செலவொன்றும் பிடிக்காது. ஏழை மக்களும்,பாட்டாளித் தோழர்களும் துன்பக்கடலில் அமிழ்ந்தக்கூடாது என்பது பாரதியாரின் பேரவா. பாரதியாரின் இக்கொள்கையினுலே அவர் எத்தனையோ நாட்கள் உணவில்லாது வாடியிருக்கின்ருர்; கிழிந்த உடைகளுடனே நடமாடியிருக்கின்ருர்.

பாரதியார் ஏழையின் கோலத்தில் நடமாடினுலும் அவர் முகத்தில் எந்நேரமும் புன்னகை தவழும்.

பாரதியார் ஒரு தீர்க்கதரிசி.........

காரணம்?

அவர் கூறியவையெல்லாம் படிப்படியாக நடந்து வருகின்றன.

அன்று பாரதியார், பாரத தேச விடுதலைப் போராட்டங்களின் போது பாடிய பாடல்கள் இன்று பல அறிஞர்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப் படுகின்றன.

சொந்த நாட்டிலே வந்தவர்கட்கு அடிமையாக நின்று ஏவற் பணி புரியும் பாரத மக்களுக்கு சுதந்திர உணர்வைக் கவிதை மூலம் ஊட்டினுர்.

இந்திய நாட்டு விடுதலைக் காகப் பல இன்னல்களை அனுபவித்தார் பாரதியார். பல பத்திரிகைகளில் நாட்டு விடுதலைக்காகப் பல கவிதைகளை இயற்றிப் பிரசுரித்தார்.

இவரது உணர்ச்சி மிகுந்த கவிதைகளைப் படித்த வெள்ளையர் இவரைச் சிறையில் அடைத்தனர். பாரதியார் இன்முகத்துடன் சிறைவாசம் அனுபவித்தார்.


சிறைவாசம் முடிந்தவுடன் மீண்டும் நாட்டு விடுதலைக்காக உழைக்கத் தொடங்கினுர்.

கடைசியில் மதம் பிடித்த யானையொன்ருல் பாரதியார் கொல்லப்பட்டார். அவரது பூதவுடல் அழிந்தும், புகழுடல் அழியவில்லை; அழிய மாட்டாது.

எல்லையற்ற கருவானிலே ஓர் கலைமதி போன்று,பாரதியார் பாரத தேச மக்களுக்கு வழிகாட்டினுர்.

பாரதியாருக்காக எட்டயபுரத்தில் ஓர் மணிமண்டபம் கட்டியிருக்கிருர்கள் பாரத மக்கள்.

வருடந்தோறும் பாரத மக்கள் பாரதியாருக்கு விழா வெடுக்கிருர்கள். பாரதியார் இவ்வுலகத்தில் அவதரித்த தினமாகியது 11--12--1882 ஆகும். எதிர்வரும் 11ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று நாமும் பாரதியாரை நினைவு கூர்ந்து, அவருக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவோமாக.



பாரதத்தின் பாதுகாப்புக்காகச் சிறுவர், சிறுமியர் தமது உடைமைகளையும், சேமிப்புகளையும் மனமுவந்து கொடுத்து வருகிருர்கள். அகமெதபாததிலுள்ள சிறுமி ரேகாவும் தனது காதணிகளைக் கழற்றிக் கொடுக்கும் காட்சியையே மேலே நீங்கள் காண்கிறீர்கள்.

பயத்தில் தொம்மென்று கீழே விழுந்து விட்டான் மணி! நல்ல வேளை புல்நிறைந்தஇடமாதலால் அடி அவ்வளவு பலமில்லை. மரத்தின் அடிப்பாகத்தில் மலைப்பாம்பின் வால் அறுந்து இரத்தம் ஒழுகத் தொங்கிக் கொண்டிருந்தது. மரத்தில் படர்ந்த கொடியென்று மணி எண்ணியிருந்தது... இந்தப் பாம்பேதான்!

மத யானையையும், மலைப் பாம்பையும் கண்ட அதிர்ச்சியாலோ என்னவோ, மணி வழியைத் தவற விட்டு விட்டான். கால் சென்ற போக்கில் சுற்றிச் சுற்றி நடந்தான். வழியைச் கண்டுபிடிக்கவே முடியவில்லை. கால்கள் உளைச்சலெடுக்க ஆரம்பித்து விட்டன. சூரியனும் மேல் கடலில் மெள்ள மெள்ள மறைந்துகொண்டிருந்தான். அதே நேரத்தில் மணியின் தைரியமும் மெள்ள மெள்ள மறைந்து கொண்டிருந்தது. அந்த வேளையில்...

தொலையிலிருந்த பற்றையொன்று மெள்ள அசைந்தது. அதனுள்ளிருந்து பெரியதொரு புலி பதுங்கி வந்துகொண்டிருந்தது! கண் மூடித் திறப்பதற்குள் பக்கத்திலிருந்த பென்னம்பெரிய மரத்தில் எப்படியோ தாவி ஏறிவிட்டான். சற்று நேரத்திற்கெல்லாம் புலி எதிரில் தென்பட்ட பற்றையை நோக்கி உக்கிரத்துடன் பாய்ந்தது! அந்தப் பற்றைக்குள் ஒழிந்திருந்த பயங்கரக் கரடி பாய்ந்தோடி வந்து மணியிருந்த மரத்திலே ஏறிக்கொண்டது. மணிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. உடல் மீண்டும் நடுங்க ஆரம்பித்து விட்டது.

புலி, மணியும் பயங்கரக் கரடியும் ஏறியிருந்த மரத்தை நோக்கிப் பல முறை பாய்ந்தது. எட்டவில்லை. வாயைப் பிளந்தவாறு உறுமிக் கொண்டே மரத்தின் கீழ் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தது.

சற்று நேரத்திற்கெல்லாம் கரடி மணியை நெருங்கி உட்கார்ந்து கொண்டது. மணியின் இடையிலிருந்த சுழல் துப்பாக்கியைக் கீழே தட்டிவிட்டது. மணிக்குத் திடீரென்று எப்படியோ ஒரு முரட்டுத் தைரியம் ஏற்பட்டது. அடுத்த கணம்! கரடியை எட்டிப் பலமாக உதைத்தான். திடீர்த் தாக்குதலைச் சற்றும் எதிர்பார்த்திராத பயங்கரக்கரடி, பயங்கரமாகக் கூச்சலிட்டவாறு தொப்பென்று நிலத்தில் விழுந்து புரண்டது.

(தொடரும்)

## 2 இருதயம் உள்ள நாய்


ரஷ்யாவில் உள்ள "கிரிஷ்கா" என்ற ஆண் நாய்க்கு இரண்டு இருதயங்களும் 3 சுவாசப் பைகளும் இருக்கின்றன.

அந்த நாய்க்கு ஒரு ரஷ்ய டாக்டரும் ஒரு அமெரிக்க டாக்டரும் சத்திர சிகிச்சை செய்தார்கள். அப்போது அந்த நாய்க்கு அதிகப்படியாக ஒரு இருதயத்தையும் சுவாசப் பையையும் பொருத்திஞர்கள்.

அந்த நாய் இன்னும் உயிரோடு இருக்கிறது. முன்னைவிட "கொழு கொழு" என்று வளர்ந்திருக்கிறது.

மனிதர்களுக்கு அதிகப்படியாக இருதயம் பொருத்துவதற்கு முதற்படியாகவே நாய்க்கு இருதயத்தைப் பொருத்திச் சோதனை நடத்தி இருக்கிருர்கள்.

## உங்களுக்குத்.... ....தெரியுமா?







இமயமலை பனிக்கட்டியினுள் காணப்படும் சிறு ஜந்தானது சாதாரணமாக நீரிலே வாழ்வதாகும். ஆனுல் 200 சமபத பாகையுள்ள ஆற்றங்கரையோரத்தில் கூட எவ்விதத்திலும் பாதிக்கப் படாமல் இது வாழ்ந்திருக்கிறது. பனிக் கட்டிகளுள்ளும் உயிருடன் வாழும் தன்மை வாய்ந்தது.

இன்று மேற்கு நாடுகள் பல, பலவிதமான வான வெளி 'ரொக்கெட்டு'களைக் கண்டு பிடித்து வருகின்றன. 'ரொக்கட்' உற்பத்தி செய்வதில் முன்னணியில் நிற்கும் [illegible] வான வெளிக்கு [illegible] 'ரொக்கட்' ஒன்றின் படத்தையே மேலே காண்கிறீர்கள்.

டாக்டர் வின்சன்ற் பிரைஸ் என்பவர், மனிதனுக்குச் சாதாரணமாக ஏற்படுகின்ற ஜலதோஷத்தைத் தீர்க்கப் புது மருந்து ஒன்றினைக் கண்டு பிடித்துள்ளார். இந்த மருந்து 80 சத வீதம், நோய் தீர்க்கும் சக்தி வாய்ந்ததெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எல்லாம் கம்பி மயம்!

பிரித்தானியாவில் தொலை பேசி சேவைக்குப் பாவிக்கப்பட்டுள்ள கம்பிகளின் மொத்த நீளம் இரண்டு கோடி அறுபது லட்சம் மைல்கள். இந்தக் கம்பிகளால் பூமியை 104 முறை சுற்ற முடியுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### கொழும்பு இந்து வாலிபர் சங்க வருடாந்தக் கூட்டம்

சைவமும், தமிழும், இந்து கலாசாரமும் இந்த நாட்டில் வளர்ச்சியடைவதற்கு பணிபுரிய நாடெங்குமுள்ள இந்து வாலிப சங்களிடை நெருங்கிய உறவும் ஐக்கியமும் நிலவக்கூடியதான ஒரு பொது அமைப்பை நிறுவுவதற்கு கொழும்பு இந்து வாலிபர் சங்கம் தொடர்ந்து துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அண்மையில் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்து வாலிபர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மேற்படி சங்கம் சமயத்துறையில் செய்து வரும் பணிகளைப் பாராட்டி சுவாமி சச்சிதானந்த யோகிகள், சுவாமி கெங்காதரநந்தா உட்படப் பல பெரியார்களும், ஸ்தாபனங்களும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தார்கள்.

உலக வாலிபர் சம்மேளனத்தில் அங்கத்துவம் வகிக்கும்படி வந்த அழைப்பை ஏற்றதெனவும், இளைஞர் இயக்கங்களிடை நல்லுறவை வளர்ப்பதற்காக கிறிஸ்தவ வாலிபர் சங்கம், முஸ்லிம் வாலிபர் சங்கம், பௌத்த வாலிபர் சங்கம் ஆகியவற்றுடன், இந்து வாலிபர் சங்கமும் இணைந்து செயலாற்றுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

புத்தாண்டு நிர்வாகிகளாகக் கீழ்க் கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: எம். சிவசிதம்பரம் எம். பி: (உடுப்பிட்டி), உபதலைவர்கள்: திருவாளர்கள்: முத்து, மு. கு. இரத்தினகோபால், சேதுநாதன், பொதுச் செயலாளர்: சி. கதிரவேலு, இணைச்செயலாளர்கள்: தருமலிங்கம், அ. கெங்காதரன், பொருளாளர்: க. வீரகத்தி, உதவிப்பொருளாளர்: சி. பாலசுந்தரம், ஆசிரியர், 'இந்து இளைஞன்' என். சோமகாந்தன், நூலகப் பொறுப்பாளர்: ம. நமசிவாயம், உதவிப் பொறுப்பாளர்: ச. திருச்செல்வம், கணக்குப் பரிசோதகர்: சிவ. கந்தசாமி. செயற்குழு உறுப்பினர்கள்: ஆனந்தநடராசா, ஐ. தி. சம்பந்தன், ந. சிவரத்தினம், ஈஸ்வர சந்திரன், கு. நமசிவாயம், கே. தம்பிராசா, எஸ். பாலசிங்கம், எஸ். பத்மநாதன்.

——

### நான்காவது ஆண்டு விழா

கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்க நான்காவது ஆண்டு விழா 24-11-1962ல் கை. கி. சனசமூக நிலையத்தில் சங்கத் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர் தேர்வில் தலைவராக திரு. த. சுப்பிரமணியம் அவர்களையும், உபதலைவராக திரு. க. ச. சுப்பிரமணியம் அவர்களையும், பொதுச்செயலாளராக செல்வன் ஆ. கந்தையா அவர்களையும், இணைச்செயலாளராக செல்வர்கள் சி. சுப்பிரமணியம், சே. செல்லத்துரை ஆகியோரையும், பொருளாளராக செல்வன் சி. சுப்பிரமணியம் அவர்களையும், உதவிப்பொருளாளராக செல்வன் செ. வேலாயுதத்தையும், நூலகப் பொறுப்பாளராக செல்வர்கள் சி. பொன்னம்பலம், அ. சிற்றம்பலம் ஆகியோரையும், கணக்குப் பரிசோதகராகவும் போஷகராகவும் உயர்திரு ஆ. பொன்னையா அவர்களையும் ஏகமனதாக எவ்வித போட்டியுமின்றி சங்கம் தெரிவு செய்தது. செயற்குழு உறுப்பினர்களாக முறையே செல்வர்கள் செ. கந்தசாமி, தி. இராஜகுலவீரசிங்கம், அ. சிவசுப்பிரமணியம், வே. விஸ்வநாதன், அ. சுந்தசாமி, தி. திசைராசசிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. மார்கழித் திங்கள் திருவெம்பாவையின் போது கிராமம் தோறும் பஜனை பாடி கைதடி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயிலுக்கு செல்லல்.

2. அங்கத்தவர்களையும் அனுதாபிகளையும் இந்துமத தத்துவங்களையறிய உதவுதற்கு ஆய்வு குழுக்களை அமைத்தல்.

3. கைதடி ஸ்ரீவீரகத்திப் பிள்ளையார் கோவிலில் நடைபெறும் சைவசமய வெள்ளி பாடசாலைக்கு இயன்றளவில் உதவி செய்தல்.

4. இலங்கையிலுள்ள இந்து இளைஞர் சங்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து ஒரு சமாசம் அமைத்தல்.

பின் போஷகர் ஆ. பொன்னையா 'சமயவாழ்வின் மகிமை' என்னும் பொருள் பற்றியும் பண்டிதர் திரு. எம். எஸ். இராசையா 'இந்து மதம்' என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவாற்றிய பின்னர் 'நக்கீரர்' என்னும் நாடகத்தை பலர் சேர்ந்து நடித்துக் காட்டினர்.

——

### பாரதத்திற்கு ஆதரவு

#### திருக்குறள் நாடக மன்றத் தீர்மானம்

16—11—62ம் நாள் முடிவெய்திய திருக்குறள் நாடக மன்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. உலக அமைதிக்குப் பங்கம் ஏற்படும் வகையில், நிகழ்ந்த 'கியூபா' பிரச்சினையில், அங்கு நிறுவப்பட்ட ஏவாயுத தளங்களை வாபஸ் பெற்று, உலக சமாதானத்துக்காக முயன்ற ருஷியாவின் நற்செயலைப் பாராட்டுகிறோம்.

2. ஆண்டாண்டு காலமாக நண்பர்களாக இருந்த இந்தியாவும், சீனாவும் பகைமை கொண்டமைக்கு வருந்துவதோடு, நடுவழி நின்று உலக சமாதானத்திற்காக அரும்பாடுபட்டு உழைத்து வரும் இந்தியா மீது, பலாத்கார முறையில் எல்லைப் பிரச்சினையைச்சாட்டாக வைத்து இந்தியாமீது ஆக்கிரமிப்பு நடத்திவரும், சீனாவின் வன்செயலைக் கண்டிப்பதோடு, இந்தியா எடுத்துள்ள நடவடிக்கைகளையும் பூரணமாகப் பாராட்டி வரவேற்கிறோம்.

3. இந்திய கலாசார பண்புகளை எடுத்துக்காட்டும் சிற்பக்கலை, சித்திரம் சம்பந்தமான 'காம—கலா' என்ற நூலின் அருமை பெருமை தெரியாமல், அதைத் தடை செய்யவும் எரித்துவிடவும் தீர்மானித்த இலங்கை சுங்க இலாகா அதிகாரிகளினது அறிவின்மைக்காகவருந்துவதோடு, அச்செயலைக் கைவிடும்படி, மேற்படி அதிகாரிகளைக்கேட்டுக்கொள்கிறோம்.

——

### கமால் இல்லம் முதலிடம் பெற்றது

சென்ற 10-11-62ம் தேதி பறகஹதெனி முஸ்லிம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்லங்களுக்கான விளையாட்டுப்போட்டியை அத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. டி. பி. விக்ரமசிங்கா ஆரம்பித்து வைத்தார். விளையாட்டுப்போட்டியை ஆயிரக் கணக்கான மக்களும் பள்ளிச்சிறுர்களும் கண்டு களித்தனர்.

விளையாட்டுப் போட்டியின் முடிவில் கமால் இல்லம் முதலிடத்தையும் ஜின்னு இல்லம் இரண்டாவது இடத்தையும் இக்பால் இல்லம் மூன்ருவது இடத்தையும் பெற்றன. பள்ளி மாணுக்கர்களின் ஊற்சாகத்தைப் பற்றி தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் மற்றும் சிலரும் எடுத்துரைத்தனர்.

## மதமாற்றத்தைத் தொடர்ந்து.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளேம். சமத்துவக் கொள்கைகளுக்குப் புறம்பான கோட்பாடுகள் எங்கு தோன்றினலும், அவைகளுக்குச் சாவோலை திட்டுங்கள் என்று தயங்காது இயம்புகிறேம். சமூகத்தில் பழமையின் பெயரால் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டு மரணப் படுக்கையில் இறுதி மூச்சு வாங்கிக் கொண்டு கிடக்கும் சில கோணல்மாணல்களைச் சாடுவதற்கு மதமாற்றம் அவசியந்தானு? மதமாற்றம் என்ற அதிர்ச்சி வைத்தியம் சிறுபான்மைத் தமிழர் என்று கூறிக்கொண்டிருப்பவர்களுக்குப் புதுவாழ்வை அளித்து விடுமா? இதன் மூலம் சாதிக் கொடுமைகள் மறைந்து, சமத்துவப்பாதை திறக்கப்படுமா? மதமாற்றம் செய்து கொண்ட அன்புச் சகோதரர்கள் சிந்தனைக்குச் சிறிது வேலை கொடுத்து ஆராய்ந்து பார்க்கட்டும்!

#### எச்சரிக்கை

புத்த மதத்தை [illegible] சாங்க மதமாக்க வேண்டுமென்று ஒரு சில வெறியர்கள் கூச்சல் போடும் இந்தச் சந்தர்ப்பத்தில், தமிழ் பேசும் மக்களில் சிலர் புத்த மதத்தைத் தழுவுவதானது தமிழ் பேசும் இனத்தையே காட்டிக் கொடுக்கும் துரோகச் செயலாகும். 'புத்தம் சரணம் கச்சாமி' என்று கூறினல் மட்டும் புதுவாழ்வு மலர்ந்து விடாது, புன்மைகள் மறைந்து விடாது என்று மதமாற்றம் செய்து கொண்ட அன்பர்களுக்குக் கூறுகிறேன். சென்னியப்பன் சேனநாயக்காவாகவும், பழனியாண்டி பண்டாரநாயக்காவாகவும், செல்லம்மா சிறிமா வோவாகவும், பொன்னம்மா பொடிநோனுவாகவும் மாறுவது தமிழ் பேசும் இனத்தைச் சிதைக்கப் பயன்படுமே யல்லாது, இவ்விதம் மதம் மாறியவர்களின் வாழ்க்கையில் சிறப்பைத் தேடித் தந்து விட முடியாது. மதமாற்றத்தைத் தொடர்ந்து நடக்கவிருப்பது இனமாற்றமே யாகும் என்று நாம் திடமாகக் கூறமுடியும். இந்த நிலை ஏற்படுவதற்கு முன்பு தமிழ் பேசும் சமுதாயம் விழித்தெழட்டும்!

## கலங்காத கண்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

களையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு ஓடினன்.

காசிம் "காதர்க் காக்கா" விடம் எதுவுஞ் சொல்லிக் கொள்ளாமல், கால்கள் போன போக்கில் விறுவிறு என நடந்தான்.

மனைகரா படமாளிகை வீதியில் அவன் இறங்கிநடந்ததும், அப்துல்காதர் அறைக் கதவைச் சாத்திக் கொண்டார்.

ஒரு நிமிடம் சென்றிருக்க முடியாது!

"டுமீல்! டுமீல்!!"

என்ற வெடிச் சத்தம் வானில் முட்டி அதிர்ந்தது. அப்துல் காதரின் காதுகள் வெடித்துவிடாத குறை......

அதனைத் தொடர்ந்து, "ஐ...ய்...யோ!... அ...ம்... மா......" என்று காசிம் அழகு தமிழிலே அழைத்த அந்த இறுதி வார்த்தைகளும் அவருடைய காதுகளைக் குத்தி அழிந்தன.

ஏதோ கொலை செய்துவிட்டவர் போல அப்துல் காதர் நடுங்கினர்.

அறைக் கதவைத் திறப்பதற்காகத் திறவு கோலைப்பற்றிய அவருடைய கை தானகவே மறுத்து நின்றது. சந்தியில்...... இராணுவத்தினரின் வண்டி பறந்து கொண்டு சென்றது.

காசிம் கதறிக் கதறிச் செத்துக் கொண்டிருந்தான். தெய்வ நம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட அறப் போருக்குத் துணை நின்ற அந்தத் தமிழ் உடலைத் துப்பாக்கிக் குண்டுகள் துளை போட்டிருந்தன.

'அங்கிருந்த பெண் பிரசுகள் என்ன ஆனுர்களோ? ...வயோதிபர்கள்... குழந்தைகள் ... ஐ...ய்...யோ!'

ஒரு குமட்டல். காசிமின் கண்கள் இமைக்குள் மறையத் துடிதுடித்தன.

"ஆமியள் வந்து அன்னை ஒரு கை பாத்தப்புறம் எல்லாந் தெரிஞ்சிக்கத்தாம் போறே!..." என்ற அப்துல் காதரின் வன்சொற்கள் அவனுடைய காதுகளில் விஷம் பாய்ச்சின.

கண்கள் ஒடுங்கிவிட்டன!

சமையற் கட்டுக்குள் நுழையும் பூனையைப்போல் சுடுகாடாக உறங்கிக்கொண்டிருந்த அந்த ஐந்து சந்தியைத் தாண்டி வந்தார் அப்துல் காதர். கண்கள் புரண்டன!

காசிம் பிணமாகக் கிடந்த காட்சியை அவரால் கண்டு களிக்க முடியவில்லை.

அந்தத் துப்பாக்கிக்குண்டுகளில் ஒன்று பட்டோ என்னவோ பக்கத்து வேலிப் பூவரச மரத்திலேயிருந்து காகம் ஒன்று கரைந்து கொண்டிருந்தது. சாதாரண கரைவா அது? கதறல்!...... பிரிவைக்கண்டு துடிக்கும் உள்ளத்தின் குமுறல்...

அப்துல் காதர் திரும்பிப் பார்த்தார்! வேலியின் ஓரத்திலே வேருெரு காகஞ் செத்துக்கிடந்தது.

ஏடு எடுத்தும் படியாமல் கேள்வியால் அறியாமல்... ஏதோ நீதிகளையெல்லாம் புகட்டும் அந்த இரு காக்கையும் மாறி மாறிப்பார்த்தார் அப்துல் காதர். பின்—காசிமையும் பார்த்தார்...!

அவரையும் அறியாமல் என்றுமே கலங்காத அவருடைய குழிவிழுந்தகண்களில் இருந்து, இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துணிகள் மல்கி, காசிமின் உடல் மீது வீழ்ந்து தெறித்தன!

அந்தக் கண்ணீர்த்துளிகள் உரிமைக்காகப் போராடிய அவன் உள்ளக் குமுறலை, கொந்தளிப்பை, இனிமேல் தான் தமிழைக்காக்கத்தியாகிகள் தோன்றப் போகின்ருர்கள் என்று கூறித் தணித்தனவா?

அறத்திஞல் வீழ்ந்தவர்களின் எண்ணத்திற்குச் சாவு மணி அடித்தனவா?

அப்துல் காதருடைய கண்களிலேயிருந்து மென்மேலும் நீர் சுரந்து கொண்டிருந்தமை, எதையோ ஒன்றை உண்மையெனக் கூறியது.

(யாவும் கற்பனை)

## படையெடுக்கும்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கொம்யூனிஸ்டு சீன ஆயிரக் கணக்கான சதுர மைல் இடத்தை தன் வசமாக்கிக் கொண்டது.

சிலர் திரு. கிருஷ்ணமேனனிடம் தற்பாதுகாப்பு இலாகா ஒப்படைக்கப்பட்டதை விரும்பவில்லை. பாராளுமன்ற அங்கத்தினர் சிலர் அன்று பாராளுமன்றத்தில் கிருஷ்ணமேனனிடம் இமய மலைப் பகுதியில் கொம்யூனிஸ்டு சீன ஆக்கிரமிப்பது பற்றி கேட்ட பொழுது, "ஆக்கிரமிப்பு என்ருல் என்ன? இந்த வார்த்தைக்கு ஐ. நா. சபை கூட திருப்திகரமான விளக்கம் கண்டுபிடிக்கவில்லையே" என்று கூறி மழுப்பினர்.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரேமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரேமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணத் தவறாதீர்கள்!

மருதானை
சென்ட்ரலில்



ராஜேந்திர குமார் * மாலா சின்ஹா * நந்தா
ஆகியோர் நடித்தது
பம்பாயில் 175 நாட்களுக்கு மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்!

# தேல்-கா-பூல்

கதையாலும், இன்னிசையாலும்
இதயத்தைக் கவர்ந்திழுக்கும்
உணர்ச்சிமிக்க ஒப்பற்ற ஓவியம்

இசை:
என். டட்டா
பின்னணி:
லதா மங்கேஷ்கர்
மொகமெட் ராபி

(குளிர் சாதனம் பொருத்தப்பட்ட)
**லிபர்ட்டியில்**
(கொழும்பு)

வார நாட்களில்
தினசரி காலை 10-15க்கு
மட்டும்
காண்பிக்கப்படும்

---

# 2-வது மாதம்!

## கிங்ஸ்லி
[கொழும்பு]

## வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]

மற்றும் 12 திரைகளில்



சிவாஜி கணேசன் ★ பி. சரோஜாதேவி
ஜெமினி கணேசன் ★ சாவித்திரி

மற்றும் பலர் நடித்த

# பார்த்தால் பசிதீரும்

---

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

**பிளாஸா** (வெள்ளவத்தை) **கெப்பிட்டல்** (கொழும்பு) **ராஜ்** (நீர்கொழும்பு)
**விஜயா** (மட்டக்களப்பு) **வெம்பிளி** (கண்டி) **ஸ்ரீ கிருஷ்ணா** (திருகோணமலை)

கே. பாலாஜி,
அஞ்சலிதேவி,
பி. எஸ் வீரப்பா,
தேவிகா,
சந்தியா,
எம்.என். நம்பியார்
மற்றும் பலர் நடித்த



# நாக நந்தினி

---

# 2-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

**எல்பின்ஸ்டன்** (மருதானை) **ரெக்ஸி** (வெள்ளவத்தை) **வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
**வேல்ஸ்** (கண்டி) **கிங்ஸ்** (பதுளை) **நெல்சன்** (திருகோணமலை)
**இம்பீரியல்** (மட்டக்களப்பு) **இம்பீரியல்** (இரத்தினபுரி) **அசோகமாலா** (நீர்கொழும்பு)

எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி—அசோகன்
எம். ஆர். ராதா—வி. நாகையா—எஸ். வி. ரங்காராவ்
எஸ். ராமராவ்—புஷ்பலதா—எம். வி. ராஜம்மா
எஸ். வி. சகஸ்ரநாமம்—லட்சுமி ராஜம்
நடிக்கும்



# சாரதா

கதை வசனம்: கே. எஸ். கோபால கிருஷ்ணன் — பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன் — சங்கீதம்: கே. வி. மகாதேவன்

5 மாதங்களுக்கு மேலாகச் சென்னையில் ஓடிய படம்!
இறுதி மூச்சு வரைக்கும் கணவன் மீது மனைவி காட்டும் பரிவு!
ஒவ்வொரு தம்பதிகளும் திரும்பத் திரும்ப பாக்க வேண்டிய படம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் டிசம்பர் மாதம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.